
கல்கி

KALKI 6-8-72
45 காசு




டாடா டெக்ஸ்டைல்ஸ் வெளியீடு!
பேட்டிஸ்ட்
இலட்சோப லட்சம் ரசிக
பெருமக்களின் இதயங்களை
கொள்ளை கொள்ளும
வரலாறு காணாத படைப்பு.
'டெரீன்' / காட்டன் ஷர்ட்டிங்.
தயாரிப்பாளர்கள்:
டாடா டெக்ஸ்டைல்ஸ்
பேட்டிஸ்ட்
ULKA-TT

கல்கி



பொருளடக்கம்

பரிதாபி ஆடி. 22 — ஆகஸ்டு 6, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50



வருடந்தோறும் நம் தேசத்திற்கு ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி
மிச்சப்படுத்த வழிசெய்ய முடியும்.

ஆம், ரூ. 35 லட்சம் அன்னியச் செலாவணி செலவில் ஒரு ரிங் ரோலிங் மில் இணைக்கப் பட்டுள்ளது. அதன் பயனாக வருடந்தோறும் இறக்குமதித்தருப்பின் மூலம் ரூ. 2.5 கோடி அன்னியச் செலாவணி தேசத்திற்கு மிச்சமாகும். முழுமையாகச் செயல்படும்போது இந்த மில்லில் 6 கிலோகிராம் வரை எடையும், 90 மி.மீ. முதல் 200 மி.மீ. வரை அளவும் கொண்ட 20 லட்சம் ரிங்குகள் தயார் செய்யப்படும். இவை ஆன்டி-ஃப்ரிக்ஷன் பேரிங்குகள், ஆட்டோமொபைல் மற்றும் இதர எஞ்ஜினீயரிங் தொழில்களுக்கு இன்றியமையாதவை.

இந்தியாவில் முதல் முதலாக இணைக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை, அதற்கான உபகரணங்கள் வந்து சேர்ந்த ஆறே வாரத்திற்குள், வெளிநாட்டு நிபுணர்களின் உதவி இன்றி, சராசரி 26 வயதே கொண்ட எஞ்ஜினீயர்கள் குழுவின் உதவியால் நிறுவப்பட்டு, இயக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பலம் உறுதிமிக்க எஃகில் மட்டுமல்ல,
திறமை மிக்க ஊழியர்களிலும் உள்ளது.

[illegible]

டாடா ஸ்டீல்

கல்கி மலர் 32 இதழ் 1

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

வேலையின்மை குறைய ஒரு வழி - ஒரே வழி

நாட்டு மக்களின் ஆதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், மக்களிடையே வேலையின்மையைப் போக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று புது அமைச்சர் திரு டி.பி. தர் பதவி ஏற்ற பிறகு தமது லட்சியங்கள் குறித்துச் சுருக்கமாகச் சொல்லியுள்ளார்.

சமூக நன்மை, வறுமை ஒழிப்பு, இலவசக் கல்வி, மருத்துவ வசதி, சத்து உணவு, ஏழைகளுக்கு வீடு — இவை போன்ற பொதுக் கருத்துக்களை ஆண்டு ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டுதான் வருகிறோம். இதுவரையில் சுமார் 60,000 கோடி ரூபாய் திட்டங்களுக்காகச் செலவும் செய்திருக்கிறோம். ஆனால் ஆதாரத் தேவைகள் மக்களுக்கு இன்னும் கிடைத்தபாடில்லை.

குறைகள் எங்கே உள்ளன, செலவு செய்யும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்குக் குறிப்பிட்ட பலன்கள் ஏன் கிடைக்கவில்லை என்பதை ஆழ்ந்து ஆராய்ந்து, குறைகளைக் களைந்து தைரியமாகச் செயல்களில் இறங்கினால்தான் லட்சியங்களை அடையக்கூடும்.

திட்டங்கள் மத்திய மாநில அரசு கட்டத்தில் மட்டும் இல்லாமல் மாவட்டக் கட்டத்திலும் இருக்க வேண்டும் என்பது வரவேற்கத்தக்க அம்சமே. உற்பத்தி பரவலாக அதிகரிப்பதற்கும், வேலை வாய்ப்புக்களை உண்டாக்கித் தரவும், கீழ் மட்டங்களில் திட்டங்கள் வகுத்துக் கொள்வது நல்லதே.

உதாரணமாக, கிராமப்புற ரஸ்தாக்களை விரிவுபடுத்துவது, சிறு கைத்தொழில்களுக்கான பட்டறைகளைக் கிராமந்தோறும் அமைப்பது, விவசாயக் கருவிகளை விநியோகிப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும் வகை செய்வது, விளை பொருள்களைச் சேமித்து வைக்கக் குதிர்கள் கிடங்குகள் கட்டுவது, ஏரி குளங்களைச் செப்பனிடுவது, சந்தைகளைச் செவ்வனே அமைத்து இயங்கச் செய்வது, கால்நடை பராமரிப்புக்கான ஏற்பாடுகளைக் கிராமந்தோறும் செய்வது,—இவை போன்ற சாமானிய காரியங்களைப் பெருவாரியாக, பரவலாக, நாடு முழுவதிலும் செய்தால், குறைந்த செலவில் அதிகமான பலனைப் பெறலாம்.

ராஜாஜி அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வருவது இதைத்தான். இத்தகைய திட்டங்களினால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமாகக் குறைய வாய்ப்பு உண்டு.


மேலே குறிப்பிட்ட இனங்களுக்கு அதிக செலவு பிடிக்காது. அந்நியச் செலாவணியோ, அயல்நாட்டு நிபுணர்களின் கூட்டுறவோ, ஒத்துழைப்போ தேவைப்படாது. லட்சக்கணக்கான கிராமப்புற மக்களைக் கொண்டே, அவர்களுடைய திறமையையும் உழைப்பையும் பயன்படுத்தியே, கிராமப்புறங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்துகொள்வது சாத்தியமே.

இதன் மூலம் கிராமப்புறங்களில் வசிக்கிறவர்களுக்கு இரண்டுவிதங்களில் நன்மை. ஓய்வுநேரம் மிகுதியாக உள்ளவர்களாதலால், அவர்களுடைய மிகக் குறைந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. அதைவிட முக்கியமானது, முன்னேற்றத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம் என்ற உணர்ச்சி அவர்களிடம் பெருகும்.

திட்டங்கள் எல்லாம் நகரங்களுடனேயே நின்றுவிடுகின்றன என்ற கிராமப்புற மக்களின் அபிப்பிராயத்தை மாற்றுவது மிக முக்கியம். கீழ் மட்டங்களில் திட்டமிடுவது இதற்கு உதவும்.


திட்ட இனங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்துவிட்டாலோ, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைச் செலவழித்தாகி விட்டது என்று திருப்திப்படுவதாலோ இலக்குகளை அடைந்து விட்டதாகக் கொள்ள முடியாது. திட்டத்தை அமல்படுத்தச் செயல்முறைகளை வகுத்துக் கொள்வதிலேயே வெற்றியின் ரகசியம் அடங்கியுள்ளது.

புதிய திட்ட அமைச்சரின் செயல் திறத்தினால் இனி வரும் திட்டங்களாவது மக்களுக்கு நற்பயனளிக்கும் என்று நம்புவோமாக!




சென்னையில் சிம்ஸன் தொழிற்கூடங்களும், கால்நடை மருத்துவக் கல்லூரியும் செயல்படாமல் இருப்பதற்குத் தி. மு. க.வின் அணுகுமுறைதான் காரணம் என்று கூறப்படுகிறது.






தமிழ் நாட்டில் சில நாட்களாகப் பகலில் வெய்யில் கொடுமையும்
இரவில் கொசுத் தொல்லையும் அதிகரித்திருக்கின்றன.



புதிய மந்திரிகள்

மத்திய சர்க்காரில் மந்திரிகளாக நியமனம் பெற்றுள்ள ஸ்ரீ டி. ஏ. பை அவர்களுக்கும் ஸ்ரீ டி. பி. தர் அவர்களுக்கும் நமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

வெகு நாட்களாகவே மத்திய மந்திரி சபையில் பல மாறுதல்கள் நிகழப் போகின்றன என்ற பேச்சு பரவலாக இருந்து வந்தது. பை, தர் இருவரும் மந்திரி சபையில் இடம் பெறுவது உறுதி என்றும் சொல்லப்பட்டு வந்தது. ஸ்ரீ டி. ஏ. பை பொருளாதாரத் துறையிலும் வங்கித்துறையிலும் பெற்றுள்ள அனுபவம் காரணமாக நிதி மந்திரியாகவும், ஸ்ரீ தர் வெளிவிவகார மந்திரியாகவும் நியமிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முற்றும் எதிர்பாராத இலாகாக்கள் அவர்களுக்குக் கிடைத்தன.



ஸ்ரீ டி. ஏ. பை



ஸ்ரீ டி. பி. தர்

ஸ்ரீ டி. ஏ. பை அவர்கள் வங்கித் தொழிலில் பல வெற்றிகரமான புதுத் திட்டங்களைப் புகுத்தி அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் அனைவரின் வியப்புக்கும் பாராட்டுக்கும் பாத்திரமானவர். அவரது நிர்வாகத் திறனை அறிந்து மத்திய அரசாங்கம் அவரைச் சில காலம் உணவு கார்ப்பொரேஷன் தலைவராக நியமித்தது. பின்னர் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் தலைவராகவும் நியமித்தது. அவர் எப்பதவிவகித்தாலும் அத்துறையில் பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்ததோடு நிர்வாகத்துக்கும் ஊழியர்களுக்குமிடையே நல்ல உறவை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்று வந்தார். இப்போது அவர் ரயில்வே மந்திரியாக நியமனம் பெற்றிருக்கிறார். இவர் பதவிக் காலத்தில் ரயில்வே நிர்வாகத்தில் பல பயனுள்ள முன்னேற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீ டி. பி. தர் அவர்கள் காஷ்மீரத்தைச் சேர்ந்தவர். பிரதமர் இந்திரா காந்தியின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இவர் முயற்சியின் விளைவாகத்தான் இந்திய — ருஷ்ய நேச உடன்படிக்கை ஏற்பட்டது. இவரது முயற்சியின் பயனாகத்தான் சமீபத்தில் சிம்லா மகாநாடும் வெற்றிகரமாக முடிந்தது. இவர் திட்ட மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்:

தமிழ் நாட்டிலே

—தீரன்—

யாரும் கவிழ்க்க மாட்டார்கள்

இந்த ஜூலை மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து இன்றுவரை ஏழு தமிழ்நாட்டு அமைச்சர்கள் எத்தனையோ ஊர்களில் எத்தனையோ பிரசங்கங்களில் திரும்பத் திரும்ப, ''கழக அரசை யாரேனும் கவிழ்க்க நினைப் பார்களேயானால்....?'' என்கிற பாணியில் பேசியிருக்கிறார்கள். இது பயமா, பயமுறுத்



தலா என்பது புரியாமல் பொதுமக்கள் திகைக்கிறார்கள். 'தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் யாருக்கு இருந்தாலும் தமக்கு இல்லை என்றும், அவர்கள் தங்கள் செய்கைகளால் தாங்களே கவிழ்வார்கள் அல்லது மக்கள் கவிழ்ப்பார்கள்' என்றும் திரு காமராஜ் இட்டவட்டமாகக் கூறிவிட்டார். மத்திய அரசின் ஆளும் கட்சிப் பிரமுகர்களும் அவ்வப்போது இவ்வாறே தங்களுக்கும் 'கவிழ்க்கும் உத்தேசம் இல்லை' என்பதை அடிக்கடி கூறிவருகிறார்கள். நிலைமை இப்படி இருந்து வரும்போது தன்னம்பிக்கை அற்றுப் போய்விட்ட காரணத்தாலோ இனி அதிக நாள் இதே அளவு ஜாலங்களோடு மக்களை ஏமாற்றி ஆள முடியாது என்ற பயத்தினாலோ வாயிலும் உதடுகளிலும் பொய் ரத்தத்தைக் காட்டி மக்களின் அநுதாபத்தைப் பெருகச் செய்து காசு கேட்கும் குறக்குளி சாகஸ வித்தைக்காரர்களைப் போல், ''இந்த அரசு கவிழுமேயானால்...?'' என்கிற விதத்தில் பேசி வருவது வேடிக்கையாயிருக்கிறது. மக்களின் அநுதாபம் என்பது மிகவும் நாசூக்கான அம்சம். அதை அடிக்கடி எதன் மூலமாவது பெற முயல்வது என்றுமே அதைப் பெற முடியாத எல்லையில் கொண்டு போய் விட்டுவிடும். இருக்கிற துன்பத்துக்குத்தான் அநுதாபத்தையும் பரிவையும் தேட முடியும். இல்லாத துன்பத்துக்கு என்னதான் கரடியாகக் கத்தினாலும் யாரும் அநுதாபப்பட மாட்டார்கள் என்பதைத் தமிழக அமைச்சர்கள் புரிந்து கொள்வது நல்லது.

இடிப்பதும் உடைப்பதுமா அரசியல்?

அரசியல் கலவரங்கள் கட்சிச் சண்டைகளின்போது தேசிய நினைவுச் சின்னங்களான பொது மண்டபங்கள், தனிப்பட்டவர்கள் உடைமைகளான வீடுகள், வாசகசாலைகள் ஆகியவற்றை இடிப்பதும் உடைப்பதும் அநாகரிகமான காட்டுமிராண்டிக் காரியங்களாகும். சமீபத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின்போது ஆளும் கட்சி ஆதரவாளர்கள் பல ஊர்களில் இப்படி இடித்தல், உடைத்தல் வேலைகளில் ஈடுபட்டு நாசம் விளைவித்திருப்பதாகத் தெரிகிறது. இராஜபாளையத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட காங்கிரஸ் பொன்விழா மண்டபத்தை உடைத்துத் தகர்த்திருக்கும் செய்தியை அறியும்போது, 'ஒரு குடியரசுத் தலைவர் திறந்த மகத்தான தேசிய இயக்கச் சின்னத்துக்கு இவ்வளவு மரியாதைதானா?' என்று எண்ணி வருந்த நேரிடுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் சட்டமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்பட்டுச் சூறையாடப் பட்டிருக்கின்றன. வேறு சில ஊர்களில், லால்பகதூர் சாஸ்திரி, நேரு, பாரதி போன்றவர்கள் படங்களை உடைத்து வாசகசாலைகளாகவும் மன்றங்களாகவும் இருந்த சிறு சிறு கட்டிடங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளின் மேலுள்ள கோபத்துக்கு இந்த மன்றங்கள் பலியாகி யிருக்கின்றன. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பணியைப் போலீஸிடம் விடாமல் தம் கட்சி ஆட்களிடம் விடுவதால்தான்




தி. மு. க. ஆட்சியில் இவையெல்லாம் நடைபெறுகின்றன. இனியாவது முதலமைச்சர் சட்டம் ஒழுங்கைப் போலீஸிடம் நிர்வாக ரீதியாக விடவேண்டும்.

கஜேந்திர கட்கரின் கருத்து

சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த சட்டக் கமிஷன் தலைவர் கஜேந்திரகட்கர் காலை

இவர் :



ஒரு மதுவிலக்கு வீரர். உடுமலைப் பேட்டை ஜி. வேலப்ப நாயுடு அவர்கள் வெள்ளைக்கார நிர்வாகம் இருந்த காலத்தில் பல மதுபானக் கடைகளுக்கு ஏலங் கோருகிறவர்கள் இல்லாமல், ஏலம் நடக்காமல் செய்துவிட்டவர். இவருடைய பிரசாரத்தால் அநேக கள்ளுக் கடைகளும் சாராயக் கடைகளும் வாங்குகிறவர்கள் இல்லாதபடியால் மூடப்பட்டன.

இவர் :

இருபது ஆண்டுகளாக மூடிக் கிடந்த கள்ளு, சாராயக்கடைகளைத் திறந்து வைத்த மகான் !




மறிந்து இடமறிந்து மிகவும் பயனுள்ள சில கருத்துக்களைத் தமிழ் மக்களுக்குச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். 'சட்டத்தின் ஆட்சியும் பங்கும்' என்ற தலைப்பில் பேசும் போது.

'' ஆட்சியில் உள்ளவர்கள் பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும்போதுதான் எதிர்த்தரப்புக் கருத்துக்களுக்கும், கருத்து வேறுபாடுகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் அதிகமாக இடம் தர வேண்டும். 'வன்முறையின் மூலமாகத்தான் அரசாங்கம் தங்கள் கோரிக்கையைக் கவனிக்குமோ' என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டு விடும்படி மத்திய மாநில அரசுகள் மக்களைப் பராமுகமாக விட்டு விடக் கூடாது. நமது ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய அபாயம் பொதுஜன விழிப்பு உணர்ச்சி இன்மைதான் '' என்பது போல் பல பயனுள்ள கருத்துக்களைக் கூறியுள்ளார். சமீபத்தில் நடந்துள்ள வன்முறைகளையும், அசம்பாவிதங்களையும் காணும் போது பெரும்பான்மை பலத்தினால் எதிர்க் கட்சிக் கருத்துக்களையும், எதிர்க் கட்சிப் பத்திரிகைகளையும் புறக்கணிக்கும் மனப்பான்மையை உடைய தமிழக அரசுக்காகவே திரு கஜேந்திர கட்கர் இவற்றைக் கூறிவிட்டுப் போயிருக்கிறாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அவரது மற்றொரு கருத்தாகிய பொது ஜன விழிப்பு உணர்ச்சியைப் பற்றிய நிலைமையைத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். பொதுமக்களின் விழிப்புணர்ச்சிதான் அரசாங்கத்தின் தராதரத்தை நிறுக்கும் தராசு. தராசு சரியில்லாவிட்டால் எதையும் நிறுக்கவே முடியாது. தக்க சமயத்தில் இந்த அறிவுரைகளைத் தக்க இடத்தில் வந்து கூறிய திரு கஜேந்திர கட்கரைப் பாராட்டுகிறோம். அரசும் மக்களும் இக்கருத்துக்களைப் பன்முறை சிந்தித்துப் பயனடைய வேண்டும் என்பதே நம் ஆசை.

வருந்துகிறோம்

சென்னையில் ஒரு நர்ஸிங்ஹோமில் ஸ்ரீ வி.வி.வி.டி.வி. வேங்கடாசலம் செட்டியார் தமது 65வது வயதில் காலமானார் என்ற செய்தி திடுக்கிட வைப்பதாகும். அவர் காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் மருமகனாவார். பல தர்ம ஸ்தாபனங்கள், கல்வி நிலையங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். காரைக்குடி அழகப்பச் செட்டியாரின் கல்வி டிரஸ்ட்டுக்குத் தலைவராகப் பல காலம் பணியாற்றி வந்திருக்கிறார். அவரது மறைவு தமிழகப் பொது வாழ்வுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்கள்.





சீலம் உண்டாக வழி

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

நல்ல சீலம், நல்ல குணங்கள் வரவேண்டுமென்றால் நம் வேத சாஸ்திரங்களில் சொல்லியுள்ள காரியங்களைச் செய்ய வேண்டும். நல்ல ஆசாரங்கள் இருக்க வேண்டும். நல்ல அநுஷ்டானம் இருக்க வேண்டும். மனசு நன்றாக இருந்தால்தான் சீலம் வரும். எல்லாருக்கும் நல்ல மனசாக இருக்க முடியவில்லை. கெட்டது என்பதே மனசில் புகாதபடி நல்லதே உள்ளம் முழுவதும் நிரம்பி இருந்தால்தான் சீலம் வரும்.

எல்லாருக்கும் மனசு மிகவும் நன்றாக இருக்க முடியாது. இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் முடியவில்லை. வீட்டிலே இருக்கிற குழந்தை சதா ஏதோ விஷமம் பண்ணிக் கொண்டிருக்கிறது. கத்தரிக்கோலை எடுத்து நல்ல துணிகளை, முக்கியமான காகிதங்களை நறுக்கி விடுகிறது. செடிகளை வெட்டி விடுகிறது. இப்படித் துஷ்டத்தனம் பண்ணுகிறது. பள்ளிக்கூடத்துக்கு என்று அனுப்பி விட்டால், 'இத்தனை மணிக்குப் போக வேண்டும், இன்ன இன்ன பாடங்களை அதற்குள் எழுதிவிட வேண்டும், திரும்ப இத்தனை மணிக்குத்தான் வர முடியும், வந்தால் இதைச் செய்ய வேண்டும்' என்று அதற்கு ஒரு கட்டுப்பாடு வந்து விடுகிறது. முன்பு காணப்பட்ட விஷம குணங்கள் எங்கோ போய்விடுகின்றன. பள்ளிக்கூடம் இல்லையென்றால் மறுபடியும் கெட்ட குணங்கள் தலைகாட்டுகின்றன. அதே போல் நாம் கெட்ட எண்ணத்திலும் காரியத்திலும் ஈடுபட அவகாசம் இன்றி நல்ல காரியங்களை ஒரு விதிப் பிரகாரம், ஒழுங்கு தப்பாமல் செய்வதுதான் முக்கியம். இப்படித்தான் சாஸ்திரங்கள் நமக்கு விதிகள் போட்டிருக்கின்றன.

நல்ல சீலங்கள் உண்டாக வேண்டுமென்றால் துர்க்குணங்கள் நிவிருத்தியாக வேண்டும். 'துர்க்குணங்கள் நிவிருத்தியாக நல்ல கர்மாநுஷ்டானங்களைச் செய், பூஜை பண்ணு, வைச்வதேவம் பண்ணு, அதிதிகள் வந்தால் ரட்சி' என்று பல விஷயங்களைச் செய்யச் சொல்கிறது சாஸ்திரம். இதன்படி செய்து வந்தால் கெட்ட காரியங்களுக்கு நேரமே இல்லாமல் போய்விடும். கர்மாநுஷ்டானங்களைப் பண்ணுகிறபோதும், 'நாம் பண்ணுகிறோம்' என்ற அகம்பாவத்தோடு பண்ணக் கூடாது. பண்ணக் கூடிய சக்தியை நமக்கு ஈசுவரன் கொடுத்தான், பண்ண வேண்டும் என்ற புத்தியைக் கொடுத்தான், அதற்கு வசதியும் கொடுத்தான் என்று நினைத்து, ஈசுவரார்ப்பணமாகப் பண்ணு' என்று நமது வைதிக மதாசாரியர்கள் விதித்து வழி காட்டினார்கள்.

கண்ணாடியில் பார்க்கிறோம். அழுக்காக இருந்தால் பார்க்க முடிகிறதா? சுத்தமாகத் துடைத்து விட்டுப் பார்த்தால் நன்றாகத் தெரியும். சுத்தமாகத் துடைத்த கண்ணாடி தான் என்றாலும் ஆடிக்கொண்டிருந்தால் பிம்பம் விளங்காது. அது சுத்தமாக இருக்க வேண்டும். ஆடாமல் நிலையாகவும் இருக்க வேண்டும். சுத்தமான நிலைத்த கண்ணாடியாக இருந்தால் உண்மை பிரகாசிக்கும். சித்தம் என்பது கண்ணாடி போன்றது. பரம்பொருள் உண்மை. கெட்ட எண்ணம் தோன்றிவிட்டால் சித்தக் கண்ணாடி சுத்தமாகும். ஒன்றிலேயே அதை ஈடுபடுத்தினால் நிலைத்த கண்ணாடியாகும்.

இந்த உலகத்தை யெல்லாம் படைக்கிறவன் யார்? நமக்கெல்லாம் இவ்வளவு அன்னத்தைக் கொடுக்கிறவன் யார்? அருட்கடலாக இருப்பவன் யார்? அவனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நாம் விரும்பினால் நம்முடைய சித்தத்தை அழுக்கு இல்லாமல் ஆடாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

தாமிரச் செம்பு ஒன்றில் பத்து வருஷங்கள் கிடந்து விட்டது என்றால் அதை எத்தனை தேய்த்தாக வேண்டும்? எவ்வளவுக்கு எவ்வளவு தேய்க்கிறோமோ, அவ்வளவுக்கு அது வெளுக்கிறது; சுத்தமாகிறது. இவ்வளவு வருஷ காலம் எத்தனை கெட்ட காரியங்களைச் செய்து நம்முடைய சித்தத்தில் அழுக்கை ஏற்றிக் கொண்டு விட்டோமோ, அந்த அழுக்கைப் போக்க அத்தனை நல்ல காரியங்களைச் செய்து தேய்க்க வேண்டும். நல்ல கர்மாநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். அதனால் சித்த சுத்தி வரும். நல்ல சீலங்கள் உண்டாகும்.

பச்சை நிற கோலினஸ் குளோரோபில் வாய் துர்-நாற்றத்தை வெல்லுகிறது.

பச்சை நிற கோலினஸ் குளோரோபில் பற்பசையில் குளோரோபில் அடங்கியுள்ளது. பசும் இலைகளி-லிருந்து ஆக்கம் பெறும் குளோரோபில் இயற்கை யாகவே துர்நாற்றம் போக்கும் தன்மையுடையது.

பச்சை நிற கோலினஸ் பற்பசையால் பல் துலக்கி, அருவருப்பான வாய்நாற்றம் போக்குங்கள். அதன் புதுமையான 'மின்டி' சுவையையும் வளமான நுரையையும் நீங்கள் ரசிப்பீர்-கள். இரவிலும் காலையிலும் பச்சைநிற கோலினஸ் குளோரோபில் பற்-பசையால் பல் துலக்குங்கள்.

இந்த 'நட்பு மிக்க மூச்சு' சோதனையை நீங்களே செய்து பாருங்கள்.

உங்கள் வாய்க்கு அருகில் உள்ளங்கையைப் பிடியுங்-கள். அதன் மீது நீண்ட மூச்சு விடுங்கள். விரைவாக மூச்சை உள்ளுக்கு இழுங்-கள். பிறகு பச்சை நிற கோலினஸ் குளோரோபில் பற்பசையால் பல் துலக்குங்கள். சோதனையை மீண்டும் செய்து பாருங்கள். இப்போது உங்கள் மூச்சு தூய்மையுடன் இனிமையாக விளங்குவதைக் காண்பீர்கள்.



KC-9

பச்சை நிற கோலினஸ் குளோரோபில்

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

அலை ஓசை

அமரர் கல்கி



19. "ஹலோ! போலீஸ்!"

வாசற் கதவைத் திறந்ததும் சீதாவுக்கு மேலும் அதிசயமும் திகைப்பும் உண்டாகும் காட்சி தென்பட்டது.

வாசலருகில் அவர்கள் வீட்டுக் கார் வந்து நின்றது. அதன் முன் சீட்டில் மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவராகக் கீழே இறங்கினார்கள்.

இறங்கியவர்கள் சௌந்தரராகவனும் தாரிணியும் சூரியாவும்.

இந்த மூன்று பேரும் முன் ஸீட்டில் நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்து வந்திருக்கிறார்கள் என்னும் விஷயம் சீதாவின் மனத்தில் புகைப்படத்தைப் போல் பதிந்தது.

உடனே, காரின் பின்பகுதிக்குச் சீதாவின் கவனம் சென்றது. அதில் ஏதோ ஒரு நீள வாட்டமான மூட்டை கிடந்தது. அது மூட்டைதானா? அல்லது....?

ஏற்கனவே கலக்கம் அடைந்திருந்த சீதாவின் உள்ளம் படபடைத்தது. உடம்பு நடுங்கிற்று.

வந்தவர்களை வரவேற்க வேண்டும் என்கிற கடமை சீதாவுக்கு ஞாபகம் வந்தது. அவர்கள் வாசற்படியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களை வீதி விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் சீதா பார்த்தாள். ஏன் இவர்கள் இப்படி இருக்கிறார்கள்? எதற்காக முகங்களை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? எதையோ பறி கொடுத்தவர்களைப் போல்.... இல்லை, இழவு வீட்டுக்கு வருகிறவர்களைப் போல் வருகிறார்களே! ஏன்?

"கொஞ்சம் நகர்ந்து வழியை விடு! ஏன் வாசற்படியில் நிற்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே ராகவன் முதலில் வந்தான். அவனுடைய குரல் சீதாவுக்கு விசித்திரமாகத் தொனித்தது. அது வழக்கமான கோபக் குரல் இல்லை; அருவருப்பும் அவசரமும் கலந்த குரல். வரும்போதே எதற்காக எரிந்து விழுந்து கொண்டு வருகிறார்?

சீதா சற்று ஒதுங்கி நின்றாள். அடுத்தாற்போல் தாரிணி வந்தாள். அவளிடம் ஏதாவது பேசி வரவேற்க வேண்டும் என்று சீதா நினைத்தாள். ஆனால் அவளுடைய முகத் தோற்றம் வரவேற்பு சொல்வதற்கு உகந்ததாக இல்லை. மேலும் தாரிணி சம்பந்தமான இரண்டு எண்ணங்கள் சீதாவின் மனத்தில் அலை மோதிக் கொண்டு கிடந்தன. ஒன்று அவளுடைய தாயார் அல்லது வளர்ப்புத் தாயார் அந்த வீட்டின் பின்பக்கத்து அறையொன்றில் அப்போது இருக்கிறாள் என்பது. இரண்டாவது எண்ணம்,

காரின் முன் பகுதியில் ராகவனுக்கும் சூரியாவுக்கும் மத்தியில் வெட்கமில்லாமல் உட்கார்ந்து கொண்டு தாரிணி வந்தாள் என்பது. இத்தகைய மன நிலையில் தாரிணியை என்ன சொல்லி வரவேற்பது என்று சீதா யோசிப்பதற்குள் தாரிணி அவளைத் தாண்டி விரைவாக உள்ளே போய் விட்டாள்.

அப்புறம் சூரியா வந்தான். சீதாவுக்கு அவனிடம் பேசுவதில் தடங்கல் ஒன்றும் இருக்கவில்லை.

''அம்மாஞ்சி! இது என்ன? எல்லாரும் எங்கேயிருந்து வருகிறீர்கள்? எதற்காக இப்படி முகத்தைப் பயங்கரமாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதோ கொலை செய்துவிட்டு வருகிறவர்களைப் போல் வருகிறீர்களே?'' என்றாள்.

கொலை என்ற வார்த்தையைக் கேட்டதும் சூரியா திடுக்கிட்டுச் சீதாவை ஏறிட்டுப் பார்த்தான். அடங்கிய குரலில், ''ஒரு பயங்கரமான விஷயம், அத்தங்கா! முதலில் உள்ளே போவோம். பிறகு எல்லாம் சாவகாசமாகச் சொல்லுகிறேன்'' என்றான்.

மறுபடியும், ''நாங்கள்தான் இப்படி வந்திருக்கிறோம் என்றால் உன்னுடைய முகம் ஏன் இப்படியிருக்கிறது? உனக்கு உடம்பு ஒன்றும் இல்லையே?'' என்று கேட்டான்.

''எனக்கா? உடம்பு ஒன்றுமில்லை. ஆனால் மனசுதான் சரியாயில்லை. இவர் என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய் இத்தனை நேரம் கழித்துத் திரும்பி வந்தால் என்ன செய்கிறது? சூரியா! இத்தனை நாட்களாக நீ ஏன் இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை? இந்த மனுஷியை எங்கே கண்டுபிடித்தீர்கள்?''

''தாரிணியைக் கேட்கிறாயா, சீதா! அவள் என்னைப் பார்ப்பதற்காக என் அறைக்கு வந்திருந்தாள். அந்தச் சமயம் ராகவனும் வந்தார். தாரிணி உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாள். மூன்று பேருமாகப் புறப்பட்டு வந்தோம்.''

''மூன்று பேரும் வந்த இலட்சணத்தைத்தான் பார்த்தேனே! இவளுக்கு, தான் பெண்ணாய்ப் பிறந்தவள் என்பதே நினைவிராது போலிருக்கிறது!'' என்றாள் சீதா.

சூரியா வியப்புடன் சீதாவைப் பார்த்தான். ''அத்தங்கா! ஒரு பயங்கரமான சம்பவம் நடந்திருக்கிறது. உள்ளே வா, சாவகாசமாகச் சொல்லுகிறேன்!'' என்றான்.

சீதாவும் சூரியாவும் 'டிராயிங் ரூம்' என்று வழங்கிய வீட்டின் பிரதான அறைக்குச் சென்றபோது, அங்கே ராகவன் டெலிபோனுக்குப் பக்கத்தில் ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டு நின்றான். தாரிணி ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தாள். அவனுடன் ஏதாவது பேசலாம் என்று நினைப்பதற்குள், ''சீதா! குழந்தை என்ன செய்கிறாள்? தூங்கிப் போய்விட்டாளா?'' என்று ராகவன் பதற்றத்துடன் கேட்டான்.

இந்தச் சமயத்தில் ஆபீஸ் அறைக்குள்ளிருந்து, ''அப்பா! அப்பா!'' என்று குழந்தையின் குரல் கேட்டது.



''இத்தனை நேரம் தூங்கிக் கொண்டிருந்தாள். உங்கள் குரலைக் கேட்டு விழித்திருக்கிறாள். தூக்கத்திலேகூட அப்பா ஞாபகந்தான் குழந்தைக்கு !'' என்றாள் சீதா.

''சரி, சரி! உன் பெருமையை அப்புறம் அடித்துக் கொள்ளலாம். உடனே போய் அவளை மறுபடியும் தூங்கப் பண்ணு. அப்பா இதோ வந்துவிடுவார் என்று சொல்லு. அவள் இப்போது இங்கே வரக் கூடாது. தெரிகிறதா ? போ ! சீக்கிரம் !''

ராகவனுடைய குரலிலிருந்தும் பதற்றத்திலிருந்தும் ஏதோ ரொம்ப முக்கியமான விஷயந்தான் என்று சீதா அறிந்தாள். அவனுடைய சொற்படி ஆபீஸ் அறைக்குள் சென்றாள்.

''அப்பா வந்துத்தாரா, அம்மா !'' என்று வஸந்தி கேட்டாள்.

''வந்து விட்டார் வஸந்தி. உன் பக்கத்திலே தான் வந்து படுத்துக் கொள்வார், நீ தூங்கு!'' என்று சீதா குழந்தையின் முதுகைத் தட்டினாள்.



''அப்பா கோவமா வந்திருக்காரா, அம்மா!'' என்று குழந்தை கேட்டாள்.

அவ்வளவு மனக் குழப்பத்துக்கிடையி லும் வஸந்தியின் கேள்வி சீதாவுக்குச் சிரிப்பை உண்டாக்கிற்று.

''அதெல்லாம் ஒன்றுமில்லே, வஸந்தி! இன்னும் யாரோ வந்திருக்கிறார்கள். அவர்களுடன் பேசிக் கொண்டிருக் கிறார். நீபாட்டுக்கு நிம்மதியாகத் தூங்கு!'' என்றாள்.

ஒரு நிமிஷத்துக்குள் குழந்தை தூங்கிப் போய்விட்டாள். சீதா திரும்ப முன் அறைக்கு வந்தாள்.

ஒரு வேளை மூன்று பேரும் சாப் பிடாமல் வந்திருப்பார்களோ, என் னமோ? எல்லோருக்கும் எப்படிச் சாப் பாடு தயாரிப்பது? இந்தச் சமயம் பார்த்து வேலைக்காரன், வேலைக்காரி இரண்டு பேரும் போய்விட்டார்களே?— என்று எண்ணமிட்டுக் கொண்டு வந் தாள்.

அப்போது ராகவன் டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தான்.

''ஹலோ! போலீஸ் ஸ்டேஷன்? அங்கே யார்? நான் பி. எல். எஸ். ராகவன் பேசுகிறேன். இவ்விடத்தில் ஒரு 'ஆக்ஸிடெண்ட்'. இல்லே, கார் ஆக்ஸிடெண்ட் இல்லே. ஒரு வேளை கொலையாக இருக்கலாம் என்று... ஆமாம், 'மர்டர்' என்று சந்தேகமா யிருக்கிறது.... உடனே யாரையாவது அனுப்ப வேணும். தாங்க்ஸ்!''

டிராயிங்ரூம் வாசற்படியில் நின்றபடி சீதா இதையெல்லாம் கேட்டுக் கொண் டிருந்தாள். டெலிபோன் பேச்சு முடிந்த தும் அறைக்குள் வந்தாள். யாரும் அவ ளிடம் எதுவும் பேசுகிற வழியாகக் காணவில்லை. ஒருவரும் அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் இல்லை. கனவிலே நடக்கிறவளைப்போல் நடந்து போய்த் தாரிணியின் பக்கத்தில் உட் கார்ந்தாள். தாரிணியின் தாயார் அந்த வீட்டின் பின்கட்டில் அப்போது இருப் பது, அவள் கையில் கத்தியுடன் வந்தது, இரத்தம் தோய்ந்த கைக் குட்டையை அலம்பியது — எல்லாம் அவளுக்கு நினைவு வந்தன. ஏதாவது பேசா விட்டால் பைத்தியம் பிடித்து விடும் போலத் தோன்றியது.

'' அக்கா! இது என்ன சமாசாரம்? எதற்காகப் போலீஸைக் கூப்பிடு கிறார்?'' என்று சீதா கேட்டது கீச்சுக் குரலில் 'கிரீச்' என்று ஒலித்தது.

அப்போதும் தாரிணி ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் பிரமை பிடித்த வள் போலக் காணப்பட்டாள்.

ராகவன் குறுக்கிட்டு, ''சீதா! சற்று நேரம் வாயை மூடிக் கொண்டிரு! எல்லாம் தானே தெரியும். இந்தச் சமயம் 'ஹிஸ்டிரியா' வரவழைத்துக் கொள்ளாதே! அப்படி ஏதாவது ரகளை செய்தாயோ, நானே இன்றைக்கு ஒரு கொலை செய்தாலும் செய்துவிடுவேன்'' என்று கூறினான்.

சீதா நடுநடுங்கினாள்.

ராகவன் சூரியாவைப் பார்த்து, ''வா! சூரியா! நாம் வாசலில் போய் நிற்போம்! போலீஸ்காரர்கள் வந்து விடுவார்கள்!'' என்றான்.

20. பாரம் நீங்கிற்று

புருஷர்கள் இருவரும் வெளியேறிய வுடனே சீதா தாரிணியின் அருகில் வந்து, ''அக்கா! இது என்ன? இவர் டெலிபோனில் என்னவெல்லாமோ பயங்கரமாகப் பேசினாரே? என்ன விஷயம்? எதற்குப் போலீஸைக் கூப் பிட்டார்?'' என்று கேட்டாள்.

''ஆம், பயங்கரமான விஷயந்தான்'' என்றாள் தாரிணி.

''என்ன பயங்கரமான விஷயம்? சீக்கிரம் சொல்லுங்களேன்!''

''அதை என்னத்துக்குக் கேட்கிறாய், சீதா? நீ தெரிந்து கொள்ளாமலிருப் பதே நல்லது. உனக்குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது?''

''அவரைப் போலவே நீங்களும் பேசு கிறீர்களே? எனக்கு ஏன் தெரியக் கூடாது? உங்களுக்கெல்லாம் தெரிந் திருப்பது எனக்குத் தெரிந்தால் என்ன? நீங்கள் மறைக்கப் பார்ப்பதினாலேதான் எனக்கு மனக் கலக்கம் அதிகமாகிறது'' என்றாள் சீதா.


''நீ சொல்வது சரி. உனக்குத் தெரிந்திருக்க வேண்டியதுதான். நான் சொல்லாவிடில் உனக்குத் தெரியாமலே இருந்து விடுமா? ஆனால் அதைப் பற்றிச் சொல்வதற்கு எனக்கு அரு வருப்பா யிருக்கிறது. அதனால்தான் தயங்கினேன்.''

''அப்படியானால் வேண்டாம்! அவர் உள்ளே வரட்டும். அவரிடமே கேட்டுக் கொள்கிறேன்.''

''வேண்டாம்; நானே சொல்லிவிடு கிறேன். நாங்கள் மூன்று பேரும் காரில் வந்து கொண்டிருந்தோம். வழியில், உங்கள் வீட்டுக்கு வரும் இந்தச் சாலை பிரியும் முடுக்கில்....''

தாரிணி மறுபடியும் தயங்கினாள். அவள் உடம்பு வெடவெடவென்று நடுங்கிற்று.

''அக்கா! நீங்கள் ரொம்பத் தைரிய சாலியாயிற்றே! ஏன் இப்படிப் பயப் படுகிறீர்கள்?''



BDL 3912 A

வீசியாடும் ஊஞ்சலிலே வியப்பூட்டும் எழில் யாதோ!

எந்த நிலையிலும் சரி, அணிவதற்கு எளிதானதும், கசங்கல் ஏற்படாததுமான எங்கள் 100% 'டெரீன்' வகைகளில் உங்கள் எழில் மிளிரும். அசைந்தாடும் 'சேலீகா'—பாம்பே டையிங் அளிக்கும் விசேஷமான மடிப்புக் கலையாத 100% காட்டன் புடவை. இதன் சித்திரமடிப்புகள் உங்களுக்கு அழகூட்டும். தங்கள் 2001 'ஸ்விஸ் வாயில்கள்'—இருமையும் புதுமையும் நிறைந்தவை, எளிதில் மனநிறைவு பெறுதல் தங்களுக்குட மயக்கிவிடும்.

பாம்பே டையிங்

[illegible]

''ஆம், சீதா! எனக்குப் பயமாய்த் தானிருக்கிறது. இதற்கு முன்னால் நான் இப்படிப் பயப்பட்டதேயில்லை. பீஹார் பூகம்பத்தின் போது எவ்வளவோ சொல்ல முடியாத பயங்கரங்களையெல்லாம் பார்த்தேன். அப்போதுகூட நான் பயப்படவில்லை. இன்றைக்கு.... இதோ பார்! என் கை எப்படி நடுங்குகிறது?''

அப்போதுதான் தாரிணியின் கைகளை உற்றுப் பார்த்த சீதா, ''ஐயோ! இரத்தம் போலிருக்கிறதே!'' என்று பீதி நிறைந்த குரலில் கூறினாள்.

''சத்தம் போடாதே!.... ஆமாம்; இரத்தந்தான். பின்னே என்ன நினைத்தாய்? விரலில் 'க்யூடெக்ஸ்' பூசிக் கொண்டிருப்பதாக நினைத்தாயா? — உனக்கு அந்த மாதிரி நாகரிகமெல்லாம் இப்போது பழக்கமாகி வருகிறதென்று கேள்விப்பட்டேன்.....''

''யார் சொன்னார்கள்?''

''யார் சொன்னால் என்ன? தாமாவும் பாமாவும் சொன்னார்கள். அதற்கு என்ன இப்போது! அவர்களையாவது உன்னையாவது நான் குறை சொல்லப் போவதில்லை.''

''ரொம்ப வந்தனம். இன்றைக்கு நடந்ததைச் சொல்லுங்கள். மூன்று பேரும் காரில் வந்து கொண்டிருந்தீர்கள். அப்புறம்?''

அப்புறம் நடந்ததைத் தாரிணி தட்டுத் தடுமாறிச் சொன்னாள். அதன் விவரமாவது :—

மூன்று பேரும் காரில் வந்து கொண்டிருந்தார்கள். அந்த வீடு இருந்த சாலையின் திருப்பத்தில் ராகவன் திடீரென்று பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினான். தாரிணியும் சூரியாவும் ஒரே சமயத்தில் 'என்ன? என்ன? என்ன?' என்று கேட்டார்கள். ராகவன் பதில் சொல்லாமல் வண்டியிலிருந்து இறங்கினான். மற்ற இருவரும் இறங்கினார்கள். சாலையில் வண்டியை வழிமறித்துக் கொண்டு ஏதோ கிடந்தது. கொஞ்சம் நெருங்கிப் போய்ப் பார்த்ததும் அது ஒரு மனிதனுடைய உடல் என்று தெரிய வந்தது.

''யாரோ குடித்துவிட்டுச் சாலையில் விழுந்து கிடக்கிறான்; சனியன் பிடித்தவன்!'' என்றான் ராகவன்.

வண்டி மோதி அவனைத் தள்ளியிருக்கலாம் என்ற எண்ணம் தாரிணியின் மனத்தில் உதித்தது. பேச்சின் சுவாரசியத்தில் சாலையில் குறுக்கே போனவனைக் கவனியாமல் ராகவன் காரை விட்டிருக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள். சூரியாவுக்கும் அதே சந்தேகம் தோன்றியது.



''ஏண்டா, நான் வயத்தைக்கட்டி வாயைக்கட்டிச் சம்பாரிச்ச பணத்தை இப்படி ஊதாரித்தனமா செலவு செய்யறியே, உனக்கு அடுக்குமா?''

'' வண்டி மோதித் தள்ளிவிட்டதோ, என்னமோ?'' என்று பயந்து கொண்டே சொன்னான் சூரியா.

''நான்ஸென்ஸ்; வண்டி மோதவும் இல்லை, ஒன்றுமில்லை'' என்று ராகவன் கண்டிப்பாகக் கூறினான்.

''மோதித் தள்ளியிராவிட்டால் ஒரு வேளை படுத்திருந்தவன் மேல் ஏறியிருக்கலாம் அல்லவா? சமீபத்திலே போய்ப் பார்க்கலாம்'' என்றான் சூரியா.

''ஆமாம், பார்க்கத்தான் வேண்டும்'' என்று தாரிணியும் சொன்னாள்.

'' பேசாமல் வண்டியை ஒதுக்கி ஓட்டிக் கொண்டு போய்விடலாம். வண்டியில் ஏறுங்கள்!'' என்றான் ராகவன்.

சூரியாவும் தாரிணியும் அதைக் கேட்காமல் விழுந்து கிடந்தவனின் கிட்டப் போய்ப் பார்த்தார்கள்.

உடுத்தியிருந்த உடுப்பிலிருந்து யாரோ பெரிய மனுஷன் என்று தோன்றிற்று. சூரியா மூக்கில் விரலை வைத்துப் பார்த்துவிட்டு, ''மூச்சு வருகிறது! உயிர் இருக்கிறது!'' என்றான்.

மோட்டாரின் முன் சக்கரம் அந்த மனிதனைத் தொட்டுக் கொண்டிருந்ததைத் தாரிணி கவனித்தாள்.

மோட்டார் மோதித்தான் 'அந்த மனுஷன் மூர்ச்சையடைந்து கிடக்கிறான் என்று உறுதியாக நம்பினாள்.

''வண்டியில் ஏறுங்கள்; நாம் போகலாம்!'' என்றான் ராகவன்.

தாரிணி, ''நன்றாயிருக்கிறது! நடு ரோட்டில் ஒரு மனிதனை மோதித் தள்ளி விட்டு நாம்பாட்டுக்குப் போய்விடுகிறதா? காரில் ஏற்றிக் கொண்டு

உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேண்டும்'' என்றாள்.

சூரியாவும் அதை ஆமோதித்தான்.

''அப்படியானால் பரோபகாரிகளான நீங்களே தூக்கிக் காரின் பின் ஸீட்டில் போடுங்கள்! என்னால் முடியாது!'' என்று ராகவன் சொன்னான்.

''பேஷாக நானே தூக்குகிறேன்'' என்று சொல்லிவிட்டுத் தாரிணி தலைப் புறம் பிடித்துத் தூக்கினாள். சூரியா இடுப்பைப் பிடித்துத் தூக்கினான். தூக்கும்போது தாரிணி அந்த மனிதனுடைய கழுத்தின் அடியில் ஒரு கையைக் கொடுத்தாள். அந்தக் கை ஈரமாயிற்று. தரையிலிருந்து தூக்கியதும், விழுந்து கிடந்தவனுடைய தலைக்குக் கீழே இரத்தம் குட்டையாகத் தேங்கியிருந்தது தெரிந்தது. அப்படியும் தாரிணியின் மன உறுதி குன்றவில்லை. கை நடுக்கத்தைச் சமாளித்துக் கொண்டாள். இரண்டு பேருமாகத் தூக்கிக் கொண்டு வந்து காரின் பின் ஸீட்டில் போட்டார்கள். தரையில் இரத்தம் தேங்கி நின்றதை ராகவன் பார்த்துவிட்டு, ''இது என்ன ஆபத்து?'' என்றான். ''எல்லாம் நம்மால் வந்த ஆபத்துத்தானே? ஆஸ்பத்திரிக்கு வண்டியை விடுங்கள்!'' என்றாள் தாரிணி.

''ரொம்ப சரி; சீக்கிரம் ஏறித் தொலையுங்கள்!'' என்றான் ராகவன்.

இரண்டு பேரும் அவசரமாக முன் ஸீட்டில் ஏறிக் கொண்டார்கள்.

ராகவன் வண்டியை ஓட்டத் தொடங்கியதும், ''நீங்கள் இரண்டு பேரும் சுத்த முட்டாள்கள். உங்களை நான் தேடி வந்ததே தப்பு'' என்றான்.

''ஆமாம், தப்புத்தான்! உங்களை யார் வரச் சொன்னது?'' என்று தாரிணி கேட்டாள்.

''அதன் பலன் கைமேல் கிடைத்து விட்டது. என்னைக் கொலைக் கேஸில் மாட்டி வைத்து விட்டீர்கள். இந்த வண்டி அந்த மனிதன் மீது படவே யில்லை. அப்படிப்பட்டிருந்தால் அந்த மாதிரி ரத்தம் தேங்கியிராது. யாரோ அவனைக் குத்திப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். அநாவசியமாக இதில் என்னை மாட்டி வைத்துவிட்டீர்கள். என்னை மாத்திரம் என்ன? உங்களைக்கூடத்தான்!''

இப்படி ராகவன் சொன்னதைக் கேட்டதும் அதில் உண்மை இருக்க வேண்டும் என்று தாரிணிக்குத் தோன்றி விட்டது. தானும் சூரியாவும் செய்தது பிசகுதானோ என்று ஐயம் உண்டாயிற்று.

அப்போது சூரியா, ''மாப்பிள்ளை! நீங்கள் சொல்வது உண்மையாயிருந்தால், நமக்கு என்ன பயம்? நம் பேரில் இந்தக் கொலைக் குற்றத்தைச் சாட்ட முடியாதல்லவா?'' என்றான்.

''அது வேறே வேணுமா? கொலைக் கேஸில் சாட்சியாக இழுக்கப்படுவது போதாதா? பத்திரிகைகளிலே நம் பெயர்கள் அடிபடுவது போதாதா?'' என்றான் ராகவன்.

''போனது போகட்டும்; இப்போது என்ன செய்யலாம்? அதைப் பற்றி யோசியுங்கள்!'' என்று தாரிணி சமாதானமாகப் பேசினாள்.

''எனக்கு யோசிக்கும் சக்தியே யில்லை. நீங்கள்தான் யோசனை சொல்லுங்கள்! வண்டியை எங்கே விடட்டும்?'' என்றான் ராகவன்.

''ஆஸ்பத்திரிக்கு நேரே போகலாம்; அல்லது போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்றான் சூரியா.

அதைத் தாரிணி ஆமோதித்தாள்.

''இரண்டு இடத்துக்கும் சேர்ந்தாற் போல் போக முடியாதல்லவா? முதலில் எந்த இடத்துக்குப் போவது?'' என்று ராகவன் கேட்டான்.

இதற்குப் பதில் சொல்ல அவர்களுக்குத் தெரியவில்லை. இரண்டுபேரும் மௌனம் சாதித்தார்கள்.

''எனக்குக் கை நடுங்குகிறது. இனிமேல் வண்டி ஓட்டினால் எங்கேயாவது மரத்தில் மோதிவிடுவேன். நேரே வீட்டுக்கு வண்டியை விடுகிறேன். அங்கிருந்து டெலிபோனில் பேசிக் கொள்ளலாம்'' என்றான் ராகவன்.

தாரிணிக்கு உடனே சீதாவின் நினைவு உண்டாயிற்று. இந்த விஷயத்தை யெல்லாம் அவள் அறிந்தால் எத்தனை மனக் குழப்பம் அடைவாள்? ஏற்கனவே அவளுக்குக் கொஞ்சம் 'ஹிஸ்டிரியா' உண்டு. இதனால் அது அதிகமாகிவிட்டால் என்ன செய்கிறது? ஆகையால் ராகவனிடம் வீட்டுக்கு ஓட்ட வேண்டாம் என்று வேண்டிக் கொள்ள நினைத்தாள். அதற்குள்ளே கார் நின்றுவிட்டது. அதாவது ராகவன் வீட்டு வாசலுக்கு வண்டி வந்தாகி விட்டது.

* * *

மேற்கூறிய விவரத்தை அடங்காத ஆவலுடனும் கவலையுடனும் பயங்கர உணர்ச்சியுடனும் கேட்டுக் கொண்டிருந்த சீதா, ''அக்கா! இது என்ன விபரீதம்? இவருக்கு ஏதாவது அபாயம் நேருமோ? ஒருவேளை போலீஸார் இவரை அரஸ்டு செய்துவிடுவார்களோ?'' என்று நடுங்கிக் கொண்டு கேட்டாள்.

''பயப்படாதே, சீதா! அப்படியொன்றும் நேர்ந்துவிடாது. இந்தப்

புதுடில்லி போலீஸ்காரர்கள்கூட அவ்வளவு மூடத்தனமாக நடந்துகொள்ள மாட்டார்கள்! மேலும், உன் கணவர் பெரிய உத்தியோகஸ்தர். செல்வாக்கு அதிகம் உள்ளவர். அவரை யாரும் கைது செய்ய முடியாது. ஒரு வேளை வாக்குமூலம் கொடுப்பதற்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்வரும்படி நேரிடலாம். மற்றப்படி ஒன்றும் நேராது'' என்றாள் தாரிணி.

இதைக் கேட்டதும் சீதாவின் மனத்திலிருந்த பெரும் பாரம் நீங்கிற்று. வேறு விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க முடிந்தது. அந்த நேரத்தில் அதே வீட்டுக் கொல்லைப்புறத்துத் தட்டுமுட்டுச் சாமான் அறையில் தாரிணியின் தாயார் இருந்தாள் என்பது பளிச்சென்று நினைவுக்கு வந்தது. ஆனால் அதைப் பற்றித் தாரிணியிடம் சொல்லமுடியாதபடி தன் வாயைக் கட்டிப் போட்டிருக்கிறாளே அந்த ரஸியா பேகம்? அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறலாமா?

ரஸியா பேகம் ரத்தம் தோய்ந்த கத்தியைக் குழாயில் அலம்பிய காட்சி சீதாவின் கண் முன்னால் வந்தது. அவளுக்கும் இப்போது தாரிணி விவரித்த சம்பவத்துக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? ஏன் இருக்கக் கூடாது? அப்படியானால் தான் இருக்க இடம் கொடுத்து மறைத்து வைத்திருப்பது ஒரு கொலைகாரியையா? தான் செய்தது சரியா? இது தன் கணவருக்குத் தெரிந்தால் என்ன சொல்வார்?

சீதாவுக்குச் சட்டென்று காரின் பின் ஸீட்டில் தான் பார்த்த மூட்டை போன்ற வஸ்து ஞாபகம் வந்தது.

"அக்கா! காரில் மூட்டை மாதிரி ஒன்று கிடந்ததே? அது....?'' என்று தயங்கினாள்.

"ஆமாம், சீதா! அது மூட்டையில்லை; சாலையிலிருந்து நாங்கள் எடுத்துப் போட்ட மனிதன்! ஆனால் அதைப் பற்றியே ஏன் பேசிக் கொண்டிருக்க வேண்டும்? வேறு விஷயம் ஏதாவது பேசலாம்!'' என்றாள் தாரிணி.

மூன்று பேரும் காரின் முன் ஸீட்டில் உட்கார்ந்து வந்த காரணம் இப்போது சீதாவுக்குப் புலப்பட்டது. அதிலிருந்து வேறு விஷயத்துக்கு மனம் பாய்ந்தது.

"அக்கா! நீங்கள் மூன்று பேரும் இன்றைக்கு எப்படி ஒன்றாய்ச் சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

"சூரியாவின் அறைக்கு நான் போயிருந்தேன். சூரியாவைத் தேடிக்கொண்டு உன் கணவரும் வந்து சேர்ந்தார். எல்லோருமாக உன்னைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டு வந்தோம். வருகிற வழியிலேதான் இப்படி ஆயிற்று'' என்றாள் தாரிணி.

"சூரியாவைப் பார்க்கப் போயிருந்தீர்களா? என்னைப் பார்க்க ஒருதடவை கூட வரவில்லையே? என்னை அடியோடு மறந்து விட்டீர்களா?''



கதையை முடிப்பது எப்படி?

'கல்கி' சிறுகதைச் சிறப்பிதழில் நான் எழுதிய 'நுனி' என்கிற சிறுகதையின் முன் குறிப்பின் தூண்டுதலில் எனக்குப் பல கடிதங்கள் வந்தன. கதையின் முடிவைப் பற்றி எல்லாருமே எழுதியிருந்தார்கள். அவரவர் புரிந்து கொண்ட பாவனையில் எழுதியிருந்தார்கள். எத்தனை கடிதங்கள் வந்தனவோ, ஏறக்குறைய அத்தனை முடிவுகள். ஒரு சிலரே முடிவு புரியவில்லை என்று எழுதியிருந்தார்கள். சிலர் 'உனக்கு முடிக்கத் தெரியவில்லை; இப்படித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறாய்' என்றார்கள்.

பெரும்பாலானவர் கதையைத் தொடர்ந்து எழுதி 'அப்புறம் அந்தக் கிராமத்து மக்கள் எல்லோரும் சௌக்கியமாக இருந்தார்கள்' வரை கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இந்த முடிவுகளில் அந்த இளைஞன் செத்துப் போகிறான், செத்துப் போகவில்லை, மாடசாமி பேயாகிறான், நல்லவனாகிறான், எல்லாச் சூழ்ச்சியுமே அவன்தான் செய்கிறான் என்று பல ரகங்கள். ஒரு வாசகனின் கற்பனையில் அந்தப் பருந்துகளே இறந்து போன பன்றியையும், பெண்ணுமாக மாறுகின்றன!

கதைகளுக்கு முடிவு தேவையில்லை என்று ஒரு கட்சி இருக்கிறது. அதை நான் ஆதரிப்பதில்லை. கதைகளில், அவைகளின் முடிவுகளில் வாசகர்களையும் சம்பந்தப்படுத்துவதை, அவர்களைச் சிந்திக்க வைப்பதை நான் விரும்புகிறேன். அந்த வகையில் ஒரு கதை இது.

இந்தக் கதைக்கு அதற்கு மேல் ஒரு வரி எழுதினால்கூட அது 'ஆன்டி க்ளைமாக்ஸ்' ஆகிவிடும் என்பது என் கருத்து.

தனித் தனியாக நன்றி சொல்ல முடியாததற்கு மன்னிக்கவும். உங்கள் ஒவ்வொருவர் கடிதத்தையும் நான் ரசித்தேன்.

சுஜாதா



''நூறு வயதுக்கு மேற்பட்டவர்களைப் பற்றித் தினசரியில் அடிக்கடி படிக்கிறோமே, உங்களுக்கு....?''

''ஓ! நூறுக்கு மேலே ஆச்சு. ஆனாலும் தெம்பாயிருக்கேன். சொல்லப் போனால் மறு ஒரு பெண்ணை இந்தியைக் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு யோசிக்கிறேன்!''

''என்ன! மறு எந்த கேள்வியா!''

''ஏன்! ஒரு ஜனன்ட்ரடன் நூற்றுக்கு வயதான பெண்ணை!''

''மறக்கவில்லை, சீதா! வரலாம் என்றுதான் இருந்தேன். ஆனால் உன் கணவர் என்ன எண்ணிக் கொள்வாரோ என்று பயமாயிருந்தது. சூரியாவுக்கும் அதுதான் தயக்கம்.''

இதைக் கேட்டபோது சீதாவுக்கு எரிச்சலாயிருந்தது. இவர்கள் இரண்டு பேரும் இப்போது ஒன்றாய்ப் போய் விட்டார்கள்போலிருக்கிறது! நாம்தான் தனியாகப் போய்விட்டோம்! சூரியாவுக்கு நம்மைக் காட்டிலும் இவளிடத்தில் என்ன சிநேகம் வந்தது? — இப்படி நினைத்துச் சீதா, ''இவரிடம் எதற்காக நீங்கள் பயப்பட வேண்டும்? உங்களைக் கடித்து விழுங்கி விடுவாரா? இவர் தான் எப்போதும் உங்கள் தியானமாயிருக்கிறாரே? சூரியாவுக்கு இவ்வளவு வஞ்சனை உண்டு என்று இதுவரையில் எனக்குத் தெரியாது!'' என்றாள்.

தாரிணி சீதாவைச் சிறிது உற்றுப் பார்த்துவிட்டு, ''ஏன் இப்படிச் சொல்கிறாய்? உன் அம்மாஞ்சியைப் போல் சூது வாது இல்லாத சாதுவை நான் பார்த்ததே யில்லை!'' என்றாள்.

''ஆமாம். சூரியா சாதுவாகத்தான் இருந்தான். கொஞ்ச நாட்களாகத்தான் சூது வாது வந்திருக்கிறது. ஆக்ராவிலிருந்து திரும்பியதற்குப் பிறகு நீங்கள் இன்றைக்குத்தான் அவனை முதல் தடவை பார்த்தீர்களா?''

''இல்லை, சீதா! திரும்பி வந்தவுடனேயே சூரியாவை நான் போய்ப் பார்த்தேன். என்னை நெற்றியில் காயப்படுத்தியது பற்றி அவர் வருத்தப்பட்டுக் கடிதம் எழுதியிருந்தார் அல்லவா? அதற்குச் சமாதானம் சொல்லலாம் என்று போனேன்'' என்றாள் தாரிணி.

''அப்படித்தான் நினைத்தேன்'' என்றாள் சீதா.

''எப்படி நினைத்தாய்?''

''நீங்கள் சூரியாவைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைத்தேன். பார்த்தது மட்டுமல்ல; ராஜனிப்பூரில் நடந்ததுபற்றியும் அவனிடம் சொல்லியிருக்கிறீர்கள். அவன் எங்கள் ஊருக்குக் கடிதம் எழுதியிருக்கிறான். அக்கா! நீங்கள் ரொம்பப் படித்தவர்; எல்லாம் தெரிந்தவர்.. இருந்தாலும் இவரைப் பற்றிச் சூரியாவிடம் நீங்கள் அவ்வளவு கேவலமாகச் சொல்லியிருக்கக் கூடாது'' என்றாள் சீதா.

''ஐயோ! இது என்ன வீண் பழி? நான் என்ன உன் புருஷனைப் பற்றிக் கேவலமாகச் சொன்னேன்?''

''நான் ஏரியில் மூழ்கிக் கொண்டிருந்தபோது அவர் வேடிக்கை பார்த்துக்கொண்டு படகிலேயே இருந்தார் என்று சொன்னீர்கள். இதைக் காட்டிலும் வேறு என்ன சொல்ல வேண்டும்?''

தாரிணி சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு, ''ஆமாம்; அப்படி நான் சொன்னது மெய்தான். புருஷர்களுடைய சுயநலத்தைப் பற்றி எங்களுக்குள் விவாதம் நடந்தது. அப்போ ராஜனிப்பூரில் நடந்தது பற்றிச் சொன்னேன். அது உண்மைதானே, சீதா! உண்மையை எதற்காக மறைக்க வேண்டும்?'' என்றாள்.

''என்னுடைய கொள்கை அதுவல்ல. உண்மையாயிருந்தாலும் ஒருவருடைய குற்றத்தை ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. மூடி மறைத்துக் கொண்டுதான் போக வேண்டும்! இல்லாவிட்டால் இந்த உலகத்தில் வாழ்க்கையே நடத்த முடியாது!''

தாரிணி மிக்க வியப்புடன் சீதாவைப் பார்த்தாள். படிப்பும் உலக அநுபவமும் அதிகம் இல்லாத அந்தச் சிறு பெண் அவ்வளவு முக்கிய விஷயத்தை எப்படிக் கண்டுபிடித்துச் சொன்னாள் என்று தாரிணிக்கு அதிசயமாயிருந்தது. அதோடு, ஒருவேளை உள் அர்த்தம் வைத்துப் பேசுகிறாளா என்று ஐயமும் உண்டாயிற்று.

ஏதாவது சமாதானமாகப் பதில் சொல்ல வேண்டும் என்று தாரிணி எண்ணுவதற்குள் வாசலில் 'தட், தட், தட்' என்று மோட்டார் சைக்கிள் வரும் சத்தம் கேட்டது.

''போலீஸார் வந்து விட்டார்கள்'' என்றாள் தாரிணி.

இருவரும் மற்ற விஷயங்களை எல்லாம் மறந்து வாசலில் என்ன நடக்கப் போகிறதோ என்று கவலையுடன் சிந்திக்கத் தொடங்கினார்கள். (தொடரும்)



காட்சி 1

(காஞ்சித் தலைநகரின் அரசப் பூங்கா. இரவு நேரம். கவிஞன் தேவ பூதியும், நர்த்தகி ஊர்வசியும் இதயங்களைப் பரிமாறி எண்ணங்களுக்குக் கலையூட்டுகின்றனர்.)

தேவபூதி: ஊர்வசி! உன்னை ஒன்று கேட்கலாமா ?

ஊர்வசி: கவிஞரே! உங்களுடைய கேள்விக்கு இந்த ஊர்வசியாள் என்றுமே காது களைப் பொத்திக் கொண்டாளில்லை.

தேவபூதி: எவ்வளவு காலம்தான் நாம் இப்படி ரகசியமாகச் சந்திப்பது?

ஊர்: காதலே ரகசியமானதுதானே ?

தேவ: இதைப் பகிரங்கப்படுத்துவது ?

ஊர்: உங்கள் கையில் இருக்கிறது.

தேவ: ஊர்வசி! நிலவைப் பிடித்துத் திலகமிட்டிருக்கும் உனக்கு, இந்த நிலா மண்டபத்தை வேண்டுமானாலும், குவியல் மண்டபமாக்கித் தரச் சொல்லுகிறேன். உன் அழகுக்கும், கலைக்கும் காஞ்சிமா நகரமே காற்சிலம்பாகும். காத்திரு: காலம் வரும்.

ஊர்: அதோ அரண்மனைச் சேவகன் வருகிறான்.

சேவகன்: கவிஞர் பெருமானுக்கு வணக்கம்; பல்லவ அரசர் தங்களை உடனடியாக அழைத்து வரச் சொன்னார்.

தேவ: வருகிறேன் என்று சொல் !

சேவகன்: உத்தரவு !

(சேவகன் போகிறான்)

காட்சி 2

(காஞ்சி அரண்மனை. பல்லவ அரசர் நந்திவர்மன் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். கூடத்தில் ஒளிவிளக்குகள். கவிஞர் தேவபூதி வருகிறார்)

நந்திவர்மன்: வருக, கவிஞரே; வருக ! தீர்க்க முடியாத ஓர் அரசியல் பிரச்னை குறுக்கிட்டிருக்கிறது. உங்கள் மனைவி பானுரேகா தேவி சற்றுமுன் வந்திருந்தார்கள்.

தேவ: பானுரேகாவா! எதற்கு?

நந்தி: நீங்கள் ராஜநர்த்தகி ஊர்வசியைக் காதலிக்கிறீர்களாமே!

தேவ: தவறு ! ஊர்வசி, அரசக் கவிஞன் தேவபூதியைக் காதலிக்கிறாள்.

நந்தி: ஒருதலைக் காதலா ?

தேவ: இருதலைக் காதல்தான்; நான் குறிப்பிட்டது வரிசைக் கிரமம்; முன், பின் ! நல்லது, பானுரேகா என்ன சொன்னாள், பல்லவ வேந்தனே ?

நந்தி: மனைவி என்ற ஒருத்தியை மறந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார்கள்!

தேவ: பைத்தியக்காரி! மறக்காதிருக்க வேண்டியது அவளுடைய கடமை; அதுவே குடும்ப தருமம். இதைக் கூறத்தானா இந்த நேரத்தில் அழைத்தீர்கள்,..அரசே!

(தேவ பூதி விடைபெறுகிறான்)

காட்சி 3

(கவிஞன் தேவபூதி இல்லம். மனைவி பானுரேகா பூத்தொடுத்துக் கொண்டிருக்கிறாள். சீர் மார்ந்த கோலமும், சித்ரம் நிறைந்த நடையுமாக உள்ளே நுழைகிறான் தேவபூதி. காற்றில் விளக்குத் திரி அலைமோதுகிறது.)

தேவபூதி: பானுரேகா! நான் ஊர்வசியைக் காதலிக்கக் கூடாதா?

பானு: காதலிப்பவன் இளைஞன்! பிரபோ! படைப்பவன் தன் காதலியைக் காவியத்தில் சந்தித்தால், அவன் சிரஞ்சீவியாகிறான் !

தேவ: வாழ்க்கையில் சந்தித்தால் ?

பானு: சிரம் சிவிவிடுகிறான்! ஒன்று நானாக இருக்க வேண்டும்; இல்லை அவளாக இருக்க வேண்டும் !

தேவ: தலையைச் சீவுவதற்கா ?

பானு: சொர்க்கக் கபாடத்தைத் திறக்க !

தேவ: ஊர்வசியே சொர்க்கம்; அவளே சுகமான சங்கீதம் ! சுந்தரத் திருநடனம் !

பானு: நீங்கள் நிச்சயம் ஒரு நல்ல காவியத்தைப் படைக்க முடியாது. கட்டிய மனைவியிடம் காமுகி ஒருத்தியைப் பற்றிப் பேசுகிற லட்சணம் போதும் ! அவள் ஒரு பைசாசம்! உதிரப் பேய் ! மோகினிப் பூதம் !

தேவ (சிரித்து): பானுரேகா! நீ அவளைக் காவதம் காவதமாய்த் தொலைவில் நிறுத்திக் கேவலப்படுத்துகிறாய்! ஆனால், ஊர்வசியோ, கணத்துக்குக் கணம் உன்னை நெருங்கி வந்து, என்னை மலர்களை விரல்களால் எண்ணாமல், முகத்தருகே கொண்டு சென்று நுகராமல் சொரிந்து பூஜிக்கிறாள்! நான் அவளுடைய சுந்தரத் திருமேனியைக் கண்களால் திருடுகிற போதுகூட உன் உத்தரவு பெற்றாய்விட்டதா என்று கேட்கிறாள் ! முதலில் உன் பாதபூஜையாம்; பிறகுதான் நான் அவளுக்குக் காவிய பூஜை செய்ய வேண்டுமாம்! உன் அனுமதி கிடைக்குமா, கிடைக்காதா, சொல் !

பானு: எந்தப் பெண்ணும் தன் மூத்தாளையைச் சுட்டு முகரமாட்டாள் !

(உள்ளே போகிறாள்)



தேவ: இதுதான் உன் முடிவா? விளக்கின் அடியில் இருள் இருப்பதுபோல் எவ்வளவு உயர்ந்த பெண்ணானாலும் அவளிடம் அறியாமை இருக்கும் போலும் !

காட்சி 4

(காஞ்சி தருமாசனம் (கொலு மண்டபம்) பல்லவ அரசர் பிருந்தநாதன் முன்னிட்டு அவையில் ராஜநர்த்தகியின் நடனம்; அதுவும் கவிஞன் தேவபூதியின் பாட்டுக்கு! நிரம்பி வழியும் அவை கலைகிறது. அனைவரும் சென்றதும் ஊர்வசியும் தேவபூதியும் இதயங்களைப் பரிமாறிக் கொள்கின்றனர்.)

தேவபூதி: ஊர்வசி! நாட்டியம் பிரமாதம்! தேவலோகத்து ஊர்வசியே வந்திருந்தால் அவள் சிலையாகிவிடும் வரத்தை இந்திரனிடம் கேட்டிருப்பாள் !

ஊர்வசி: அதிகமாகப் புகழ்கிறீர்கள்.

தேவ: அப்சரஸ்களைக் கவிஞன்தான் புகழ வேண்டும் ! நீ அப்சரஸைவிடச் சிறந்தவள்! தென்றலெனும் பூங்காற்று உன் உருவில் என் முன் ஆட வந்திருக்கிறது !

ஊர்: ஏன் நிறுத்திவிட்டீர்கள்? பேசுங்கள்! சொர்க்கத்தில் காணாத புதுமை உங்கள் சுந்தரச் சொற்களில் இருக்கிறது! நிசித்திரையில் காணாத கனவுலகம் உங்கள் சொல் நிரையில் சுந்தர நடமிடுகிறது! மூக்கத்தில் காணாத தேன் சுவை, உங்கள் கவிதை முத்திரையில் இருக்கிறது! பேசுங்கள் கவிராஜா ! பேசுங்கள்! தென்றலுக்கு ஏதேனும் புதிய உவமைகளைச் சொல்லிக்கொண்டே இருங்கள்!

தேவ: ஊர்வசித் தென்றலே! நீ, இளவேனிற் புதுக் கன்னி! நிலத்தமுதி அணிந்த பாவாவி அன்னதுகில் !.

ஊர்: ஆகா ! பிறகு?

தேவ: மலருக்கு மருத்துவச்சி ! மன்மதனுக்குத் தூதுப் பெண்! காலத்தின் மஞ்சள் நீராடல்! எனக்குக் குளிர் நிலவு! என்னை வருக்கு.....

ஊர்: ஏன் நிறுத்தி விட்டீர்கள்? என்னை வருக்கு ?

தேவ: எரிதழல் ! வாழ்வளிக்கும் வசந்தமே ! உன்னை மணப்பதாக முடிவு செய்துவிட்டேன். நம் பல்லவ அரசர் பிருந்த இந்நாளில் உறுதி கூறுகிறேன்.

(ஒளிந்து ஒற்றுக் கேட்ட பல்லவ அரசர் நிலைக்கிறார்)

ஊர்: நான் தடை கூறவில்லையே ? உங்களுடைய இனிய மனையாள் — என் தமக்கை — பானுரேகா தேவியின் விடை தெரிய வேண்டும். அக்காவின் சம்மதத்தோடு அவர்கள்



பாதத்தில் பணிந்த பிறகுதான், உங்கள் மணிக் கழுத்தில் மாலையிடுவேன் !

தேவ (மெல்லச் சிரித்து): இது முடிகிற காரியமா, ஊர்வசி ? அவன் ஒரு சிந்திக்கத் தெரியாத ஊமை!

ஊர்: அப்படியானாலும் நம் உணர்வும் ஊமையாகிவிட வேண்டியதுதான்.

தேவ: அப்போது தேவபூதி பைத்தியமாகி விடுவான்! அவன் காவியம் பாடுவதற்கு மாறாகக் கற்களை விட்டெறிவான். என் காவியத்தில் நீயும், அரசனும் இடம் பெறுவதற்கு மாறாக, என் வாயில் நாய்களும் பேய்களும் இடம் பெறும்! சிந்தித்து முடிவு கூறு !

(ஊர்வசி விடையளிக்காமல் விடைபெறுகிறாள்.)

காட்சி 5

(கவிஞர் தேவபூதியின் இல்லம். பானுரேகா வழிபாட்டை முடித்துக் கொண்டிருக்கிறாள். பல்லவ அரசர் நந்திவர்மர் வருகிறார்.)

நந்திவர்மர்: தாயே!....

பானுரேகா: யார்? பல்லவ அரசப் பெருமானா.... வர வேண்டும், வர வேண்டும். அரசரின் பாதம் பட்டதும் இந்த இல்லம் பாக்கியம் பெற்றது! அமருங்கள் !

(பானுரேகா ஆசனத்தைக் காட்ட, பல்லவ அரசர் அமர்கிறார்.)

நந்தி: பாக்கியம் பெற்றவன் நான்தான் தாயே ! உலகாளும் எழுத்தாளன் எங்கே ? சின்ன நாட்டை ஆளும் இந்தச் செங்கோல் எங்கே? நான் வந்த காரியம் என்னை ஏமாற்றவில்லையென்றால், என்னைவிடப் பாக்கியசாலி யாரும் இருக்க முடியாது.

பானு: முடிந்தால் முடித்து வைக்கக் காத்திருக்கிறேன்.

நந்தி: முடியாததற்கு இந்த முடியரசன் முயற்சி செய்ய மாட்டான்.

பானு: நான் கொடுத்து வைத்தவள் !

நந்தி: நானும் கொடுத்து வைத்தவனாக விரும்புகிறேன். தாயே ! இந்நாட்டின் உயிர் நாடி உங்கள் கையில் ஊசலாடுகிறது !

பானு: நான் எளியவள் !

நந்தி: ஆனால் வலியவரை மணந்தவர் ! அம்மா! இந்த நாடு ஒரு தேவபூதியை இழக்க விரும்பவில்லை; இந்த உலகம் ஒரு மகாகாவியத்தை இழக்கச் சம்மதிக்கவில்லை.

பானு: புரிகிறது, அரசே ! நானும் என் கணவரை இழக்கச் சம்மதிக்கவில்லை.

நந்தி: அப்படி யார் சொன்னார்கள்? ராஜநர்த்தகி ஊர்வசி, தங்கள் உத்தரவில்லாமல் கவிஞர் பூதியை அடைய முடியாது என்று பிடிவாதம் செய்கிறாள்! ஆகவே —

பானு: ஆகவே ?

நந்தி: தாங்கள் தங்கள் கணவரைக் காத்துச் சுமங்கலித் தன்மையுடன் வாழவேண்டுமானால், ராஜநர்த்தகி ஊர்வசியை ஏற்றுத் தான் தீர வேண்டும் ! தங்களுக்கும் தாலி முக்கியம் ! மொழிக்கும் இலக்கிய வேலி முக்கியம்.

பானு: இரண்டு தாலிகள் ஒரு வீட்டின் வேலியையே முறித்துவிடுமே !

நந்தி: மறுத்தால் வீடே இடிந்துவிடுமே! இதை எண்ணிப் பார்த்தீர்களா ?

பானு: பல்லவர் பெருமானே! தங்களுக்கு இந்த முடிவு சரியாகப்படுகிறதா ?

நந்தி: தாயே! தங்களிடம் ஓர் உண்மையை மறைவில்லாமல் சொல்ல வேண்டும். நான் ராஜநர்த்தகி ஊர்வசியை மனமார நேசிக்கிறேன்.

பானு: ஐயகோ !

நந்தி: ஒருதலைக் காமம்தான் ! ஊர்வசி யறியாள்! அறிந்தாலும் விரும்பாள் என்பதைப் பின்னர் அறிந்தேன். காரணம், ஊர்வசி, கவிஞரிடம் எல்லையில்லாக் காதல் கொண்டிருக்கிறாள்! ஆணைதான் செல்லாதா? இல்லை, ஊர்வசியைத்தான் ஆட்கொள்ள முடியாதா ? எனக்குக் காதல் முக்கியமல்ல, கவிஞர் முக்கியம் : அவர் படைக்கப் போகும் காவியம் முக்கியம் !

பானு (சிந்தித்து): என்னைச் சிந்திக்க விடுங்கள், அரசே ! ஒப்புதலைத் தெரிவிக்கிறேன்.

நந்தி: நல்ல முடிவை எதிர்பார்க்கிறேன் ! ஏனென்றால், கவிஞர் தேவபூதியில்லையேல், நந்திவர்ம பல்லவன் இல்லை; பல்லவமில்லை : காஞ்சியே இல்லை ! விடைபெறுகிறேன், தாயே!

(செல்கிறார்)

காட்சி 6

(கவிஞன் தேவபூதியின் இல்லம். பானுரேகா விளக்கேற்றிக் கொண்டிருக்கிறாள். தேவபூதி சோகத்துடன் உள்ளே நுழைகிறான்.)

பானுரேகா: சுவாமி! ஓரிரவுகூட வெளியில் தங்கியறியாத நீங்கள் இரண்டு இரவுகளாக என்னை ஏங்க வைத்துவிட்டீர்கள் !

தேவபூதி: இனி வரப் போகிற ஒவ்வொரு இரவுக்கும் நீ ஏங்கப் போகிறாயே.... இதற்கு என்ன செய்யப் போகிறாய் ?

பானு: ஏதோ குழப்பத்துடன் பேசுகிறீர்கள் ? அரண்மனையில் ஏதேனும் நடந்ததா ?

தேவ: காஞ்சியே இந்தக் கவிஞனுக்குத் தலை வணங்குகிறபோது, அரண்மனையில் என்ன நடந்துவிட முடியும் ? குழப்பம், குமுறல், கொந்தளிப்பு ஆகிய அனைத்தும் கொடியவளாகிய உன் கூடாரத்தில்தான் ! உண்மையான கற்பரசிகள் ஆயிரம் ஊர்வசிகளை ஏற்பர் ! நீ ஒருத்தியை ஏற்க மறுக்கிறாய் என்றால், அது உன் கற்பைக் காட்டவில்லை ; சுயநலத்தைக் காட்டுகிறது !

பானு: உங்கள் சித்தாந்தம் எனக்குப் புரியவில்லை. நல்ல கணவருக்கு மனைவிதான் காவியம் !

தேவ: நான் மறுக்கவில்லையே! பானு! நீ எனக்குக் காவியம்! நான் ஊர்வசிக்குக் காவியமாக இருக்கிறேன்! நீ உத்தரவு கொடுத்தால் இருவருக்குமே கவிஞனாக இருப்பேன்! நீ எனக்கு மங்கை; அவள் எனக்கு மது! நீ மனைவி ! அவள் மயக்கம்! இந்த நாட்டுக்கு ஒரு காவியம் தேவையென்றால் — அதனால் உன் புருஷன் அமரத்துவம் அடைய வேண்டுமென்றால், நீ ஊர்வசியை அழைத்து வா ! இல்லை, என்னைக் காலனிடம் ஒப்படைத்து விடு !

பானு: சுவாமீ.....!

தேவ: பானு ! ஊர்வசியோ, உன் இருமுகத்துப் புன்னகையில் ஒருமுகத்தைத் தரிசிக்க விரும்புகிறாள்! உன்னுடைய கண்களில் வீசும் கற்பொளியில் தேவபூதியின் காவியத்தைப் படிக்கக் கருதுகிறாள்! நீயோ அவளைத் துச்சமாக - தூசாக - துகிலுரித்துத் தொடரும் வேசியாக மதிக்கிறாய்; வேண்டாத நினைவுகளைத் தாண்டாமல் — தாண்ட முடியாமல் தவிக்கிறாய்! பானு! இன்றிரவே நான் ஊர்வசிக்கு முடிவு சொல்லியாக வேண்டும். என்னுடைய வாழ்வை, இன்றைய நிலவு நிர்ணயிக்கப் போகிறது !

பானு: நான் சம்மதித்து விட்டேன்; இன்றிரவே என் தங்கை ஊர்வசி இங்கு விஜயம் செய்யலாம் ! ஒன்று நினைவு வைத்துக் கொள்ளுங்கள் ! ஊர்வசி ஒரு மயக்கம்; கற்பல்ல !

(கவிஞன் தேவபூதி மகிழ்ச்சியுடன் விடை பெறுகிறான். பானுரேகா ஆழ்ந்த சிந்தனையுடன் வானத்தைப் பார்க்கிறாள்.)

காட்சி 7

(ஊர்வசியின் இல்லம். பல்லவர் நந்திவர்மர் வருகிறார். ஊர்வசி வரவேற்கிறாள்.)

ஊர்வசி: அரசப்பெருமானார் வரவேண்டும்!

நந்திவர்மன்: ஊர்வசி, நலமா ?

ஊர்: தங்கள் ஆளுகையில் எனக்கென்ன நலக்குறைவு ஏற்படப்போகிறது? அமருங்கள்.

நந்தி (அமர்ந்தவாறு) : ஊர்வசி ! தேவபூதிக்கு என்ன முடிவு சொல்லப் போகிறாய்?

ஊர்: அரசே ! என்னைப் பொறுத்தருள வேண்டும். உடையாள் விருப்பமில்லையேல் அடியாள் ஒப்புக் கொள்ளமாட்டாள். நான் வாழ்வைப் பூஜிக்கிறவள்; அனுபவிக்கிறவள் அல்லள் !

நந்தி: மிக உயர்ந்த எண்ணம் ! ஊர்வசி! எப்படியோ தேவபூதியைக் காஞ்சி இழக்க வழி செய்து விடாதே ! இதுதான் நான் உன்னிடம் யாசிக்க வந்தது ! விடைபெறுகிறேன்.

ஊர்: தங்கள் கட்டளையை மனத்தில் கொண்டு சிந்திப்பேன் ; சென்று வாருங்கள், அரசே !

(பல்லவ அரசர் நந்திவர்மன் விடைபெற்றுச் சென்றதும் கவிஞன் தேவபூதி வருகிறான்)

தேவ: ஊர்வசி ! ஊர்வசி !

(மேன்மாடம் சென்ற ஊர்வசி இறங்கி வருகிறாள்.)

ஊர் : இதோ வந்து விட்டேன்; எதற்காக இப்படி மாளிகையைச் சுற்றிச் சுற்றி உங்கள் கண்கள் வட்டமிட வேண்டும் ? ஏதோ சந்தேகம் தொக்கி நிற்பதாகத் தெரிகிறதே !

தேவ: ஊர்வசி ! உன் கண்கள் என்னை வட்டமிடுவானேன்? நாவில் சந்தேகம் என்ற சொல் குந்துவானேன் ?

ஊர்: உங்களுடைய முடிவை எதிர்பார்த்துத்தான் !

தேவ: முடிவு ? (அகம்பாவச் சிரிப்புடன்) ஊர்வசி ! நீ எனக்கு மணம் பெறாத மங்கையாக இருக்க முடியுமா ?

ஊர்: நிச்சயம் முடியாது.

வளரும் குழந்தைகளுக்கு இனிய போர்ன்விடா!



சக்தி வளரட்டும்! பள்ளியிலும் விளையாட்டிலும், இன்றும் என்றுமே, வெற்றி அவனுக்கே. ஆம்! அவன் சுவைத்துப் பருகுவது போர்ன்விடா. ஊட்டமளிக்கும் **கோகோ**, பால் மால்ட், சர்க்கரை இவை இனிதே கலந்திட்ட போர்ன்விடாவிலே அடங்கி யுள்ளது அவனுடைய ஒளிமிக்க எதிர்காலம்.



சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும் காட்பரீஸ் போர்ன்விடா!

ஹென்னுல்

மீண்டும் கிடைக்கிறது

வெகுகாலமாகவே அமோகமாக விற்பனையாகி வரும் கேசத்தை கருமையாக்கும் சாதனம். உங்கள் கேசத்தை இயற்கையான மற்றும் நிரந்தரமான கருமையுடனும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது.

உடல்நலக் குறைவினால் ஏற்படும் இளமை நரையைப்பற்றியோ, அல்லது வயோதிகத்தில் ஏற்படும் நரையைப்பற்றியோ கவலையடைய வேண்டாம். ஹென்னுல் தற்போது உங்களுக்கு மீண்டும் கிடைக்கிறது. அது உங்களது கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிப்பதுடன், பூரண ஆரோக்கியத்துடன் இளமையான தோற்றத்தை அளிக்கிறது.

கேசத்தின் அடி வேர்களுக்கு போஷாக்கு அளித்து, செழிப்பாக வளரவும், காலக்கிரமத்தில் கேசம் இயற்கையான கருமையுடன் கூடியதாக இருக்க உதவுமாறும், அனேக பொருட்கள் சேர்த்து தயாரிக்கப்படுவது ஹென்னுல்.

சாதாரணமாக கடைகளில் கிடைக்கும், கேசத்தை கருமையாக்கும் இதர சரக்குகளை போல அல்ல, ஹென்னுல். இது தனித்தன்மை வாய்ந்தது.

1. நிரந்தரமாக நரையை தடுப்பதுடன்; உங்களைப் பல வருடங்கள் இளமையான தோற்றத்துடன் விளங்கச் செய்கிறது.

2. இயற்கையான கருமையுடன் செழிப்பாக புது கேசம் வளர உதவுவதோடு, அதை வலுவடையவும் செய்கிறது.

ஹென்னுல் உபயோகிக்கும் முறை:

ஹென்னுலில் உள்ள, கேசத்துக்கு போஷாக்கு அளிக்கும் சத்துக்கள் கேசத்தின் வேர்க்கால்களில் நன்கு ஊறி, கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிக்க வேண்டி, போதிய கால அவகாசம் அளிக்க வேண்டும். மூன்று மாத காலம் போதுமானது. இந்தக் கால கெடுவில் கேசம் இயற்கையான கருமை நிறத்தை அடைகிறது. ஹென்னுல், கேசத்தை கருமையடையச் செய்வது மட்டுமல்ல, அது கேசத்திற்கு போஷாக்கும் அளிக்கிறது; கேசத்தை அழகுறச் செய்ய மிகவும் முக்கியமான சாதனம்.

ஹென்னுலை உபயோகிக்க ஆரம்பித்த ஒரு சில வாரங்களிலே ஒரு புதிய மாறுதலைக் காண்பீர்கள். இதற்கு முன்பு காணப்படாத ஒரு பளபளப்புடன் உங்களது கேசம் பிரகாசிக்கும். உங்களது நண்பர்கள் உங்களைக் கண்டு பிரமித்துப் போவார்கள். உங்கள் தன்னம்பிக்கையின் சக்தி வளர்ந்து பல மனிதர்களையும், விஷயங்களையும் நிர்வகிக்கும் திறமையைப் பெறுவீர்கள். எவ்வளவு வயது அடைந்தவராக இருப்பினும், ஹென்னுல் கைவசமிருந்தால் கவலை வேண்டாம். உங்களது தொழிலில் மற்றும் சமூகத்தில் வெற்றி வாய்ப்பு நிச்சயம்.

உங்களது கேசம் தொடர்ந்து கருமையாக இருக்க ஹென்னுலை வழக்கமாக உபயோகியுங்கள். நீங்கள் தேர்ந்து எடுக்க மூன்று ரக ஹென்னுல் உள்ளன. ஹென்னுல் (எண்ணெய்) ஹென்னுல் (பசையற்றது) ஹென்னுல் பொமேட். இந்த மூன்று ரகங்களும், யாவருக்கும் ஏற்றவாறு, வாசனை சேர்க்கப்பட்டுள்ளது. ஹென்னுல் (எண்ணெய்) வறட்சியான, மற்றும் குத்திட்ட கேசத்திற்கு விசேஷமாக ஏற்றது. நீண்டகால நரைக்கு நல்ல பலனளிக்கக் கூடியது ஹென்னுல் பொமேட்.

நல்ல பயனை அடைய தலையை சுத்தமாகக் கழுவ வேண்டும். வாரம் இருமுறை பியர்லைன் பாரிஸின் விசேஷ தயாரிப்பான ஸில்கோ ஹேர் ஷாம்பு போட்டுத் தலையை சுத்தம் செய்யுங்கள்.

இன்றே ஹென்னுல் வாங்குங்கள். வருங்காலத்தில் இளமையுடன் விளங்குவீர்கள்.

தயவுசெய்து கடிதப் போக்குவரத்தை ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளவும்

ஹென்னுல் தயாரித்து வெளியிடுபவர்கள்:

பியர்லைன் - பாரிஸ் பிரைவேட் லிமிடெட், தபால் பெட்டி எண். 493, பம்பாய்-1

Pearline - Paris Private Limited, P. O. Box 493, Bombay-1

தேவ: அப்படியென்றாலும் உன்னைப் பானு ரேகாவுக்கு ஈடாக ஆக்க என்னாலும் முடியாது.

ஊர்: நமது காதல் தூங்கட்டும் !

தேவ: தவறாகச் சொல்லிவிட்டாய். ஊர்வசி! காதல் சாகட்டும் என்று சொல் !

ஊர்: மூடுங்கள், வாயை ! நான் ஊர்வசி!

தேவ: ஆகா ! அதனால்தான் இந்திரர் வந்து போகிறாரோ?

ஊர்: இந்திரரா !

தேவ: புரியவில்லையா? இந்நாட்டின் அரசர் நந்திவர்மர்! பானுரேகா ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நீ போட்ட நிபந்தனை, இப்போதல்லவா புரிகிறது! புறப் படும்போதே பானுரேகா சொன்னாள்.....

ஊர்: என்ன சொன்னார் ?

தேவ: ஊர்வசி என்பது ஒரு மயக்கம் ; கற்பல்ல, என்று !

ஊர் (மனமிடிந்து): அப்படியா சொன்னார்கள் ! பரவாயில்லை; நீங்களே என்னைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்துவிட்ட பிறகு அவர்களைச் சொல்லி என்ன பயன்? போய் வாருங்கள் !

தேவ: நான் ஏன் வர வேண்டும் ? வர வேண்டியவர் நந்திவர்ம பல்லவர் !

(வேகமாக வெளியேறுகிறான் தேவபூதி).

ஊர் (தனக்குள்): விதியை வெல்ல யாராலும் முடியாது. நடந்ததைக் கூறி வென்றிருக்கலாம். சராசரி மனிதனுக்கு இந்தச் சந்தேகம் ஏற்படலாம்; சிந்திக்கிற கவிஞனுக்கு ஏற்படலாமா? மேலும் பானு ரேகா கூறியது ? 'ஊர்வசி ஒரு மயக்கம் ; கற்பல்ல!' எப்படி வாழ்வது ? எதைப் பற்றி நிற்பது ?

(ராஜநர்த்தகி நீண்ட பெருமூச்சு விடுகிறாள்.)

காட்சி 8

(தேவபூதியின் இல்லம். அரசர் பல்லவ நந்தி வர்மனும் பரிவாரங்களும் அமர்ந்திருக்கின்றனர். பானுரேகா கட்டிலில் கிடத்தப்பட்டிருக்கிறாள். அகிற்புகை மணந்துக் கொண்டிருக்கிறது. கவிஞன் தேவபூதி வேகமாக வருகிறான்.)

தேவபூதி (வெளியிலிருந்தே): பானு! பானு! நீ வென்று விட்டாய்! நீ வென்றுவிட் டாய்! (உள்ளே நுழைந்ததும், அரசர் முதல் அனைவரும் இருக்கக் கண்டு) அரசே ! இந்தக் கவிஞன் இல்லத்தில் தங்கள் காலடிபடலாமா?

நந்திவர்மர்: கணிகையான ராஜநர்த்தகி ஊர்வசி மாளிகையில் என் காலடி படுகிற போது, இந்தக் கோயிலுக்கு வர நான் நாணப்படுவானேன் ? இது இரண்டாம் முறை !

தேவ: இரண்டாம் முறை ?

நந்தி: ஆம்; முதல் முறை தங்கள் மனைவி யார் பானுரேகாதேவியிடம் காவியப் பிச்சை கேட்க வந்தேன்; ஊர்வசியை ஏற்று, கவிஞர் தேவபூதியைக் காக்க வேண்டினேன். ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இந்த இரண்டாம் முறை நான் விஜயம் செய்திருப்பது, பானு ரேகாதேவியாரின் சடலத்தைப் பார்வையிட!

தேவ: பானுரேகா எங்கே ?

(நந்திவர்மர் கட்டிலைக் காட்டுகிறார்.)

தேவ: பானு! என்ன காரியம் செய்து விட்டாயம்மா ! என்னை இருளில் தவிக்கவிட உனக்கு எப்படியம்மா துணிவு பிறந்தது ?

(கவிஞன் வேதனையைக் கண்டு பல்லவ அரசர் அருகே வந்து தேற்றுகிறார்.)

நந்தி: கவிஞரே! முன்னம் நான் உங்கள் பொருட்டு ஒருமுறை இங்கு வந்தபோது பானுரேகா தேவியார், இரண்டு நாளிகள் ஒரு வீட்டுக்கு வெளியாக முடியாது என்று கூறினார்கள். அப்போதே நான் சந்தேகப் பட்டேன். அதற்கேற்றாற்போலவே தற்கண்டு தற்கொலை செய்து கொண்டார்.

தேவ: அரசே! முன்னம் என்பொருட்டு வந்தீர்களா?

நந்தி: சற்றுமுன்கூட உங்கள் பொருட்டு ஊர்வசியின் இல்லத்தை இந்தக் கால்கள் மிதித்துவிட்டுத்தான் வருகின்றன. உங்களுக் காக – உங்கள் வாழ்வுக்காக ஊர்வசியிடம் மன்றாடிவிட்டுத்தான் திரும்பினேன். வழியில் கேள்விப்பட்டு ...

தேவ: ஐயோ, நான் பாவி ! முன் சிந்தை யற்ற மகாபாவி ! கவிஞனுக்கு இயற்கை மயக்கம்தான் இருக்க வேண்டும்; மது மயக்கமும், மங்கையர் மயக்கும் சிந்தனைக் கொல்லிகள் என்பதை உணராமல் போய் விட்டேன் !

நந்தி: மேலும் மேலும் அழுவதால் பானு ரேகா தேவியார் வந்துவிடப் போவதில்லை. ஈமக்கடனுக்கு ஆக வேண்டியவைகளைக் கவனி யுங்கள். நான் சென்று ஊர்வசியை அழைத்து வருகிறேன்.

காட்சி 9

(ராஜநர்த்தகி ஊர்வசியின் இல்லம். சமணத் துறவியொருவர் அமர்ந்திருக்கிறார். பல்லவ அரசர் நந்திவர்மர் வருகிறார். சமணக் கோலம் பூண்டு விட்ட ஊர்வசி வணங்கி வரவேற்கிறாள். அரசர் வியப்புடன் கவனிக்கிறார்.)

நந்திவர்மர் : ஊர்வசி! இது என்ன கோலம்?

ஊர்வசி: துறவிக் கோலம்! அரசே ! என்னைப் பொறுத்தருளுங்கள். நானே நான் கரையைக் கரை நோக்கிப் பயணமாகிறேன்.

நந்தி (அரண்டு): ஊர்வசி ! என்ன நடந் தது ? இந்த முடிவைத் தேவபூதி தாங்கிக் கொள்ளவே மாட்டார் !

ஊர் (சிரித்து): அவருடைய முடிவை நான் தாங்கிக் கொண்ட பிறகு, என் முடிவை அவர் வரவேற்று மகிழ்வார் !

நந்தி: என்ன நடந்தது?

ஊர்: நான் எதைப் பற்றியும் சொல்ல விரும்பவில்லை. மேற்கொண்டு கேட்கவும் வேண்டாம்!

நந்தி: நீ ஒரு காவியத்தையே அழித்துவிட் டாய் !


ஊர்: இல்லை, அவர் ஒரு பசும் செல்வியை அழித்துவிட்டார். அவர் என்றுமே முற்றுப் பெறாத காவியம் !


(நந்திவர்மர் மனம் கலங்கி வெளியேறுகிறார்.)

அன்பே அகிலா!

17 கதை: குமரன் : சித்திரம்: விஜயா







ஐந்தாவது அத்தியாயம்

துணைவேந்தர் தம்முடைய பதவி நீடிப்பதற்காக அரசாங்கத்திற்கும் அரசாங்கமாக இருந்து ஆளுகிற கட்சிக்கும் தொடர்ந்து நல்ல பிள்ளையாக இருக்க விரும்புகிறார் என்று தெரிந்தது. அதற்காகப் பல்லாயிரக் கணக்கான மாணவர்களைப் பகைத்துக் கொள்ளவும் அவர் தயாராக இருந்தார். தங்கள் இரண்டு பேரையும் குறிப்பிட்டுப் புகார் செய்து பல்கலைக் கழக எல்லைக்குள் போலீஸை வரவழைத் திருப்பதிலிருந்து அவர் எதற்கும் துணியக் கூடியவர் என்பதைப் பாண்டியனும் மோகன்தாஸும் புரிந்து கொண்டார்கள். எதிர்பார்த்ததுதான் என்றாலும் துணைவேந்தரின் மாணவர் விரோதப் போக்கு அதிர்ச்சியளிக்கக் கூடியதாயிருந்தது.

''எங்களைக் கைது செய்வதற்கு 'அரெஸ்ட் வாரண்ட்' இருந்தால் காண்பியுங்கள்'' என்று பாண்டியன் அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வற்புறுத்திக் கேட்கத் தொடங்கினான்.

''நீங்கள் இருவரும் என்னோடு இப்போது ஸ்டேஷனுக்கு வந்தாக வேண்டும். இண்டராகேஷனுக்காக ரிமாண்டில் வைப்பதற்கு வாரண்ட் ஒன்றும் அவசியமில்லை'' என்றார் இன்ஸ்பெக்டர். அவர்கள் இருவரும் இன்ஸ்பெக்டரோடு ஸ்டேஷனுக்குப் புறப்படுவதற்கு முன் நடந்தவற்றை உடனே, பொருளாதாரப் பேராசிரியரிடமும், மற்ற மாணவர்களிடமும், அண்ணாச்சியிடமும் தெரிவிக்கச் சொல்லி அருகிலிருந்த கண்ணுக்கினியாளிடம் கூறிவிட்டுச் சென்றார்கள். தன்னையும் மோகன்தாஸையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டுபோய் அரட்டி மிரட்டினால் அதன் மூலம் அந்தப் பல்கலைக் கழகத்திலேயே மாணவர் இயக்கம் ஒடுங்கிவிடும் என்று துணைவேந்தர் நினைப்பதை எண்ணி உள்ளூறச் சிரித்துக் கொண்டான் பாண்டியன்.

மழை மிகவும் கடுமையாக இருந்ததனால் ஜீப்பிற்குள் அமர்ந்திருந்தும் அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேருவதற்குள்ளேயே முக்கால்வாசி நனைந்து போய் விட்டார்கள். மழை மூட்டத்தில் எதிரேயும், பக்கங்களிலும் எதுவுமே தெரியவில்லை. மேகக்



குவியல்களின் நடுவில் ஜீப் மட்டும் முன்னோக்கி நகர்வது போலிருந்தது. இன்ஸ்பெக்டர் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு ஜீப்பிற்குள்ளேயே புகையை இழுத்து இழுத்து விட்டார். ஸ்டேஷனில் கான்ஸ்டேபிள்களோடு மாணவர்கள் இருவரையும் இறக்கி விட்டு விட்டு இன்ஸ்பெக்டர் ஜீப்பிலிருந்து இறங்காமல் அப்படியே வேறெங்கோ புறப்பட்டுப் போய் விட்டார்.

அவர்களிடம் கான்ஸ்டேபிள்களோ, ஸ்டேஷன் ரைட்டரோ யாருமே கடுமையாக இல்லை. அன்பாகவும், சுபாவமாகவுமே நடந்து கொண்டார்கள். ஸ்டேஷன் உள்ளறையிலிருந்த ஒரு நீள பெஞ்சைக் காண்பித்து, ''இன்ஸ்பெக்டர் வர்றவரை இங்கே உட்கார்ந்திருங்க'' என்று உட்கார வைத்துவிட்டார்கள். தங்களுக்காகத் தேநீர் வரவழைத்துக் குடித்த போது பாண்டியனுக்கும், மோகன்தாஸுக்கும்கூடத் தேநீர் அளித்தார்கள் அவர்கள். ஆனாலும் பாண்டியனும், மோகன்தாஸும் அதை ஏற்க மறுத்து விட்டார்கள்.

'அந்த இன்ஸ்பெக்டர் எதற்காக அப்படி அங்கே தங்களைக் கொண்டு வந்து உட்கார்த்தி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்?' என்பது புரியாமல் சிந்தித்துக் குழம்பிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். வெளியே மழை நின்று போயிருந்தது. கலைந்தும் கலையாமலுமிருந்த மேகங்களினிடையே நீல மலைகள் மெல்ல மெல்லத் தெரியத் தொடங்கியிருந்தன. பாண்டியன் சொன்னான்: ''வி. சி. இவ்வளவு தந்திரமாகவும், கேவலமாகவும் நடந்து கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.''

'' நான் எதிர்பார்த்தேன். இந்த வி.சி.யைப் பொறுத்தவரை வி. சி. என்பதற்கே 'வெரி க்ளெவர்' 'வெரி கன்னிங்' என்பதுதான் அர்த்தம் என்று கடந்த சில ஆண்டு அனுபவங்களில் நான் தீர்மானமாகப் புரிந்து கொண்டிருக்கிறேன் பாண்டியன்.....''

''நாளைக்கு மாலை பழைய மாணவர் தலைவன் மணவாளனுக்குப் பிரிவுபசார விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு நாம் இருவரும் போக முடியுமோ, முடியாதோ?''

''நாம் போக முடிந்தாலும், முடியாவிட்டாலும் நம் மாணவத் தோழர்கள் அதைப் பிரமாதமாக நடத்திவிடுவார்கள். அண்ணாச்சி பார்த்துக் கொள்வார். ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் மணவாளனை நாம் சந்தித்துப் பேசுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.''

''அதனால்தான் நானும் அவரை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும் என்று நினைத்தேன். இவர்கள் என்னடா என்றால் இங்கே கொண்டு வந்து உட்கார வைத்துக் கொண்டு கழுத்தறுக்கிறார்கள். அரெஸ்ட் வாரண்ட் கிடையாது. விசாரணை கிடையாது. கேள்வி முறை இல்லாமல் எதற்காக இங்கே கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறார்களோ, தெரியவில்லை?''

'' ஒன்றுமே இல்லாமல் சும்மா மிரட்ட வேண்டும் என்பதற்காகக்கூடக் கொண்டு வந்து உட்கார வைத்திருப்பார்கள். மணி ஒன்றாகிறது. நம்முடைய பகல் சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிறார்களோ?''

பாண்டியனும், மோகன்தாஸும் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போதே அண்ணாச்சி ஒரு பெரிய டிபன்காரியரோடு வந்து சேர்ந்தார். '' ஒன்றும் கவலைப்பட வேண்டாம். முதலில் சாப்பிடுங்க. இங்கேயிருந்து சீக்கிரமாப் போயிடலாம். அதுக்கு ஏற்பாடு நடக்குது'' என்றார் அண்ணாச்சி. கான்ஸ்டபிள்களில் இரண்டொருவர் அண்ணாச்சிக்கு நன்கு அறிமுகமானவர்களாக இருந்தனர். ஸ்டேஷன் பெஞ்சிலேயே இலை போட்டுச் சாப்பிட்டு முடித்தார்கள் அவர்கள். போலீஸ்காரர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துத் தருவது பரிமாறுவது போன்ற உதவிகளைக் கூடச் செய்தனர்.





அண்ணாச்சி எல்லாம் விவரமாகச் சொன்னார் : ''பேராசிரியர் பூதலிங்கம் சாரிடத்தில் போய் நம்ம 'கண்ணு'வும் மற்ற மாணவர்களும் உங்க ரெண்டு பேரையும் போலீஸ் கூட்டிக்கிட்டு வந்ததைப் பற்றிச் சொல்லி வருத்தப்பட்டிருக்காங்க. பூதலிங்கம் சார் உடனே அவங்க கூடவே புறப்பட்டுப் போய் வி.சி.யைப் பார்த்திருக்காரு. வி.சி., 'யூனிவர்ஸிடி எல்லைக்குள்ளாற போலீஸை நான் கூப்பிடவே இல்லையே? எப்பிடி வந்தாங்க அவங்க'ன்னு நாடகம் ஆடினாராம். கடைசிலே, 'சரி! பையங்க ரெண்டு பேரையும் விடச் சொல்லிடறேன். சாயங்காலம் 'ஓரியண்டேஷன் லெக்சருக்கு' எல்லாப் பையன்களும் அமைதியா மைதானத்திலே கூடுறதா உறுதியளிக்க முடியுமா?'ன்னு கேட்டாராம். உடனே பையங்க எல்லாருமாச் சேர்ந்து, 'அது முடியாது! நிபந்தனை இல்லாமயே நீங்க அவங்க ரெண்டு பேரையும் விடச் சொல்லணும்'னு வற்புறுத்தி யிருக்காங்க. வி.சி. உடனே இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு ஃபோன் பேசினாராம். விசாரிச்சு முடிஞ்சதும் மூணு மூணரை மணிக்குள் உங்க ரெண்டு பேரையும் அனுப்பிடுவாங்கன்னு வி. சி. மாணவர்களுக்கு உறுதி கூறியிருக்கிறாராம்.''

''வி. சி. ஃபோன் பண்ணி அதற்கப்புறம் வந்ததாகத்தானே அந்த இன்ஸ்பெக்டரே எங்களிடம் சொன்னார். அப்படியிருக்கும்போது போலீஸ் வந்தது தமக்குத் தெரியாதென்று அவரே ஏன் பொய் சொல்ல வேண்டும், அண்ணாச்சி ?''

''ஏதோ அவர் பொய்யே சொல்லாதவர் போலவும் இப்போதுதான் முதல் முதலாகப் பொய் சொல்லிவிட்டது போலவும் ஆச்சரியப்படுகிறாயே, பாண்டியன் ? எப்போது அவர் நிஜத்தைச் சொல்லியிருக்கிறார் ?'' என்றான் மோகன்தாஸ். சிறிது நேரம் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தபின் அண்ணாச்சி புறப்பட்டுப் போனார். போகும்போது மறுநாள் மாலை மணவாளனுக்குப் பிரிவுபசார விருந்து இருப்பதை அவரும் ஞாபகப்படுத்தி விட்டுப் போனார். 'மணவாளன் மதுரையிலிருந்து எப்போது வரக்கூடும் என்பதைப் பற்றி ஏதாவது தகவல் தெரியுமா?' என்று பாண்டியன் அண்ணாச்சியிடம் வினவியபோது, 'அநேகமா இன்னிக்கு ராத்திரி கடைசி பஸ் அல்லது நாளைக்குக் காலையிலே முதல் பஸ்ஸிலே வந்திடுவாரு' என்று புறப்படுமுன் அவர்களிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தார் அவர்.

ஒருவேளை இன்ஸ்பெக்டர் விசாரணைக்குப் பின் தங்களை விடுதலை செய்துவிட்டாலும் துணைவேந்தரின் 'ஓரியண்டேஷன்' சொற்பொழிவைப் புறக்கணிப்பது என்ற முடிவை எக்காரணம் கொண்டும் மாற்றிக் கொள்ளக்கூடாது என்று தீர்மானித்தார்கள் அவர்கள். துணைவேந்தர் இந்தத் தேர்தலையும் இதில் தொடர்புடைய மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினரையும் ஒடுக்க முயல முயல இது மகத்தான வெற்றியை அடைந்தே தீரும் என்று அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

பகல் இரண்டரை மணிக்கு இன்ஸ்பெக்டர் திரும்பி வந்தார். மோகன்தாஸையும் பாண்டியனையும் விசாரணை என்ற பேரில் ஏதோ கேள்விகள் கேட்டார். அவை அனைத்துமே ஏதோ ஒப்புக்குக் கேட்கப்பட்டவை போல் இருந்தனவே தவிர தீவிரமாக இல்லை. அரை மணி நேரத்துக்குப் பின், ''நீங்கள் இருவரும் போகலாம். படிப்புத்தான் முக்கியம். கலகத்தினால் படிப்பு வராது. யூனிவர்ஸிடியும், அதை ஒட்டிய இந்த நகரமும் லா அண்ட் ஆர்டரோடு — பீஸ்ஃபுல்லா இருக்க ஒத்துழையுங்க'' என்று சிரித்துக் கொண்டே கூறியபடி இருவரோடும் கை குலுக்கி விடை கொடுத்தார் இன்ஸ்பெக்டர். கைது செய்ய வந்தபோது இருந்த வேகமும், மிடுக்கும் இப்போது அவரிடம் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். புறப்படுமுன் மோகன்தாஸ் அவரைக் கொஞ்சம் வம்புக்கு இழுத்தான் :

'' சார் ! நீங்கள் இன்று காலையில் பல்கலைக் கழகத்துக்குள் எங்களைக் கைது செய்ய வந்தபோது எங்கள் வி. சி. ஃபோன் செய்ததின் பேரில் வந்ததாகக் கூறினீர்கள். கேன் ஐ ஸீ தி எஃப். ஐ. ஆர்?''

'' நீங்கள் ஒன்றையும் பார்க்க வேண்டாம். போய் நல்ல பிள்ளைகளாக லட்சணமாகப் படியுங்கள்'' என்று அவர் மழுப்பிவிட்டார். அவர்களும் சிரித்துக்கொண்டே வெளியேறினார்கள். மழை பெய்து முடிந்தபின் சாலைகள் கழுவிவிட்டதுபோல் பளிச்சென்றிருந்தன. மழை பெய்து முடிந்தபின்புதான் சில நகரங்களில் சாலைகள் சேறும் சகதியுமாய் அசிங்கமாகிவிடும். ஆனால் மல்லிகைப் பந்தல் நகரில் மேடும் பள்ளமுமான மலைச் சாலைகளாகையால் எவ்வளவு மழை கொட்டினாலும் மழை நின்ற அடுத்தகணமே சாலைகள் பளிச்சென்றிருக்கும். போலீஸ் ஸ்டேஷன் வாசலிலிருந்து கால் மணி நேரம்

நடந்து கடை வீதிக்கும், பல்கலைக் கழகத்திற்கும் சாலைகள் பிரியும் இடத்தை அடைந்தபோதுதான் இன்ஸ்பெக்டர் ஏன் அவ்வளவு அவசரப்பட்டுத் தங்கள் இருவரையும் வெளியே அனுப்பி வைத்தார் என்பது பாண்டியனுக்கும், மோகன்தாஸுக்கும் புரிந்தது.

பல்கலைக் கழகச் சாலையிலிருந்து 'மாணவர் தலைவர்களை விடுதலை செய்' 'அடக்குமுறை ஒழிக' 'துணைவேந்தரே! இமைக்குத் துணை போகாதீர்' போன்ற கோஷங்களுடனும், அதே வாக்கியங்கள் எழுதிய அட்டைகளுடனும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஊர்வலமாகப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தார்கள். இரு புறமும் மரங்கள் அடர்ந்த நேரான அந்தச் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து வருவது போல் மாணவர்கள் வருவது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

ஊர்வலத்தின் முதல் வரிசையில் மாணவிகளின் அணி இருந்தது. அந்த அணிக்குத் தலைமை தாங்கி நடத்தி வந்த கண்ணுக்கினியாளின் வலது கரத்தில் மாணவர்களை விடுதலை செய்யக் கோரும் வாசகம் அடங்கிய அட்டை ஒன்றிருந்தது. தொடர்ந்து அலைஅலையாக மாணவிகளும், மாணவர்களும் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். பாண்டியனையும் மோகன்தாஸையும் எதிரே பார்த்ததும் ஊர்வலத்தின் உற்சாகம் கட்டுப்படுத்த முடியாமல் போய் விட்டது. ஓடி வந்து சூழ்ந்து கொண்ட மாணவர்கள் அவர்கள் இருவரையும் அப்படியே கட்டித் தூக்கிவிட்டார்கள். புறப்பட்ட ஊர்வலம் நோக்கமின்றி வீணாகிவிடக் கூடாது என்பதற்காக அதை அப்படியே துணைவேந்தர் மாளிகையை நோக்கித் திருப்பிவிட்டுத் தங்கள் தலைமையில் அழைத்துச் சென்றார்கள் அவர்கள். விரைந்து சிந்தித்து உடனே அந்த முடிவுக்கு வர வேண்டியிருந்தது. மாலையில் நடத்தத் திட்டமிட்டிருந்த பாடத் தொடக்க நாள் சொற்பொழிவை நடத்தப் போக விடாமல் துணைவேந்தரை அவர் மாளிகை வாசலிலேயே தடுத்துவிட வேண்டும் என்பதும், முதலில் திட்டமிட்டபடி பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தேர்தலை உடனே நடத்தச் சொல்லி வற்புறுத்த வேண்டும் என்பதும் அப்போது அவர்கள் நோக்கமாயிருந்தது. காலையிலேயே அவர்கள் கைதானவுடன், பல மாணவர்கள் அந்தப் பல்கலைக் கழகத்தின் சான்ஸலராகிய மாநில கவர்னருக்குத் தந்தி கொடுத்திருந்தார்கள். அரசாங்கம், போலீஸ், துணைவேந்தர் எல்லாருமாகச் சேர்ந்து மாணவர்களை அநியாயமாக அடக்கி ஒடுக்க முயல்வதாகக் கவர்னருக்கு அனுப்பிய தந்திகளில் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். புரோ-சான்ஸலராகிய கல்வி அமைச்சரின் தூண்டுதலிலேயே துணைவேந்தர் இவ்வளவும் செய்வதாக அவர்கள் சந்தேகப்பட்டதனால்தான் தந்திகள் சான்ஸலராகிய மாநில கவர்னருக்குத் தரப்பட்டிருந்தன. இரண்டொருவர் தந்தி நகல்களைக் கல்வி மந்திரிக்கும் அனுப்பியிருந்தார்கள். ஃபோன் மூலம் கவர்னரோ, கல்வி அமைச்சரோ, 'நிலைமை கட்டுக்கு அடங்காமல் போய் மாணவர்கள் கிளர்ந்து எழும்படி விட்டு விடாதீர்கள்' என்று துணைவேந்தரை எச்சரித்திருக்கலாம் என்று தெரிந்தது. பிற்பகலுக்கு மேல் துணைவேந்தரின் போக்கில் ஒரு தந்திரமான மாறுதல் தெரிந்தது. தமது போக்கை ஆதரிக்கும் மாணவர்கள் சில நூறு பேர்கூட



இல்லை என்பதும், எதிர்க்கும் மாணவர்கள் பல ஆயிரம் பேர்கள் என்பதும் விட்டு வாசலில் பிரத்யட்சமாக வந்து நின்ற ஊர்வலத்திலிருந்தும் தெரிந்தது அவருக்கு. மாணவர்கள் ஊர்வலமாக அவர் மாளிகைக்குப் போன நேரத்தில் எல்லாப் பகுதிகளின் 'டீன்'களும் எல்லாப் பிரிவின் பேராசிரியர்களும் அங்கே கூடியிருந்தனர். நிலைமையைப் பற்றி அவர்களிடமும் கலந்து பேசியதில் அவர்களில் பலர் மாணவர் பேரவைத் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டிய அவசியமில்லை என்றே கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

மாலை நாலரை மணிக்குப் பொருளாதாரப் பேராசிரியரையும் உடன் அழைத்துக் கொண்டு மாளிகை முகப்பில் ஊர்வலமாக வந்து வளைத்துக் கொண்டு நிற்கும் மாணவர்களை எதிர் கொண்டார் துணைவேந்தர். அவரைக்

கண்டவுடன் மாணவர்களின் கூப்பாடுகளும், கோபக் குரல்களும் அதிகமாயின. பேராசிரியர் பூதலிங்கம் கைகளை உயர்த்தி அமைதியாயிருக்கும்படி மாணவர்களை வேண்டவே, அவர் வேண்டுதலை மதித்து அவர்கள் அமைதி அடைந்தார்கள்.

''மாணவர்களே! ஏற்கெனவே அறிவித்திருந்தபடி இன்று மாலை 'ஓரியண்டேஷன்' நாள் நடைபெறாது. முன்பே திட்டமிட்டபடி உங்கள் பேரவைத் தேர்தல்கள் முடிந்தபின் 'ஓரியண்டேஷன் நாளை' வைத்துக் கொள்ளலாம். இந்த முடிவு உங்களுக்கு எல்லாம் மகிழ்ச்சி அளிக்கும் என்று நினைக்கிறேன். இப்போது நீங்கள் அமைதியாகக் கலைந்து செல்லலாம்'' என்று கூட்டத்தை நோக்கி அறிவித்துவிட்டு அவர்கள் கரகோஷம் ஓய்ந்ததும் அவர்கள் முன்னிலையிலேயே, ''மிஸ்டர் பூதலிங்கம்! யூ கேன் கண்டக்ட் தி ஸ்டூடண்ட் கவுன்சில் எலெக்ஷன்ஸ் அஸ் ஷெட்யூல்ட்....'' என்றும் சொல்லிவிட்டு உள்ளே சென்றார் துணைவேந்தர்.

''மோகன்தாஸ்! அஸ் யூ ஸெய்ட் அவர் வி. சி. இஸ் வெரி கிளவர்.....'' என்று பாண்டியன் மோகன்தாஸின் காதருகே சொல்லிச் சிரித்தான்.

''இவர் வரையில் வி. சி. என்பதற்கு எக்ஸ்பான்ஷனே வெரி கிளவர்தான் பிரதர்.''

''ரொம்பக் கெட்டிக்காரர்தான்!''

''கெட்டிக்காரராயிருக்கட்டும். ஆனால் அடுத்தவர்களை முட்டாளாக்க முயல்கிற அளவு கெட்டிக்காரராயிருக்க வேண்டியதில்லை. படித்தவனுடைய கெட்டிக்காரத்தனம் அடுத்தவனைப் புத்திசாலியாக்கப் பயன்பட வேண்டுமேயன்றி அடுத்தவனை ஏமாற்றப் பயன்படுத்தப்படக் கூடாது. 'இண்டெலக்சுவல் டிஸ்-ஹானஸ்டி ஷுட் கோ...'''

''அங்கங்கே பெரிய பொறுப்புக்களில் இருக்கும் பல அறிவாளிகள் தங்கள் நாணயமின்மையால் வேர்ப் புழுக்களைப் போல் சமூகத்தின் ஆணிவேரை மறைவாக அரித்துக் கொண்டிருக்கிறார்கள். இலைப் புழுக்களையும், கம்பளிப் பூச்சிகளையும்விட வேர்ப் புழுக்கள் அபாயகரமானவை.''

''இன்றைய இந்திய சமூகத்தில் எல்லாத் துறையிலும், எல்லா வகையிலும், எல்லா நிலையிலும் அப்படிப்பட்ட வேர்ப் புழுக்களின் அபாயம் இருக்கிறது...''

பேசிக் கொண்டே குழுக்கள் குழுக்களாக மாணவர்கள் விடுதிகளுக்கும், கடை வீதிக்கும், விளையாட்டு மைதானத்துக்கும், காப்பி சிற்றுண்டிக்கும் பிரிந்து சென்றார்கள். பாண்டியனும், கண்ணுக்கினியாளும், மோகன்தாஸும் வேறு சில மாணவர்களும் அண்ணாச்சி கடைக்குப் புறப்பட்டார்கள். பாண்டியன் கண்ணுக்கினியாளுக்கு நன்றி கூறினான்.

''உனக்கு நிறைய நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். ஓர் இக்கட்டான சூழ்நிலையில் உன்னிடம் குறிப்பாகச் சொல்லி விட்டுப் போலீஸ் ஜீப்பில் ஏறிப் போய் விட்டோம். சில மணி நேரத்திற்குள் கவர்னருக்குத் தந்திகளைப் பறக்கச் செய்து எல்லா விடுதி மாணவர்களையும் கட்டுப்பாடாக ஊர்வலத்துக்கு வரச் செய்து காரியங்களை வெற்றிகரமாக்க உன் செயல்களால் பெரிதும் உதவியிருக்கிறாய்.''

''பிரமாதமாக அப்படி என்ன செய்து விட்டேன்? உங்களில் ஒருத்தி என்ற முறையில் என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்தேன். அதற்கு உடனே மிகவும் அந்நியமானவர்கள் சொல்லிக் கொள்வதுபோல் இப்படி நன்றிகூடவா சொல்லிக் கணக்குத் தீர்த்துவிட வேண்டும்?''

''உங்களைப்போல் ஜூனியராக இந்த ஆண்டுதான் இங்கே வந்து சேர்ந்திருக்கும் ஒரு புதிய மாணவி கூச்சமும், பயமும் இல்லாமல் இதை எல்லாம் சாதித்து முடித்திருப்பது பெரிய காரியம்தான்'' என்று மோகன்தாஸும் அவளைப் புகழ்ந்தான்.

''நீங்கள் இருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் இப்படி என்னைப் புகழ்ந்து கொண்டே இருந்தால் நான் உங்களோடு அண்ணாச்சி கடைக்கு வருவதைத் தவிர்த்து விட்டு விடுதிக்கே திரும்ப வேண்டியிருக்கும்.....''

''நான் வேண்டுமானால் புகழ்வதை நிறுத்திவிடுகிறேன். ஆனால் பாண்டியனின் உரிமைகளை நான் கட்டுப்படுத்த முடியாது. அவன் பாடு உங்கள்பாடு. ரொம்பவும் அந்நியோந்நியமானவர்களின் உரிமைகளில் மூன்றாம் மனிதர்கள் தலையிட முடியாது'' என்று மோகன்தாஸ் குறும்பு தொனிக்கக் கூறியதும், ''இந்த வம்புதானே வேண்டாம்னேன்'' என்று பாண்டியன் அவசர அவசரமாகக் குறுக்கிட்டான். மோகன்தாஸைப் பேச விடாமல் முந்திக் கொண்டு தடுக்க அந்த அவசரத்திலும் அவள் விழிகளில் தெரிந்த ஆவலையும், கன்னங்கள் சிவந்து இதழ்களில் அரும்பும் இளநகையையும் பாண்டியன் காணத் தவறவில்லை. அந்த விநாடியில் அவள் தன்னருகே தோளோடு தோள் நடந்து வருகிறாள் என்பதே அவனுடைய அந்தரங்கத்தின் பெருமிதமாக இருந்தது. இன்பகரமானதோர் இறுமாப்பாகவும் இருந்தது.

அவர்கள் அண்ணாச்சி கடைக்குப் போய்ச் சேரும்போது மாலை ஆறு மணி ஆகிவிட்டது. மல்லிகைப் பந்தலின் அழகிய சாலைகளில் விளக்குகள் மின்னத் தொடங்கிவிட்டன. மேடுகளிலும், உயரமாயிருந்த மலைப் பகுதிகளிலும் அங்கங்கே தெரிந்த விளக்கு ஒளிகள் அந்த மலை நிலத்தின் சுகமான இருட் சனத்தினிடையே மிகவும் அழகாகத் தெரிந்தன. கடையில் சென்னையிலிருந்தும் மதுரையிலிருந்தும் வெளிவருகிற நாலைந்து தினசரிகளின் உள்ளூர் நிருபர்களை வரவழைத்து உட்காரச் செய்து இவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தார் அண்ணாச்சி.

''தம்பி! வாங்க. இவங்கள்ளாம் உங்களை எதிர்பார்த்துத்தான் காத்திருக்காங்க.... எல்லாம் விவரமாச் சொல்லுங்க'' என்று மாணவர்களை வரவேற்று நிருபர்களோடு கடையின் உட்புற அறைக்கு அனுப்பி வைத்தார் அவர். பாண்டியனும், மோகன்தாஸும் நிருபர்களுக்கு எல்லா நிலைமைகளையும் விவரமாகச் சொல்லத் தொடங்கினார்கள். எதிர்ப்புறம் மருந்துக் கடைக்குப் போய் ஃபோன் மூலம் பெண்கள் விடுதி வார்டனிடம் பேசிச் சிறிது நேரம் தாமதமாக விடுதிக்குத் திரும்ப அனுமதி பெற்று வந்தாள் கண்ணுக்கினியாள். மதுரையிலிருந்து அவள் தந்தை நாயுடு தமக்கு எழுதிய ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார் அண்ணாச்சி.

''நாயினுவுக்குச் சதா என்னைப் பற்றிக் கவலைதான். உங்களை எனக்குக் 'கார்டியனா' நியமிச்சிருக்கிற மாதிரியில்லே எழுதியிருக்காரு?'' என்று கூறியபடி வாசித்து முடித்த கடிதத்தை அண்ணாச்சியிடம் திருப்பிக் கொடுத்தாள் அவள்.

மாணவர்களிடம் விவரங்களைக் கேட்டறிந்து கொண்டு நிருபர்கள் புறப்பட்டபோது, ''மற்றவங்க பேப்பரிலே எப்படி எப்படியோ நியூஸ் வரும்! நம்ம பேப்பருங்களிலேயாவது நல்லபடியா எழுதுங்க. நிஜத்தைப் போடுங்க'' என்று அண்ணாச்சி சொல்லி அனுப்பினார். சிறிது நேரம் மாணவர்களோடு முதல் நாளிரவு நிகழ்ந்த கல்லெறியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் அவர். பாண்டியன் வேடிக்கையாக அதை விவரித்தான்:

''அன்பரசன் அடிக்கடி கூட்டத்திலே சொல்கிற ஒரு பழைய மேற்கோளுக்கு அவன் புரிந்து கொண்டிருக்கிற அர்த்தம் என்ன என்பதே நேற்று நள்ளிரவில்தான் எங்களுக்குத் தெரிந்தது அண்ணாச்சி! 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே நாம் முன் தோன்றி மூத்தவர்கள்' என்று வெளியிலே நடக்கிற அவங்க கட்சிப் பொதுக் கூட்டமானாலும் சரி, பல்கலைக் கழகத்தில் நடக்கும் பாட்டனி அஸோஸியேஷன் கூட்டமானாலும் சரி, எங்கும் எதிலும் அன்பரசன் இதைக் கூறுவான். அவன் பேச்சில் அடிக்கடி கல் தோன்றிக் கொண்டிருந்தது. நேற்றிரவு செயலிலும் கல் தோன்றிவிட்டது...''—இதைக் கேட்டு மோகன்தாஸ் சொன்னான்:

''சே! சே! அவன் ஏதோ பொருத்தமில்லாமல் கிளிப் பிள்ளைபோல அந்த வரியை எல்லாக் கூட்டங்களிலும் 'கோட்' செய்கிறான் என்பதற்காக நீ அவனைக் கிண்டல் செய்! ஆனால் அந்த அழகான வீரப் பாடலைக் கிண்டல் செய்யாதே, பாண்டியன்! எனக்கு மிகவும் பிடித்த பாடல் அது...''

''நான் பாடலைக் கிண்டல் செய்யவில்லை மோகன்தாஸ்! லகர ளகர ழகர உச்சரிப்புக்கள் சரியாக வராமல் அன்பரசன் அந்தப் புறப்பொருள் பாடல் அடியைக் 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடி' என்பதற்குப் பதிலாக 'கள் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாலோடு முன் தோன்றி மூத்த குடி' என்று அழுத்தந் திருத்தமாய்த் தப்பாகச் சொல்லும்போது கேலிக்கூத்தாயிருக்கும். அவனுடைய பிரசங்கத்தில் இந்த ஸீரியஸ் கொட்டேஷனே நகைச்சுவையைப் போல்தான் வந்து போகும்.....''

''என்ன செய்யலாம்? தமிழ் நாட்டில் இன்றுவரை வெறும் தமிழ் உணர்ச்சி மட்டுமே போற்றப்படுகிறது. தமிழ் அறிவையோ, சிந்தனை வளர்ச்சியையோ போற்றுவதற்குத் தமிழ் மக்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. அறிவைப் பட்டினி போட்டுவிட்டு உணர்ச்சிக்கு விழா எடுக்கும் வரை நாம் உருப்பட மாட்டோம்.''

கண்ணுக்கினியாள் விடுதிக்குத் திரும்பும் நேரம் ஆகிவிட்டது என்று கைக் கடிகாரத்தைப் பார்க்கவே அவளை மட்டும் தனியே அனுப்பக் கூடாதென்று அவர்கள் எல்லாருமே அண்ணாச்சியிடம் சொல்லிக் கொண்டு பல்கலைக்கழகத்துக்குப் புறப்பட்டார்கள்.

''போற வழியிலே இன்னிக்கும் ஏதாவது கல் தோன்றுமே, மண் தோன்றுமே பார்த்துப் பத்திரமாய்ப்போய்ச்சேருங்க, தம்பிகளா...!'' என்று எச்சரிக்கையோடு விடை கொடுத்தார் அண்ணாச்சி.

''இன்னைக்கு இராத்திரியோ, காலையிலோ மணவாளன் மதுரையிலிருந்து வந்ததும் எனக்கு ஒரு வார்த்தை

சொல்லியனுப்புங்க அண்ணாச்சி....'' என்று போகும்போது ஞாபகப்படுத்தி விட்டுப் போனான் பாண்டியன்.

மணவாளன் என்ற மாபெரும் சக்தியினால் கவரப்பட்டுத்தான் பாண்டியன் போன்றவர்களுக்கு அந்தப் பல்கலைக்கழக மாணவர் இயக்கத்திலேயே அக்கறை ஏற்பட்டது. பாண்டியன் அந்தப் பல்கலைக் கழகத்துக்கு வந்த முதல் நாளிலேயே அண்ணாச்சி மணவாளனை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மாணவர்களை விடலைகளாகவும், விட்டேற்றிகளாகவும், சினிமா லோலர்களாகவும் எதுகை மோனைப் பித்தர்களாகவும் ஆக்கி ஆண்டு வந்த ஒரு முரட்டுப் பிடியிலிருந்து விடுவித்துத் தேசிய நோக்கமுள்ள மாணவர் இயக்கம் ஒன்றை அங்கே உருவாக்கிய பெருமையே மணவாளனின் பெருமைதான். மணவாளன் அஞ்சாநெஞ்சன். தன் வழியில் அவன் பாண்டியனைத் தயார் செய்து ஆளாக்கிவிட்டுப் போயிருந்தான். அந்த நன்றி விசுவாசமும் அன்பும்தான் பாண்டியனை மணவாளனின் வரவை ஆவலோடு எதிர்பார்க்க வைத்திருந்தன.

மறுநாள் காலை பாண்டியன் என். சி. சி.க்குப் போய் விட்டு மைதானத்திலிருந்து திரும்பி வந்ததும் அண்ணாச்சி கடையிலிருந்து பையன் மணவாளன் வந்து சேர்ந்த தகவலைத் தெரிவித்து விட்டுச் சென்றான். குளித்து உடை மாற்றிக் கொண்டு வேறு சில மாணவர்களையும் உடனழைத்துக் கொண்டபின் பாண்டியன் மணவாளனைப் பார்க்கச் சென்றான். மணவாளன் மாணவ சகோதரர்களை உற்சாகமாக வரவேற்றார்.

''அண்ணாச்சியிடம் எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் பாண்டியன்! நீங்கள் ஒற்றுமை குலையாமலிருக்கும் வரை உங்கள் இயக்கத்தை யாரும் அடக்கிவிட முடியாது. இந்தப் பல்கலைக் கழகத்தில் அரும்பாடுபட்டு நான் ஏற்றிய ஒரு விளக்கை அவிந்துவிடாமல் காக்கும் பொறுப்பு இன்று உங்கள் அணியினரிடம் விடப்பட்டிருக்கிறது. இதை அப்படியே காத்து அடுத்த அணியினரிடம் தர நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்'' என்றார் அவர். அன்று பிற்பகல்வரை மாணவர்கள் மணவாளனுடனேயே இருந்தார்கள். அவரோடு அவர் சென்ற இடங்களுக்கு உடன்சென்றார்கள். சேர்ந்து உணவருந்தினார்கள். உரையாடி மகிழ்ந்தார்கள். ஆலோசனைகள் கேட்டார்கள்.

''சமூக பொருளாதார மாற்றங்களை உண்டாக்கி ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி எதிர்கால இந்தியாவை உருவாக்கும் பணியை இனி மாணவ சமூகம் தான் தொடங்கி நிறைவேற்ற முடியும்'' என்பதை மணவாளன் உறுதியான நம்பிக்கையோடு அவர்களுக்குச் சொன்னார்.

''உலகின் மற்ற நாடுகளிலுள்ள ஏழைமைக்கும் நம் நாட்டு ஏழைமைக்கும் வித்தியாசம் உண்டு. அவ்வளவு ஏன்? ஆசியாவில் பின்தங்கிய நாடுகளின் ஏழைமை புதுவிதமானது. பணத்தினாலும் ஏழைகள், கல்வியின்மையினாலும் ஏழைகள், புரிந்துணர்வினாலும் ஏழைகள், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு இன்மையினாலும் ஏழைகள் என்று பலவிதமான ஏழைகள் இங்கு இருக்கிறார்கள்'' என்பது போல் பல கருத்துக்களை இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும்விதத்தில் மணவாளன் எடுத்துக் கூறினார்.

அன்று மாலையில் லேக்வியூ ஹோட்டல் புல்வெளியில் நடைபெற விருந்த விருந்துக்குப் பாண்டியனும் மோகன்தாஸும் மணவாளனை அழைத்துச் சென்றார்கள். அண்ணாச்சி ஏற்பாடுகளைக் கவனிக்க முன்னாலேயே அங்கு போயிருந்தார்.

அங்கே ஹோட்டல் முகப்பில் கண்ணுக்கினியாளும் வேறு சில மாணவிகளும் வருகிறவர்களை வரவேற்று ரோஜாப் பூவும் கல்கண்டும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பாண்டியன் கண்ணுக்கினியாளை மணவாளனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

கல்கண்டு ரோஜாப்பூ எடுத்துக் கொண்டதும் மோகன்தாஸோடு முன்னால் நடந்து போய்விட்டார் மணவாளன். பாண்டியனுடைய கோட்டில் அவளே ஒரு ரோஜாப் பூவை எடுத்துச் செருக வந்தபோது அந்தக் கையை அப்படியே தடுத்து, ''இதில் எது கை? எது ரோஜாப்பூ? இரண்டும் ஒரே நிறத்திலிருப்பதால் புரியவில்லை'' என்று அவளுக்கு மட்டுமே கேட்கும் தனிவான குரலில் கேட்டுவிட்டுக் குறும்பாகச் சிரித்தான் பாண்டியன். அவனுடைய அந்த வாக்கியம் தன்னுள் ஏற்படுத்திய இன்பச் சிலிர்ப்பைத் தனக்குள்ளேயே ஓர் இரகசியம் ஆக்கிக் கொண்டு, ''மறுபடியும் எச்சரிக்கிறேன். பொருளாதாரம் படிக்கிறீர்கள். அதைக் கோட்டை விட்டுவிட்டுக் கவிஞராகி விடாதீர்கள்.....'' என்று பதிலுக்கு அவனை வம்புக்கு இழுத்தாள் அவள்.

''எதிரே தெரிகிற தோற்றம் ஊமையையும் கவிஞனாக்க முடிந்ததாக இருக்கும்போது நான் என்ன செய்வது? ஐ யாம் ஹெல்ப்லெஸ் மேடம்.''

''அப்புறம் வம்பளக்கலாம்! உள்ளே போய் விருந்து ஏற்பாடுகளைக் கவனியுங்கள்'' என்று அவள் பாண்டியனை உள்ளே துரத்தினாள். (தொடரும்)

ஸ்ரீ கிருஷ்ண கான சபா (Regd,)

தியாகராயநகர், சென்னை - 17 போன்: 442808 & 441953

கோகுலாஷ்டமி சங்கீத உத்சவம்

ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் 1972

1972 ஆகஸ்ட்

5ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: லால்குடி ஜயராமன் ஸ்ரீமதி பிரம்மானந்தம் (இரு வயலின்கள்) வெ. ராமன், ஷியாமசுந்தர்.

6ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: நெடுந்தெரு ராமா & கௌசல்யா, இந்திரா ரங்கராஜன், எஸ். எஸ். ராஜம்.

ஷை மாலை 6 மணிக்கு: ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி வி.வி. சுப்ரமணியம், டி.கே. மூர்த்தி, விநாயக்ராம்

11ந் தேதி வெள்ளி மாலை 6-30 மணிக்கு: வைரமங்கலம் லக்ஷ்மி நாராயணன், பாபநாசம் பால சரஸ்வதி, தஞ்சை சிவப்பிரகாசம்.

12ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: கே.வி. நாராயண சுவாமி, கிருஷ்ணன், சங்கரன்.

13ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: மீனாக்ஷி (வீணை) (கல்பகம் சுவாமிநாதனின் சிஷ்யை) தஞ்சாவூர் சுப்பிரமணியன்.

மாலை 6 மணிக்கு: மதுரை டி.என். சேஷகோபாலன் எம். சுப்பிரமணியம், டி. வி. கோபாலகிருஷ்ணன்.

14ந் தேதி திங்கள் மாலை 6-30 மணிக்கு:
வி. சுப்பிரமணியம் (செம்மங்குடி சிஷ்யர்) ருக்மிணி காரைக்குடி மணி.

15ந் தேதி செவ்வாய் மாலை 3 மணிக்கு: அரியூர் சகோதரிகள் (ஆலத்தூர் வெங்கடேசஅய்யர் சிஷ்யை) ஆலந்தூர் நடராஜன், தஞ்சாவூர் சுப்பிரமணியம்.

மாலை 6 மணிக்கு: மகாராஜபுரம் சந்தானம் M. S. கோபாலகிருஷ்ணன், கிருஷ்ண அய்யங்கார்.

18ந் தேதி வெள்ளி மாலை 6-30 மணிக்கு:
B.V. ராமன் & B.V. லக்ஷ்மணன், வி. தியாகராஜன் தஞ்சை நாகராஜன், ரங்காச்சாரி.

19ந் தேதி சனி மாலை 6 மணிக்கு:
என். ரமணி (புல்லாங்குழல்) டி.எஸ். வீரராகவன், காரைக்குடி மணி.

20ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: ருக்மிணி ரமணி (பாபநாசம் சிவனின் பெண்ணும், சிஷ்யையும்) ராதா சுந்தரேசன், பி. சீனிவாசன்.

மாலை 6 மணிக்கு: மைசூர் வி. துரைசாமி ஐயங்கார் (வீணை) & பார்ட்டி.

25ந் தேதி வெள்ளி 6-30 மணிக்கு: டி. வி. சங்கர நாராயணன் (மதுரை மணி அய்யரின் சிஷ்யர்) கிருஷ்ணன், ராமபத்ரன்.

26ந் தேதி சனி மாலை 6 மணிக்கு:
ராதா ஜெயலக்ஷ்மி, எம். எஸ். அனந்தராமன், ஈஸ்வரன், பாலக்காடு சுந்தரம்.

27ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: எஸ். கருணா. (மூசிரி சிஷ்யை) டி. கே. பத்மநாபன், நாகை சுந்தரராஜன்.

மாலை 6 மணிக்கு: நெடுனூரி கிருஷ்ணமூர்த்தி, எம். எஸ். கோபாலகிருஷ்ணன், ரகு.

30ந் தேதி புதன் 7 மணிக்கு: கிருஷ்ணாஞ்சலி: பெங்களூர் சத்குரு சங்கீத சமிதி.

31ந் தேதி வியாழன் மாலை 7 மணிக்கு: ஹரிகதை: தஞ்சாவூர் டி. ஆர். கமலாமூர்த்தி & பார்ட்டி.

1972 செப்டம்பர்

1ந் தேதி மாலை 6-30 மணிக்கு: கல்பகம் சுவாமி நாதன், (வீணை) திண்டுக்கல் ராமமூர்த்தி.

2-ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: டி.ஆர். சுப்ரமணியம் ருக்மிணி, குத்தாலம் விஸ்வநாத அய்யர்.

3-ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: ஜி.என். தேவிகள் நரசிம்மமூர்த்தி, கும்பகோணம் ராஜப்பய்யர்.

ஷை மாலை 6 மணிக்கு: டி.ஆர்.மாலி (புல்லாங்குழல்) மங்கத்தாயாரு, உபேந்திரன்.

8ந் தேதி வெள்ளி மாலை 6-30 மணிக்கு: லலிதா சேஷாத்ரி, ஏ. லலிதா, கே. சஞ்சீவி.

9ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: எம். எஸ். வசந்த குமாரி, கன்யாகுமாரி, தஞ்சாவூர் கிருஷ்ண மூர்த்தி ராவ்.

10ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: மதுரை சுவாமி நாதன் (மதுரை சோமு சிஷ்யர்) நரசிம்மமூர்த்தி தஞ்சாவூர் ராம்தாஸ்.

மாலை 6 மணிக்கு: M.D. ராமநாதன், சந்திரசேகரன் முருகபூபதி.

11ந் தேதி திங்கள் மாலை 3 மணிக்கு: ராஜலக்ஷ்மி நாராயணன் & பத்மா, டி.என். பாலு, குருபிரசாத்.

மாலை 6 மணிக்கு: மதுரை என். கிருஷ்ணன் கிருஷ்ணன், ராமபத்ரன்.

15ந் தேதி வெள்ளி மாலை 6-30 மணிக்கு: சீராமணி ஸ்ரீநிவாசன், கவி. லக்ஷ்மி நாராயணன், நாகூர் அம்பி அய்யர்.

16ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: D.K. பட்டம்மாள் டி. எஸ். வீரராகவன், ஜி. சிவகுமார், எர்ணாகுளம் எஸ். ராமகிருஷ்ணன்.

17ந் ஞாயிறு மாலை 3 மணிக்கு: கே. எஸ். கோபால கிருஷ்ணன் (புல்லாங்குழல்) காரைக்குடி எம்.எஸ். மணி, மாநிமங்கலம் சுவாமிநாதன்.

மாலை 6 மணிக்கு: பாலமுரளி கிருஷ்ணா (வயோலா) குருவாயூர் துரை.

22ந் தேதி வெள்ளி 6-30 மணிக்கு: கழுகுமலை சுந்தரசாமி, அழகிரிசாமி, டி. கே. மூர்த்தி, சென்னை ஆர். கல்யாணராமன்.

23ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: எஸ். கல்யாண ராமன், வி. வி. சுப்ரமணியம், ரகு.

24ந் தேதி ஞாயிறு மாலை 3 மணிக்கு: கல்பகம் ராமன் ஆலந்தூர் நடராஜன், பாலக்காடு ராமநாதன்.

மாலை 6 மணிக்கு: மதுரை சோமு, சந்திரசேகரன் முருகபூபதி, குருமூர்த்தி.

29ந் தேதி வெள்ளி மாலை 6-30 மணிக்கு: B. கிருஷ்ண மூர்த்தி, B. தக்ஷிணாமூர்த்தி, ஈரோடு குருராஜன்.

30ந் தேதி சனி மாலை 6 மணிக்கு: சிக்கில் சகோதரிகள் (புல்லாங்குழல்) சிக்கில் பாஸ்கரன், காரைக்குடி மணி

1972 அக்டோபர்

1ந் தேதி ஞாயிறு மாலை 3-30 மணிக்கு: எஸ். லக்ஷ்மி நரசிம்ம அய்யர் & பார்ட்டி - நாதஸ்வரம்.

மாலை 6-30 மணிக்கு: ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கர் & பார்ட்டி - ஹிந்துஸ்தானி பாட்டு

2ந் தேதி திங்கள் மாலை 3 மணிக்கு: சௌந்தரம் கிருஷ்ணன், காஞ்சி ஜனார்த்தனன், நாதன்.

மாலை 6 மணிக்கு: சிட்டிபாபு (வீணை) குருவாயூர் துரை, மஞ்சுநாத்.

சீஸன் கட்டண விகிதம்

ஆதரவாளர்:	ரூ. 100/-	முதல் வகுப்பு:	ரூ. 40/-	தினசரி:	ரூ. 10, 5, 3, & 2
ஜோடிக்கு:	ரூ. 60/-	இரண்டாம் வகுப்பு:	ரூ. 25/-	ஷை	ரூ. 15, 10, 5 & 3

சைக்கோ ஸாரநாதன்





கி.ராஜேந்திரன்

27. இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா!

திண்டுக்கல்லில் 'பரமகுரு எண்டர்பிரைஸஸ்' ரொம்பப் பிரபலம். பரமசிவமும் குருசாமியும் அந்நிறுவனத்தின் பாகஸ்தர்கள். வருஷத்தில் ஏழெட்டு லட்சம் ரூபாய் வரை பணம் புரளுகிற பெரிய கம்பெனியாக வளர்ந்து விட்டது. ஆனாலும் வரிகளெல்லாம் கொடுத்தது போக லாபம் என்று இருவரும் பங்கு பிரித்துக்கொள்வது 'டர்ன் ஓவ'ரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சொற்பம் தான். எனினும் மோட்டார் சைக்கிள் முதல் பற்பசை வரை பல பொருள்களுக்கு ஏஜென்ஸி எடுத்துப் பரமசிவமும் குருசாமியும் ஊக்கத்துடன் வியாபாரம் செய்தார்கள். பரமசிவத்துக்குக் குருசாமியை விடப் பத்துப் பதினைந்து வயது அதிகம். இவருக்குச் சுமார் நாற்பது என்றால் அவருக்கு ஐம்பத்தைந்தோ ஆறோ இருக்கும்.

கொஞ்ச நாட்களாகப் பெரியவருக்குக் குருசாமியிடம் நம்பிக்கை குறைந்து விட்டது. வியாபாரம் பெருகியதும் குருசாமி 'தாம் தூம்' என்று செலவு செய்ய ஆரம்பித்திருந்தான். டின்னர், காக்டெய்ல் பார்ட்டி என்றெல்லாம் பணத்தை வாரி விட்டான். பரமசிவம் நயமாகச் சொல்லிப் பார்த்தார். சின்னவன் சிரித்தான். ''உங்களுக்கு மாடர்ன் பிஸினஸ் மெதட்ஸ் தெரியலே. குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக்கிட்டிருந்த காலம் மலை ஏறிடுச்சு. நான் என்ன தண்டச்சோறு போடுகிறேன்? பிஸினஸ் டின்னர்தான் அவ்வளவும். சாப்பிட்டுக்கிட்டே வியாபாரத்தை அபிவிருத்தி பண்ணறது பற்றித்தானே பேசறோம்?''

''அது சரி, நாலு நாட்கள் முன்னாடி ஒரு கேஸ் பீர் வாங்கியிருக்கியே, அதுவும் வியாபார நோக்கில்தானா?''

''பின்னே? நாம் ஏஜென்ஸி எடுத்திருக்கிற கம்பெனிக்காரங்க பம்பாயிலே யிருந்தும் கல்கத்தாவிலே யிருந்தும் வர்றாங்க. அவங்களுக்குக் கோலி சோடா உடைச்சுத் தரச் சொல்றீங்களா? அதிலேருந்து விடுபட்டு வர காஸ் மாதிரி நம்ம வியாபாரமும் புஸ்ஸுன்னு போயிடும். அவங்களோடே நாம பண்ணிக்கிட்ட 'காண்ட்ராக்ட்' முடியற சமயம் வேறே நெருங்கிக்கிட்டிருக்கு.''

பரமசிவத்துக்கு இதில் நியாயம் இருப்பதாகப் படவில்லை. வியாபாரம் செழிக்க நம்பிக்கையும் நாணயமும் தான் முக்கியம் என்ற கொள்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தவர் அவர். இப்போது நாணயம் குருசாமியை விட்டுப் போய்விட்டது. இரண்டு டின்னர் கொடுத்து விட்டு ஆயிரம் ரூபாய் கம்பெனிக் கணக்கில் எழுதினான் அவன். அவருக்குத் தெரியும், குறைந்தது ஐந்நூறாவது அவன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டிருப்பான் என்று. ஒரு கேஸ் பீரோ, அரை கேஸ் விஸ்கியோ வாங்கினால் ஒரு வேளைக்கு வரும் விருந்தினர் அத்தனையையும் குடித்துத் தீர்த்து விடுவது சாத்தியமில்லை. பாக்கி குருசாமி வீட்டில் ஃபிரிஜ்ஜில் அடைக்கலம் புகுந்து அடுத்த பத்து இருபது நாட்களுக்கு இவனுக்கும் இவனது ஆப்த நண்பர்களுக்கும் கண்டு வருகிறது என்பது பரமசிவத்துக்கு நன்றாகப் புரிந்தது.

பழகின தோஷத்தால் பெரியவருக்குச் சட்டென்று துண்டித்துக் கொண்டு போய்விடவும் பிடிக்கவில்லை 'திருந்த மாட்டானா' என்று ஏங்கினார்; பிரார்த்திக்கவும் செய்தார்.

ஒரு நாள் மளிகைக் கடைச் செட்டியார் வந்திருந்தபோது ''இரண்டாயிரத்துச் சொச்சம் பாக்கி நிற்கிறதே, கவனிக்கப்படாதா?'' என்று கேட்டு வைத்தார் பரமசிவம்.

''செக்குப் போட்டு அனுப்பி இரண்டு வாரம் ஆச்சுங்களே'' என்றார் செட்டியார். ''அப்புறம் தம்பிக்கு ஃபோன் பண்ணி வந்து சேர்ந்துதான்னு கூடக் கேட்டுக்கிட்டேனே!''

''அப்படியானா சரி. நான் பழைய ஞாபகத்திலே சொல்றேன் போலிருக்கு'' என்று சட்டெனப் பேச்சைத் திசை திருப்பி விட்டார் பரமசிவம். செட்டியார் எதிரே அவர் குருசாமியை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அவர் போன பிறகு பரமசிவம் கணக்குப் பேரேட்டையும் பாங்கு பாஸ் புத்தகம், சலான் புத்தகம் முதலானவற்றையும் ஆராய்ந்தார். குறிப்பிட்ட அந்தத் தொகை வரவு வைக்கப்படவில்லை.

கம்பெனிக்கு எந்த பாங்கில் கணக்கு உண்டோ அதே பாங்கில் குருசாமிக்கும் பரமசிவத்துக்கும் தனித் தனி, தனி நபர் கணக்குகளும் இருந்தன. பாங்க் மானேஜருக்குப் பரமசிவத்தி



விடம் ரொம்ப மதிப்பு. அதனால் அவர் கம்பெனி பெயரில் வந்த சில செக்குகளைக் குருசாமி தனது சொந்தக் கணக்கில் போட்டுக் கொண்டான் என்ற அளவுக்குத் தகவல் சொன்னார். ஆனால் எத்தனை செக்குகள், எந்தெந்த நாட்களில் இப்படி அவன் கணக்கில் போயிருக்கின்றன என்ற புள்ளி விவரங்களை அவர் தரத் தயாராயில்லை; அது நம்பிக்கைத் துரோகம் என்பதால்.

பரமசிவம் அந்த விவரங்களை அறியத் துடிப்பாகவும் இல்லை. குருசாமி ஏதேதோ தீய பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டான். அதனால் அவனுக்குக் கம்பெனியிலிருந்து தர்ம நியாயமாகக் கிடைக்கும் தொகை போதவில்லை. தில்லுமுல்லுகளில் பெரிய அளவில் இறங்கி விட்டான். இவ்வளவு புரிந்ததே, போதாதா?

கம்பெனி சார்பில் பாகஸ்தர்களில் யாரேனும் ஒருவர் கையெழுத்துப் போட்டால் போதும் என்ற ஒப்பந்தம் நடைமுறையிலிருந்தது. ''அகௌண்ட் பேயி'' என்று போடாமல் விடப்பட்ட செக்கின் பின்புறம் ''பணத்தைக் குருசாமியிடம் கொடுக்கவும்'' என்று எழுதிக் குருசாமியே கம்பெனி சார்பில் கையெழுத்திட்டுத் தன் கணக்கில் கட்டிக் கொண்டான், அல்லது ரூபாயாகவும் வாங்கிச் சென்றான். பாங்கைப் பொறுத்தவரை இதில் சட்டப்படி ஏதும் தவறில்லை. ஏமாந்து போனவர் பரமசிவம்தான்!

அவர் ரொம்ப வருத்தப்பட்டது பணம் நஷ்டமாயிற்றே என்பதற்காக அல்ல; குருசாமி இப்படியாகி விட்டானே என்றுதான். சொந்தச் சகோதரன் போல் பழகிவிட்டிருந்த அவனை அவர் வற்புறுத்திக் கொடைக்கானலுக்கு அழைத்துப் போனார். 'ஹேவன்லி லாட்'ஜில் தங்கிப் புத்திமதி சொன்னார். அவன் தான் தனியே பிய்த்துக் கொண்டு போகத் தயார் என்றான். கம்பெனியைத் துண்டாடவா அவனை இங்கு அவர் அழைத்து வந்தார்? அன்பாக அறிவுரைகள் வழங்கினார். ''உனக்கு என்ன நேர்ந்தது? என்ன சங்கடத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாய்? என்னிடம் சொல்லு; அண்ணனாக எண்ணிக்கொள்'' என்றார் பரமசிவம். குருசாமிக்கு 'போர்' அடித்தது.



அவனுடைய அலுப்பையும் சலிப்பையும் நீக்கத்தானோ என்னவோ அன்று மாலை சந்திராவை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. ஒரே ஒரு மாலை நேர அனுபவம்தான். ஆனால் அந்தச் சிறு பொழுதுக்குள் என்னவெல்லாம் நடந்து விட்டன!

சுமார் ஐந்தரை மணிக்குப் பரமகுரு நிறுவனத்தின் பாகஸ்தர்கள் இருவரும் ஒரு படகை எடுத்துக் கொண்டு ஏரியில் மிதந்து சென்றார்கள். அந்த உல்லாச வேளையிலும் பரமசிவத்துக்குக் கம்பெனியின் நினைவுதான்: குருசாமி இருந்த வேண்டுமே என்ற கவலைதான். அந்த எண்ணத்தில் அவர் பேசிக் கொண்டே போனார். துடுப்புப் போட்ட குருசாமி எதையும் காதில் வாங்கிக் கொள்ளவே யில்லை. அவர் உபதேசம் பண்ணப் பண்ணக் கையிலிருந்த துடுப்பாலேயே அவர் மண்டையில் ஒரு போடு போட்டால் என்ன என்றுகூட எண்ணினான். அந்தத்தருணத்தில் ஏரியின் எல்லையில் கலகலப்பான பேச்சும் சிரிப்பும் அமர்க்களப்பட்ட தானது அவன் கவனத்தைக் கவர்ந்தது. அவன் கண்கள் கரையோரச் சாலையில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த என். ஸி. ஸி. பெண்கள் கோஷ்டியை வட்டமிட்டுச் சுழன்றன. படகை அவன் கரையை நோக்கிச் செலுத்தலானான்.

கண்ணாடித் திரையைப் பார்வை ஊடுருவுவது போல் அவன் மனத்தைச் சுலபமாகப் படித்து விட்டார் பரமசிவம். 'அந்தப் பெண்களிடம் ஏதாவது வம்பு வளர்க்க முடியுமா என்று சோதிக்கத்தான் செல்கிறான் இவன். சே! அவர்களும் இவனுக்குச் சளைத்தவர்களாகத் தோன்றவில்லையே! ஈடு கொடுக்கக்கூடியவர்களாகத்தான் தென்பட்டார்கள்!'

அவருக்கு இக்காலத்திய அல்ட்ரா மாடர்ன் கல்லூரி மாணவிகளிடம் அவ்வளவாக மதிப்புக் கிடையாது. தங்கமான பெண்கள் எவ்வளவோ பேர் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அடக்கத்தை அடிமைத்தனத்தோடு குழப்பிக் கொண்டு அநேகர் தவறிழைக்கிறார்கள் என்று அவர் கருதினார். பாரத நாட்டையே ஒரு பெண் ஆளும்போது பெண்களுக்குப் போதிய சுதந்திரம் தர யாரேனும் தயங்குவார்களா? ஆனால் அந்தச் சுதந்திரம் பல தருணங்களில் துஷ்பிரயோகம் செய்யப் படுகிறது என்று அவர் கருதினார். ஆடை அணி அலங்காரங்களில் மட்டுமல்ல; பெரிய நகரங்களில் சாலையில் ஒருவன் தனியே காரிலோ, மோட்டார் சைக்கிளிலோ சென்றால், இன்றையக் கல்லூரிப் பெண்கள் கொஞ்சம் கூடக் கூச்சமின்றி அவனைத் துணிந்து லிஃப்ட் கேட்குமளவுக்கு அடக்கம் இழந்து விட்டார்கள். இவன்தான் யாராவது தன்னை ஒரு பெண்ணுடன் சேர்த்துப் பார்த்துவிட்டு ஏதாவது கதை கட்டி விடப் போகிறார்களே என்று பயந்து நிற்காமல் ஓட்டிச் செல்ல வேண்டியவனாயிருக்கிறான்! அப்படிப் போகிறவனை 'ஸ்குவேர்' என்றும் கோழை என்றும் இவர்கள் கேலி செய்தார்கள். சுதந்திரமென்பது அடக்கமின்மை அல்ல என்று இவர்களுக்கு யார் எடுத்துச் சொல்வது? தமது வயது காரணமாகவோ அல்லது பெண் குலத்திடம் உண்மையான அக்கறை கொண்டிருந்ததாலோ எவ்வாறாயினும் சரி, பரமசிவத்துடைய அபிப்பிராயம் இதுவாகத்தான் இருந்தது. அதுவும் இன்றைக்கு அவர் இந்த என். ஸி. ஸி. பெண்களைப் பார்த்து விட்டுத் தலையில் அடித்துக் கொள்ளப் போனவர் ரொம்பப் பிரயத்தனப்பட்டுத் தம்மைக் கட்டுப் படுத்திக் கொண்டார்.

''ஏற்கெனவே அடக்கத்துக்கு டாட்டா சொல்லியாச்சு; இன்னும் ராணுவ உடையோடு நடையும் பயின்று துப்பாக்கியும் பிடிச்சாச்சுன்னா அப்புறம் சுட்டுப் போட்டாக் கூடப் பெண்மைக் குணம் எதுவும் எட்டிப் பார்க்காதே! பெரியவங்க வகுத்த நாலு வகை லட்சணங்களுக்கும் முழுக்குப் போட்டாச்சு!'' என்று இவர் குருசாமியிடம் கூறிக் கொண்டிருக்கும் போதே படகு கரையை மிகவும் நெருங்கி விட்டது.


''தாத்தா! என்னையும் படகில் ஏற்றிக்கிடறீங்களா?'' என்று சாலைப் புறமிருந்து கேட்ட குரல் அவரைத் திடுக்கிட வைத்தது. முகம் சிவக்க நிமிர்ந்து பார்த்தார் பரமசிவம்.

கரையிலிருந்த ஏழெட்டுப் பெண்களில் மற்றவர்களைக் காட்டிலும் செழிப்பான தோற்றமுடைய ஒருத்திதான் எல்லாருக்கும் முன்னால் நின்று அவரை அந்தக் கேள்வியும் கேட்டிருக்கிறாள்! தமக்குக் கொஞ்சம் தலை நரைத்து விட்டது என்னவோ உண்மைதான்; ஆயினும் இவ்வளவு பெரிய பெண், மொழுமொழுவென்று ஐந்தரை அடி உயரம் வளர்ந்து விட்டிருப்பவள், தன்னைத் தாத்தா என்று அழைக்கும் அளவுக்குத் தனக்கு வயதாகி விட்டதா? பரமசிவத்தை அவமானம் பிடுங்கித் தின்றது. பல்லைக் கடித்துக் கொண்டு அவர் கோபத்தை விழுங்க முயன்றார்.


PARLE
THIN ARROWROOT
BISCUITS
PARLE'S THIN ARROWROOT
மனங்கவரும்
ஃபாயில் பேக்—
நயமான விலை
இதோ!
புதிய பார்லே
தின் ஆரோரூட்
போஷாக்கான பிஸ்கட்
முரமுரப்பானது, சக்தி மிக்கது—
சுலபமாக ஜீரணமாகிறது!
சாப்பிட ருசியானது!
புதுப் பொலிவுக் குன்றுமல் அமைந்த கவர்ச்சியான பேக்குகளில்
everest/325d/PP tam

சளைக்காமல் மோட்டார் ஓட்டுவோரிடம் பயர்ஸ்டோன் பெற்ற பெயர்

மிக வலிமையான டயர்



அதிக மைலோட்டமும், அதிகப் பாதுகாப்பும், அதிக ரீட்-ரெட் ஏற்கும் தகுதியும் பெறுவதற்கான மும்மடங்கு வலிமையான கட்டுமானம்.

பயர்ஸ்டோன்

இன்றே காண்க அருகிலுள்ள பயர்ஸ்டோன் விற்பனையாளரை.



சிபாரிசு செய்யப்படும் பயர்ஸ்டோன் பாசஞ்சர் கார் டயர் சில்லறை விலைகள்:

அம்பாசடர் 5 . 90-15 ஒயிட் ப்ளாக் 6 PR- ரூ.178·06; 5 . 90-15 பிளாக் 6 PR- ரூ.158·12 • டோரினோ டாக்ஸி ஸ்பெஷல் 5. 90-15 பிளாக் 6 PR- ரூ.173·93 • ஃபியட் 5 . 20-14 ஒயிட் பிளாக் 6 PR- ரூ. 152·62 • ஸ்டாண்டர்டு 5 . 60-13 ஒயிட் ப்ளாக் 6 PR- ரூ. 167·47; 5 . 20-13 ஒயிட் பிளாக் 6 PR- ரூ. 162·77 • வில்லிஸ் ஜீப் 6 . 00-16 GGND 6 PR- ரூ.225·00 (விற்பனை வரி & தலவரிகள் தனி).

FOCUSG-6 H (R)TM

இதற்கிடையில் குருசாமி அட்டகாசமாகச் சிரிக்க ஆரம்பித்து விட்டான். படகைக் கொக்கி போட்டது போல் கரைப் பக்கம் இழுத்துக் கொள்ளவும், நிலத்தைக் குத்திப் படகை நீரில் தள்ளிக்கொள்ளவும் ஒவ்வொரு படகிலும் ஓர் ஆயுதம் உண்டு. அதைப் பயன்படுத்திப் படகைக் கரையில் முட்டிக் கொண்டு நிற்கச் செய்தான் சின்னவன். பக்கத்தில் நின்றவளைப் பார்த்துச் சொன்னான்: ''இந்தப் படகு இரண்டு பேர் ஏறத்தான் ஏற்பட்டது. பேத்திக்குத் தாத்தா மடியில் உட்கார ஆசைன்னா தாத்தாவுக்கு ஆட்சேபணை இல்லே!''

உடனிருந்த தோழிகள் அவளை 'ஹோ ஹோஹோ' என்று ஒரேயடியாக 'வாரி' விட்டார்கள். முதலில் துடுக்காகப் பேசியவளுக்குக் குருசாமி விட்ட சவாலை ஏற்பதா வேண்டாமா என்ற தர்மசங்கடமான ஒரு நிலை ஏற்பட்டுப் போயிற்று.

''ஏம்மா குழந்தை பயமா இருக்கா?'' என்றான் குருசாமி.

'ஹோ! ஹோ!' என்ற ஏளனக் கூக்குரல் மறுபடியும் அவள் சிநேகிதிகளிடமிருந்து கிளம்பியது. அவளால் இதைப் பொறுக்க முடியவில்லை. ''தாத்தா பக்கத்தில் இருக்கிறப்போ எனக்கென்ன பயம்?'' என்று கேட்டபடி படகில் இறங்கி விட்டாள். குருசாமி வேண்டுமென்றே அச்சமயத்தில், கொக்கி போட்டது போல் படகைக் கரையோடு இழுத்துப் பிடித்திருந்த கூரிய ஆயுதத்தை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளவே, படகு ஒரேயடியாக அசைந்தாட அவள் பரமசிவத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள், தான் தண்ணீரில் விழுந்து விடாதிருக்க.

ஏற்கனவே வெலவெலத்துப் போயிருந்த பரமசிவம் மேலும் தவித்துப் போனார். தாலி கட்டிய மனைவியைத் தவிர அவர் இத்தனை ஆண்டுகளில் வேறு ஒரு பெண்ணைத் தவறிக்கூடத் தொட நேர்ந்ததில்லை. சமீப காலமாக அவர் தம் மனைவியைக் கூட அதிகமாக நெருங்கியதில்லை. இப்போது இந்தத் திடீர் ஸ்பரிசத்தினால் இன்பமயமான உணர்ச்சி அலைகள் உடல் முழுதும் ஜிவ்வென்று பாய்ந்தன. அதே சமயம் சொல்லி முடியாத கூச்சமும் அருவருப்பும் அடைந்தார். அந்தப் பெண்ணோ அவர் சற்று வயதானவர் என்பதால் ரொம்பச் சுவாதீனமாக நடந்து கொள்வது போல் காட்டிக் கொண்டு அவருக்குப் பக்கத்தில் இடித்த மாதிரி உட்கார்ந்து ''ஓகே! போகலாம்!'' என்றாள்.

மற்றொரு படகில் இருந்தபடி இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த போட் கிளப்பைச் சேர்ந்த ஒரு படகுக்காரன் கூறினான்: ''நீங்க செய்யறது நியாயம் இல்லிங்க. ஒவ்வொரு படகிலும் எத்தனை பேர் ஏறுறாங்கன்னு பார்த்துத் துறையிலே பணம் வசூல் பண்ணுறாங்க. அங்கே இரண்டு பேருக்குக் காசு கொடுத்துட்டு இங்கே வந்து மூணாவது நபரை ஏற்றிக்கிடலாமுங்களா?''

பரமசிவத்துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. 'இந்தப் பெண் என்னைக் கேலி செய்ததோடு என் பக்கத்தில் உட்கார்ந்து அவமானப்படுத்துவது பற்றிய நியாய அநியாயம் இவன் கண்ணுக்குத் தென்படவில்லை; ஒரு ரூபாய் பணத்துக்காகப் புலம்புகிறான்!' என்று நினைத்தார். கூடவே, 'அவன் கடமையை அவன் செய்கிறான்; இதற்கு அதிகமாகப் பேச அவனுக்கு அதிகாரம் ஏது?' என்ற எண்ணமும் எழுந்தது.

அந்தப் பெண் தன் நெஞ்சின் வலது புறம் இருந்த பாக்கெட்டிலிருந்து ஐந்நூறு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து இடது புறம் இருந்த பாக்கெட்டில் போட்டுக் கொண்டாள். ''நான் நினைத்தால் இந்தப் போட் கிளப்பையே விலைக்கு வாங்கி விடுவேன்; இவன் பிச்சைக் காசு நூறு பைசாவுக்குக் கண்ணீர் விடறான்'' என்று கூறிச் சிரித்தாள்.

பரமசிவத்துக்கு ஆத்திரமே மூண்டு விட்டது. பணத் திமிர் எத்தனையோ பேரிடம் இருந்து அவர் கண்டதுண்டு. ஆனால் அது இத்தனை அசிங்கமான முறையில் வெளிப்பட்டு அவர் இது வரையில் பார்த்ததில்லை. குருசாமியோ அவள் கூற்றை ரொம்பவும் ரசித்தான் என்பது தெரிந்தது. ''போட்டீங்களே ஒரு போடு!'' என்று பலமாகத் தலையாட்டி அவளை ஆமோதித்து விட்டு விசையுடன் துடுப்பு வலித்தான்.

போட் கிளப்பைச் சேர்ந்த படகுக்காரனும் அதிகமாக ஏதும் வம்பு வளர்க்காமல் போய்விட்டான்.

கரையில் இருந்த என். வி. வி. பெண்களின் கண்களில் அந்தப் பக்கம் வந்த இரண்டு மூன்று குதிரைக்காரர்கள் தட்டுப்பட்டு விட்டார்கள். அவ்வளவுதான்; தங்களில் யார் யார் முதலில் குதிரை சவாரி செய்வது என்று போட்டியிட ஆரம்பித்தனர். வென்ற மூவர் குதிரைகள்மீது ஆரோகணித்ததும் அம்மூவரில் யார் குதிரையை வேகமாகச் செலுத்த முடியும் என்பதில் மீண்டும் போட்டி ஏற்பட்டது. சாலையிலிருந்த காக்கி உடையினர் சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்யக் குதிரைகள் ஓட்டம் எடுத்தன. பரமசிவம் குதிரை

சவாரி செய்யும் மூன்று பெண்களையும் நோக்கினர். அதற்கு முன்னால் அவர்கள் குதிரை ஏற்றம் பழகியவர்கள் அல்ல என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. அக்கலையை நன்கு பயின்றதால் ஏற்படும் லாகவமோ ஒயிலோ நளினமோ ஏதுமில்லாமல் அவர்கள் 'திங்கு திங்கு' என்று எழும்பி விழுந்த படி சென்றார்கள். 'கண்ணராவி' என்று அவர் வாய் முணுமுணுத்தது. பெண் இனத்தின் மீதே அவருக்குக் கட்டுக் கடங்காத கோபம் பெருகியது.

இதற்குள் குருசாமி படகைச் செலுத்திக் கொண்டு ரொம்ப தூரம் வந்து விட்டான். அவனுக்கு இந்தப் பெண்ணை எதிரே வைத்துக் கொண்டு படகைச் செலுத்துவது ஒரு கிளுகிளுப்பை அளித்தது என்பதைப் பரமசிவம் அவன் முகத்தைப் பார்த்தே நன்றாக உணர்ந்துகொண்டார். இவளையும் இவளுடைய தோழிகளையும் போலவும் இவர்களை விடக்கூட மோசமாகவும் சில பெண்கள் நடந்து கொள்வதால் தானே ரொம்ப ரொம்ப யோக்கியமாக இருந்த குருசாமி போன்றவர்கள் கூடக் கெட்டு அலைகிறார்கள் என்று எண்ணினார். ஓர் ஆவேசமே ஏற்பட்டு அவருக்கு நெஞ்சை அடைத்தது. கரங்கள் நடுங்கின.

''கொடைக்கானலில் எத்தனை நாட்கள் காம்ப் சந்திரா?'' என்று குருசாமி கேட்டான். அவள் சிநேகிதிகள் அவளைப் பெயர் சொல்லி அழைத்ததை அவன் கேட்டுக் கவனத்தில் வைத்திருந்தான்.

''ஒரு வாரம்'' என்றாள் சந்திரா. ''வந்து ரெண்டு நாள் ஆச்சு. ஓய்வே கிடைக்கலே. டிரில்; மார்ச், ரைப்பிள் ப்ராக்டீஸுன்னு மாற்றி மாற்றி உசிரை வாங்கிகிட்டிருக்காங்க.''

''ஓகோ! அதனால்தான் இன்னைக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைச்சதும் உற்சாகம் கரை புரண்டு ஓடுதாக்கும்?''

''ஆமாம்; எங்களுக்கு வந்து வாய்ச்சிருக்கிற கமாண்டண்ட் ரொம்பக் கறார் பேர்வழி. வதக்கி எடுத்துப்புடுவான். ஆஃப் டைம் கிடைச்சதும் ஒரே குஷி எங்களுக்கு. தலைகால் புரியலே.''

''ஆனந்தகிரிக்குப் பக்கத்தில் தான் காம்ப் போட்டிருக்கீங்க போலிருக்கே? அங்கிருந்து பார்த்தால் பெருமாள் மலை நல்லாத் தெரியும். அதன் உச்சிக்கு 'ஹைக்கிங்' போயிட்டு வாங்க. ஐம்பது பேர் கிளம்பினீங்கன்னா ஒருத்தர் உச்சியை அடைந்தால் பெரிய காரியம்.''

''போதும், போதும்! இப்போ எங்க ஆஃபீஸர் எங்களைப் பிராணனை வாங்கறதையே சமாளிக்க முடியலே.''

பரமசிவம் குறுக்கிட்டார். ''சரி தான்! எல்லைப் பாதுகாப்புக்கு அனுப்பிச்சால் பன்னிரண்டாயிரம் அடி உயரமுள்ள இமயமலைச் சிகரங்களில் ஏறணுமே! பெருமாள் மலைக்கே பயந்தால் எப்படி? மட்டக் குதிரை ஓட்டத்திலேயும் தாத்தாவுக்குப் பக்கத்தில் வெட்கப்படாமல் உட்காருவதிலேயும் வீரத்தைக் காட்டினால் போதுமா?''

சந்திராவுக்காகக் குருசாமி பதில் சொன்னான்: ''எல்லைக்கு அனுப்பிப் பார்க்கட்டுமே! சீனாக்காரன் பொம்பளைங்களைப் பார்த்ததுமே பல்லை இளிச்சுத் துப்பாக்கியைத் தொங்கப் போட்டுடுவான்! அப்புறம் வெற்றி இவங்களுக்குத்தான்!''

சந்திரா ஒரேயடியாகச் சிரித்தாள். ''ரொம்ப ஃபன்னியா பேசறீங்க, ஸார்!'' என்றாள்.

''இதென்ன பிரமாதம்? உடம்பிலே கொஞ்சம் உஷ்ணம் ஏறிச்சுன்னா இதை விட அபாரமான ஜோக்குகளெல்லாம் தோணும். ஆனால் இந்த மனுஷன் தான் இங்கே வந்ததிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணி உள்ளே செலுத்த விடாமல் குறுக்கே நிற்கிறார். இக் இல்லாத கொடைக்கானல் சொத்தைக் கானல்தான் என்றால் கேட்டால் தானே?''

சந்திரா பரமசிவத்தை முதுகில் தட்டிக் கொடுத்தாள். ''தாத்தா! ரொம்பக் கண்டிப்புக் காட்டாதீங்க. அது உங்களுக்கே ஒருவேளை ஆபத்தாக முடிஞ்சாலும் ஆச்சரியப்படறதுக்கில்லே! என்னோட டாடிக்கு ஒருத்தன் இந்தமாதிரி தான் சும்மா சும்மா உபதேசம் பண்ணிக் கழுத்தறுத்தான். ஒரு நாளைக்கு அவன் வீட்டுக்கு வந்திருந்தபோது என் அப்பா, 'ஆப்பிள் ஜூஸ் சாப்பிடுங்க'ன்னு கொடுத்தார். அவ்வளவு தான்; மறுநாளே திரும்பி வந்துவிட்டான். 'பட்டணம் முழுதும் தேடி அலைஞ்சேன். நீ கொடுத்த மாதிரி ஆப்பிள் ஜூஸ் ஒரு இடத்திலும் கிடைக்கலேடா கொஞ்சம் தயவுபண்ணு' என்றான்! 'லாகர்ன்னு கேட்டா கிடைக்கும்'னு என் அப்பா விளக்கின பிறகு தான் அவனுக்கு விஷயம் புரிஞ்சுது. புரிஞ்சு என்ன பண்ணறது? ருசி கண்ட பூனையாகி விட்டானே!''

இப்படிப் பேசிக் கொண்டே மிதந்ததில் நேரம் போனதே தெரியவில்லை, சந்திராவுக்கு. திடுதிப்பென்று இருட்டிக்கொண்டு வந்தது. ''அடடா ரொம்ப லேட் ஆயிடுச்சே! நான் காம்புக்குத் திரும்பணுமே. நேரம் தப்பிப் போனால் பாட்டுக் கேட்கணுமே?''

என்றாள் சந்திரா. ''கரையோரமாக என்னை இறக்கி விட்டுடுங்க, ஓட்டம் பிடிக்கிறேன்!''

குருசாமி அவள் விருப்பத்துக்கு இசைந்து நடந்து கொண்டான். படகு கரை தட்டியதும், அவள் டாட்டா சொல்லிவிட்டுச் சாலையில் விரைந்து சென்று கண்ணுக்கு மறைந்தாள்..

''நமக்கும் லாட்ஜ் இங்கேயிருந்து கிட்டம்தான். போகலாம்'' என்றான் குருசாமி.

''படகு?'' என்று கேட்டார் பரமசிவம்.

''போட் கிளப் ஆளுங்க யாராவது வந்து கொண்டு போய்க்கிடுவாங்க, இருள் கவிந்து வரும் சமயமாகிவிட்டால் நீங்கள் தங்கள் வீடோ அல்லது ஹோட்டலோ இருக்கும் இடத்துக்குச் சமீபம் கரையோரமாகப் படகை விட்டுட்டுப் போறது இங்கே சகஜம் தான்'' என்று சொல்லி ஒரு மரத்தின் வேரோடு படகை இழுத்துக் கட்டினான் குருசாமி.

''நீ போ! நான் கொஞ்சநேரம் பொறுத்து வரேன்'' என்றார் பரமசிவம். ''எனக்கு மனசு சரியில்லே; இப்படியே இந்தப் பெஞ்சில் சற்று நேரம் உட்கார்ந்திருந்து விட்டு வரேன்.''

''ரொம்ப நேரம் தாமதிக்காதிங்க. பனி உங்களுக்கு ஒத்துக்காது'' என்று கூறிவிட்டுக் குருசாமி நகர்ந்தான். ஆளை விட்டால் போதும் என்றிருந்தது அவனுக்கு. லாட்ஜில் பெட்டிக்கடியில் திறக்கப்படாத விஸ்கி பாட்டில் ஒன்று முழுசாக இருந்ததானது அவன் நடையைத் துரிதப்படுத்தியது.

பரமசிவம் பெஞ்சில் கூனிக் குறுகி அமர்ந்தார். குருசாமி தம்மையும் கம்பெனியையும் ஏமாற்றியதோடு அல்லாமல் அது பற்றி அலட்சியமாகப் பேசியது அவருக்கு ரொம்ப மன வேதனையை அளித்திருந்தது. மேலும் அந்தப் பெண் சந்திரா வேறு இன்றைக்கென்று வந்து சேர்ந்தாள். குருசாமி எதிரே தம்மைக் கிண்டல் செய்ததோடு, அவன் பக்கமாகவே சேர்ந்து கொண்டு தம்மை இளக்காரமாகப் பேசி 'இறக்கி'னாள். 'சே! பெண்ணா அவள்! ராட்சசி! அழகி வேஷம் போட்டிருக்கும் சூர்ப்பனகை!'

தற்செயலாக அவர் பார்வை படகில் அவள் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் விழுந்தது. மழுங்கிய ஒளிச் சூழலிலும் அங்கே ஏதோ பளபளக்கிறதே என்ன அது? எழுந்து வந்து அதைக் கையில் எடுத்துப் பார்த்தார். அவள் தலையில் அணியும் தொப்பி, உலோகத்தாலான என். வி. வி. சின்னத்துடன் காணப்பட்டது. கரையோரமாக நின்றபடியே மெல்ல விரல்களால் அந்தத் தொப்பியைத் தடவினார். 'அரக்கியானாலும் அழகிதான்' என்று அவர் உள்ளம் எடை போட்டது. 'குறுகுறுப்பான கண்கள், விஷமப் புன்னகை, எடுப்பான தோற்றம். சீ! எப்படியெல்லாம் அவள் என்னை இன்று அவமானப்படுத்தி விட்டாள்! இப்போது மட்டும் அவள் என் கையில் அகப்பட்டால் ....' அவர் விரல்கள் தலைப்பாகையைக் கசக்கின.

''தாத்தா! என்ன இப்படித் தனியாக நின்னுக்கிட்டிருக்கீங்க? லாட்ஜுக்குத் திரும்பலையா?'' என்ற குரல் கேட்டதும், தம் காதுகளையே நம்ப முடியாதவராகத் திரும்பினார் பரமசிவம். 'சந்தேகமே யில்லை! சந்திரா தான்! அந்தச் சூர்ப்பனகையேதான்!

'இதிகாச நாயகர்கள் இதிகாச காலத்தில் சூர்ப்பனகையிடம் ரொம்பக் கௌரவமாக நடந்து கொண்டார்கள். ஆனால் இந்த நான் சூர்ப்பனகைகளை அப்படி யெல்லாம் இலேசாகத் தண்டித்து விட்டு விடக் கூடாது! ஆசையை மூட்டிவிட்டு அப்புறம் சாதுவாக மாறிக் கையை விரிப்பது எவ்வளவு விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும்!' அல்ட்ரா மாடர்ன் அலங்காரிகள் அனைவருக்கும் ஏகப் பிரதிநிதியாகச் சந்திரா அவர் முன்னே நின்றாள் அப்போது. 'இவளுக்குப் பாடம் கற்பித்தால் அவர்கள் அத்தனை பேரையும் பழி வாங்கியதாகாதா? ''முடியுமா?'' என்று சவால் விட்டு ஏளனமாய் நோக்குபவர்களுக்கு ''முடியும்'' என்று நிரூபித்துக் காட்டி விட்டால்தான் அவர்கள் கொட்டம் அடங்கும்!'

''இதைத் தேடிக் கொண்டுதானே வந்தாய்?'' என்று தொப்பியைக் காட்டினார் பரமசிவம்.

''ஓ! அவசரத்தில் இதையும் மறந்து விட்டேனா?'' என்று கேட்டபடி கரத்தை நீட்டினாள் சந்திரா.

நீண்ட கரத்தைப் பற்றி இழுத்தார் பரமசிவம். எதிர்பாராத தாக்குதலில் அவள் திகைத்து வாய் திறந்து காற்றை உள்ளுக்கு இழுத்தாள். பிரிந்த உதடுகள் மீண்டும் மூடிக் கொள்வதற்குள் அவர் அவளை ஏரிக் கரையோரம் பசும் புல் தரையில் கிடத்திவிட்டார். ''ருத்திராட்ச பூனையே!'' என்று வைத அவள் வாய் மேலும் கூச்சலிடாதபடி பரமசிவத்தின் இடக் கரம் அழுத்திப் பொத்திக் கொண்டது. வலக் கரம் தனிமையையும் இருளையும் துணை கொண்டு திரிய ஆரம்பித்தது.

(தொடரும்)



விஷக் கிருமி

அவள் எழுதின அரை குறைக் கதை 3

(பயங்கரமான தொத்து நோய்க் கிருமிகள், ஆஸ்பத்திரி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து திருட்டுப் போய்விட்டன. போலீஸார் திருடனைக் கண்டு பிடிப்பதில் தீவிரமாக உள்ளனர். - செய்தி)

ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணன் எழுதியது

பிரபல ஆஸ்பத்திரியின் ஆராய்ச்சி நிலைய மொன்றிலிருந்து கொடிய தொத்து நோய்க் கிருமிகள் காணுமற் போனதைத் தொடர்ந்து மாகாணம் முழுதும் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. பத்திரிகை வாயிலாகவும், ரேடியோ மூலமாகவும் பொதுமக்களை எச்சரித்தது அரசாங்கம். அந்தக் கிருமிகளைக் களவாடிச் சென்ற முகம் தெரியாத மனிதனுக்கே பின் வரும் வேண்டுகோள் விடுத்தது — 'அந்த விஷக் கிருமிகளை உடனே தரையில் புதைத்து விடு. இல்லாவிட்டால் உனக்கே ஆபத்து நேரலாம். புதைத்த இடத்தை எங்களுக்குத் தெரிவிப்பாயாக.....'

நான்கு நாட்களுக்குப் பின் பிரபல நட்சத்திரம் அஞ்சலையின் அம்மாவும், மாஜி நடிகையுமான கற்பகாம்பாள், மேலே குறிப்பிட்ட கொடிய தொத்துநோயில் மடியவும், போலீஸ் நாய்களுக்கு வேலை ஏற்பட்டது. அபூர்வமாகத் தோன்றும் கொடிய வியாதி அது. கிருமிகள் உணவில் கலந்தால்தான் நோய் ஏற்பட ஏது உண்டு. காற்றில் பரவக் கூடிய வியாதி இல்லை அது.

மாஜி நடிகை கற்பகாம்பாளின் இரத்தத்தைப் பரிசோதித்த டாக்டர்கள் அதில் ஏராளமான நோய்க் கிருமிகள் இருந்ததைக் கண்டு வியந்ததுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. வேண்டுமென்றே யாரோ உணவில் நோய்க் கிருமிகளைக் கலந்து கொலை செய்திருக்கிறார்கள் என்று நிரூபணமாகக் கூறினார்கள்.

கொலை செய்தது யார் ?

கற்பகாம்பாளைப் போன்ற" தெய்வ நம்பிக்கை மிகுந்த நடிகையை யார் கொன்றிருப்பார்கள்? 'பக்த நனாயினி' என்ற படத்தில் நடித்த நாளிலிருந்து . கற்பகாம்பாளின் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டிருந்தது. அவர் நடிப்பதிலிருந்து 'ரிடையர்டு'த் தென்னாட்டுத் திருக்கோயில்களை வலம் வந்து கொண்டிருந்தார். பேட்டி காணச் சென்ற சினிமாப் பத்திரிகைகளின் நிருபர்களுக்குக் காப்பி தந்தாரோ இல்லையோ, முருகன் பிரசாதமான விபூதி தந்தார். பத்திரிகை நிருபர்களிடையே இது ஒரு 'ஜோக்' காகக்கூட மாறியிருந்தது. யாராவது திருநீறுடன் காட்சி தந்தால், ''கற்பகாம்பாளைப் பார்த்துவிட்டு வருகிறீராக்கும்'' என்று கேட்பது வழக்கமாகிவிட்டது. சாமியார்களும், பூசாரிகளும் அவர் குடியிருந்த வீட்டை வலம் வந்தார்கள். மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டு ஒரு பூசாரி வீட்டில் தினசரி பூஜை வேறு செய்து வந்தார் !

இவ்வளவு புனிதமான வாழ்க்கையை நடத்தி வந்த நடிகையை யார் கொலை செய்திருப்பார்கள் என்பது போலீசுக்குப் பெரும் பிரச்னையாயிற்று. உணவில் கிருமிகள் கலக்கப்பட்டிருந்ததினுல் சமையற்கார அங்கதன் மீதுதான் முதலில் சந்தேகம் விழுந்தது. அறுபது வயதுக்கு மேலான அவன் இருபது ஆண்டுகளாக நடிகை வீட்டில் பணியாற்றி வந்தான். 'மிகவும் நம்பிக்கையானவன்' என்று அஞ்சலை 'சர்டிபிகேட்' தந்தும்கூடப்

போலீஸ் அவனை விட்டபாடில்லை. ஆனால் அவன் எதற்காகக் கொலை செய்ய வேண்டும் என்பதுதான் போலீசுக்குப் புரியவில்லை.

நடிகை கற்பகாம்பாளின் மாஜிக்கணவரும், அந்தக் காலத்து ஹாஸ்ய நடிகருமான குண்டுராவையும் சந்தேகித்தது போலீஸ். குடிகார குண்டுராவுடன் வாழப் பிடிக்காமல் கற்பகாம்பாள் தனித்து வந்து எத்தனையோ ஆண்டுகள் மறைந்துவிட்டன. இருந்தும் குண்டுராவ் அவளைப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்தார். அவர் எழுதின பயமுறுத்தல் கடிதம் ஒன்று போலீஸ் கையில் சிக்கியது. உடனே அவர்கள் கதை ஜோடித்துவிட்டார்கள், நோய்க் கிருமிகளைத் திருடிச் சமையற்காரர் அங்கதனிடம் தந்தது அவர்தான் என்று! ஆனால் குண்டுராவை 'அரெஸ்ட்' செய்ய அவசர அவசரமாக விமானத்தில் பறந்த போலீஸ் அதிகாரிகளை ஏமாற்றம் எதிர்கொண்டழைத்தது. கெட்டிக்கார குண்டுராவ் வம்பு தும்பிலெல்லாம் மாட்டிக் கொள்ள விரும்பாது இந்த உலகத்தைவிட்டே மறைந்திருந்தார். ஆனால் கடைசி நிமிஷம் வரையில் கற்பகாம்பாளைப் பழி வாங்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாராம்! ''என் வாழ்க்கையைப் பாழாக்கின கிராதகியை நான் சும்மாவிட மாட்டேன். என்னால் பழி வாங்க முடியவில்லை. என்றாலும் என் பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் வஞ்சம் தீர்த்துக் கொள்வான்'' என்று ஜுர வேகத்தில் அவர் பிதற்றினதாகக் கேள்வி.

குண்டுராவின் இரண்டாவது மனைவியையும் பிள்ளைகளையும் தேடிச் சென்றது போலீஸ். பலனில்லை. ஏனென்றால், அவர் மனைவி ஊமை. எழுத்தும் படிப்பும் கிடையாது. குண்டுராவின் சந்ததிகள் எங்கெங்கோ இருந்தார்கள். ஒருவருக்கொருவர் பேச்சு வார்த்தை கிடையாதாம்! பின் எப்படி விலாசம் கிடைக்கும்? எவ்வளவு சிரமப் பட்டும் துப்பு ஏதும் துலங்கவில்லை.

ஆஸ்பத்திரி ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் நபர்களைக் குடையத் தொடங்கினார்கள் போலீஸ்காரர்கள். நோய்க் கிருமிகள் இருந்த கிண்ணத்தைக் கையாண்டு வந்த ஜோசப்பிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். அவன் தனக்கு எதுவுமே தெரியாது என்று சாதித்தான்.

ஜோசப்பை விசாரித்துக் கொண்டிருக்கையில்தான் டாக்டர் சந்திரஹரியைப் போலீஸார் காண நேர்ந்தது. உள்ளூரில் 'பிரைவேட்' பிராக்டீஸ் செய்யும் அவர் ஆஸ்பத்திரி ஆராய்ச்சி நிலையத்துக்கு அடிக்கடி வருவாராம். இருந்திருந்தாற்போல் துப்பறியும் ராம்ஜிக்கு ஏனோ அவர் மீது சந்தேகம் விழுந்தது. தொடர்ந்து அவரை 'ஷாடோ' செய்யத் தொடங்கினார். ஆனால் கொலையுடன் அவர் பெயரை இணைப்பதற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. இனிமேல் அவரைப் பின் தொடர்ந்து செல்வதில் பலனில்லை என்று அவர் தீர்மானிக்கையில்தான், டாக்டர் சந்திரஹரி காளி கோயில் பூசாரியுடன் அந்தரங்கமாகப் பேசுவதைக் கவனிக்க நேர்ந்தது. நடிகை அஞ்சனா வீட்டில் பூஜை செய்வது அந்தப் பூசாரிதான் என்று அவருக்குத் தெரியும். ஆனால் அவசரப்பட்டு அவரால் எந்த முடிவுக்கும் வந்துவிட முடியவில்லை.

ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணன் எழுதி நிறுத்திய இந்த அரைகுறைக் கதையை இனி பாலகிருஷ்ணன் முடித்து வைக்கிறார்:

வீட்டுக்குள் நுழைந்த ராம்ஜி, தாயார் பூஜை செய்து கொண்டிருந்ததைக் கண்டு கதவு ஓரமாக ஒதுங்கி நின்றார். பூஜை முடிந்ததும், பிள்ளைக்கு விபூதி தந்தார் தாயார். அடுத்த நிமிஷம், ராம்ஜி வெளியே ஓடினார். அடுத்த அரை மணி நேரத்துக்குள் டாக்டர் சந்திரஹரியும், பூசாரியும் 'அரெஸ்ட்' செய்யப்பட்டார்கள். அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். வேறு வழி?

''இவ்வளவு சிக்கலான கேஸை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?'' என்று பத்திரிகை நிருபர்கள் கேட்க, ''எல்லாம் விபூதியின் மகிமை'' என்று மழுப்பினார் ராம்ஜி.

தாயார் பூஜை முடிந்து விபூதி தந்ததும் அதை நெற்றியில் இட்டுக் கொண்டார் ராம்ஜி. தொடர்ந்து அவர் கை தாமாகவே வாயை நாடியது. கொஞ்சம் விபூதியை வாயில் போட்டுக் கொள்வதற்காகத்தான்!

காலஞ்சென்ற கற்பகாம்பாளுக்கும் நெற்றியில் விபூதியைப் பூசிக் கொண்டபின் வாயில் போட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கலாம் என்று தோன்றியது ராம்ஜிக்கு. டாக்டர் சந்திரஹரி நோய்க் கிருமிகளை விபூதியில் கலந்து பூசாரி மூலமாகக் கற்பகாம்பாளுக்குத் தந்திருக்கலாமல்லவா ?

ஆனால் டாக்டர் சந்திரஹரி எதற்காக மாஜி நடிகை கற்பகாம்பாளைக் கொல்ல வேண்டும் ? இந்தக் கேள்விக்குப் பதில் கண்டு பிடிப்பதற்காக டாக்டர் சந்திரஹரியின் குடும்ப வரலாற்றை அலசினார் துப்பறியும் ராம்ஜி. அவர் குண்டுராவின் பிள்ளைகளில் ஒருவர் என்று கண்டுபிடிக்கத் துப்பறியும் நிபுணருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை !



கல்கியின் முப்பத்திரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தில் முதல் இதழுக்குக் கவிமணி அளித்த வாழ்த்தை நினைவுகூர்கிறோம்!

புத்தம் புது மலர்கள் பூக்குமே வண்டினங்கள்
சித்தம் மகிழ்ந்துண்ணச் சேருமே — நித்தமும்
பல்கி வளரும் பசுந்தமிழ்ச் சோலையாம்
கல்கி படர்ந்து வருங்கால்.

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

வண்ணப்படம்: வித்யாசங்கர்



ரேடியோவின்
சிறந்த
கட்டங்களுக்கு
எஸ்ட்ரெலா வின்
சிறந்த ரேடியோ பாட்டரிகள்

நீங்கள் விரும்பும் இன்னிசையை காதச் செழுமையோடு நிறைவுடனே ஒலித்திடச் செய்வது கூடுதலான சக்திசெறிந்த எஸ்ட்ரெலா பேட்டரிகள். காகித, பிளாஸ்டிக், உலோகக் கவச உறைகளிட்ட, பேட்டரி வகைகள் உள்ளன நீங்கள் தேர்ந்தெடுக்க. கசியாத் தன்மை உடையவை. அவை நெடுங்காலம் உழைப்பவை. டார்ச்சுகளுக்கும் இவையே சிறந்தவை, ஓங்கிய ஒளியையும் நம்பிக்கையான உழைப்பையும் தருபவை.



எஸ்ட்ரெலா
பேட்டரிகள்
அதிக சக்தி அதிக உழைப்பு
எஸ்ட்ரெலா பேட்டரீஸ்
லிமிடெட், பம்பாய்-19.

FOCUS-JB. (G) TH

பொற்பணிக்கு முத்து விழா

ஸ்வாமி விவேகானந்தர் வேதாந்த சிங்கமாக மேநாடுகளில் கர்ஜனை புரிந்துவிட்டுத் தாயகம் திரும்பிச் சென்னையில் தங்கியிருந்த சமயம். சென்னை மாநகரம் அவரது வருகையால் புதியதோர் ஆன்மிக விழிப்புப் பெற்றிருந்தது. இன்று விவேகானந்தர் இல்லம் என்று அழைக்கப்படும் அன்றைய கேர்னன் மாளிகையில் ஸ்வாமிஜியுடன் உரையாடிக் கொண்டிருந்தவர் நகர முக்கிய புருஷர்களான ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும், ஸ்ரீ பி. ஆர். சுந்தரய்யர் அவர்களும். விவேகானந்தர் விடை கொண்டவுடன் சென்னையின் ஆத்மிகக் கனல் தணிந்து நீற்றுப் போய்விடாதவாறு சென்னையில் ஒரு ராமகிருஷ்ண மடம் ஏற்படுத்தப்பெற வேண்டும் என்று அவர்கள் ஸ்வாமிஜியிடம் கோரினர். அவர்களோடு கேர்னன் மாளிகை மாடிப் படிகளில் ராஜ கம்பீரமாக இறங்கி வந்த ஸ்வாமிஜியின் முகத்தில் உற்சாகம் ததும்பியது. அப்பெருமக்களைப் பார்த்து, "உங்கள் தக்ஷிண தேசத்தில் வைதிகப் பண்பும், பூஜையும், தியானமும் நிறைய இருக்கின்றன. இவற்றிலெல்லாம் உங்கள் சீமைவாசிகளைவிடத் தேர்ந்த ஒருத்தரை அனுப்பி வைக்கிறேன்" என்றார்.

ஸ்வாமி விவேகானந்தரால் அவ்விதம் உயர்வாகக் குறிப்பிடப்பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகள் எழுபத்தைந்தாண்டுகளுக்கு முன் சென்னை மாநகருக்கு வந்து சேர்ந்தார். ராமகிருஷ்ண தர்மம் என்கிற ஆத்ம சஞ்சிவினியைப் புண்ணியத் தமிழ் நாட்டில் பயிர் செய்கிற பண்ணையாக ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை அந்த மகாபுருஷர் சென்னையில் ஸ்தாபித்தார்.

இன்று சென்னை மாநகரம் மட்டுமின்றித் தமிழகத்தின் அத்யாத்ம வாழ்விலேயே ஒரு முக்கியமான இடம் பெற்றுவிட்ட மயிலை ராமகிருஷ்ண மடத்தின் மூலபுருஷரான ஸ்ரீ ராமகிருஷ்ணானந்தர், பரமஹம்ஸரின் முக்கியமான நேர் சிடர்களில் ஒருவர். அவருக்கு வேதாந்த விசாரம், தியானம், ஜபம் எல்லாவற்றையும்விட, குருநாதனின் பணியே முக்கியமாக இருந்தது. மற்ற சிடர்களைப் போல் அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சந்தேகங்கள் கேட்டு விளக்கம் பெறவும் அவசியம் இருக்கவில்லை. குரு கருணை ஒன்றைத் தவிர, மோட்சம் உள்பட எதிலுமே ஆசை வைக்காமல், ஸ்ரீராமனுக்கு ஆஞ்சநேயர் போல் பரமஹம்ஸரிடம் இருந்தார் அவர்.



ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை



சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் பூஜை அறை



அதனாலேயே இவர் கேட்காமலேயே அந்த மகாகுரு இவருக்கு ஒப்பற்ற தாய்மையையும் பூரண ஞானத்தையும் அநுக்கிரகித்து விட்டார்.

குருநாதன் இறுதியாகக் கண்ணை மூடும் போது தலையணையை அவரது கழுத்துக்கு இதமாகப் பிடித்துக் கொண்டு விசிறிய சசிபூஷணர் (ராமகிருஷ்ணானந்தரின் பூர்வாசிரம நாமம் இதுவே) அவர் மறைந்த பின் அவரது திருவுருவப் படத்தை வழிபடுவதையே பிறவிப் பணியாக மேற்கொண்டார்.


குருநாதனின் பணியோடு அவர் நிற்கவில்லை. அவரது மறைவுக்குப் பின் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையில் சாது சங்கம் அமைத்துக் கொண்டு வாழ்ந்த இளம் சந்நியாசிகள் அனைவரையும் தாய் போலப் பேணினார் ராமகிருஷ்ணானந்தர். மற்றவர்கள் தியானத்திலும் யோகத்திலும் ஈடுபட்டு மெய்மறந்திருப்பார்கள். இவரோ அவர்களுக்காகப் பிட்சை எடுத்து வருவார். உணவு சமைப்பார்; அவர்கள் வாயிலேயே அதை ஊட்டிவிடுவார். ''ஆரம்பகால ராமகிருஷ்ண மடத்தின் தாய்'' என்றே இவரை விவேகானந்தர் நெகிழ்ந்து பாராட்டி யிருக்கிறார்.

சென்னையில் விவேகானந்தர் இல்லம் உள்ள சாலையில் ஒரு வீட்டில் 1897-ம் ஆண்டில் தமது குருநாதனின் படத்தை வைத்து மடமாக்கினார் ஸ்ரீ ராமகிருஷ்ணானந்தர். பிறகு விவேகானந்தர் இல்லமே சிறிது காலம் மடமாக மாறிற்று. அதன் பின் 1907ம் ஆண்டு இறுதியில் இன்றைய மடம் உள்ள காம்பவுண்டில் சாலையை ஒட்டிச் சொந்தக் கட்டிடம் எழுப்பப்பட்டது. திவ்விய மாதா ஸ்ரீ சாரதாமணி இந்தக் கட்டிடத்தில்தான் எழுந்தருளிச் சுமார் ஒரு மாதம் இருக்கை கொண்டிருந்தாள். ஆனால் ஒருசில ஆண்டுகளில் இக்கட்டிடம் இடிந்து விழுந்து விட்டது. 1916 ஆகஸ்டில் இப்போதுள்ள மடக் கட்டிடத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க முதற் தலைவரான ஸ்ரீ பிரம்மானந்த ஸ்வாமிகள் தமது பொற்கரத்தால் அடிக்கல் நாட்டினார். அடுத்த ஏப்ரலில் அந்தப் பெருந்தகையே தமது ஆசிவந்த கையால் இந்த மடத்தைத் திறந்தும் வைத்தார்.

காசியில் நடக்கும் ''ஜயசிவ ஓங்கார'' கோஷத்தை முதலில் வங்க மடங்களில் பரப்பிய ராமகிருஷ்ணானந்தர், அதே பத்ததியைச் சென்னை மடத்திலும் அமலாக்கினார். அவரது பரவச பூஜையைச் சென்னையில் பெறவே குருமகராஜ் திருவுளம் பற்றியது நம் பாக்கியம். நகரின் பல பகுதிகளுக்குச் சென்று கீதை, உபநிஷதம் முதலியவற்றில் வகுப்புக்களும் நடத்தினார் ராமகிருஷ்ணானந்தர். இந்த ஆரம்ப காலத்தில் எத்தனை எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு அவர் முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆனால் அவரது ஆன்ம சக்தியும் அந்தரங்கபூர்வமான சிரத்தையும் காலக்கிரமத்தில் மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை நம் தமிழ் மக்களின் சொந்தச் சொத்தாக்கி விட்டது.

ராமச்சந்திரமூர்த்திக்காக பரதன் பதினாலாண்டுகள் கோசலத்தைப் பரிபாலித்தது போல், ஸ்வாமி விவேகானந்தரின் ஆணைப்படி பதினாலாண்டுகள் தமிழகத்தில் ராமகிருஷ்ண ராஜ்யத்தைப் பரப்பிய ராமகிருஷ்ணானந்தர், காசநோய் கண்டு கல்கத்தாவுக்குச் சென்றார். ஜயராம்பாடியில் இருந்த சாரதா தேவியைத் தம் தலைமாட்டிலேயே கண் குளிரத் தரிசனம் செய்து அந்த ஆனந்தத்தோடு அமரருலகில் பிரவேசித்தார்.


அவர் ஊன்றிய வித்து இன்று சென்னையில் விருட்சமாக விரிந்து வளர்ந்திருக்கிறது. மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் நானாவிதப் பணிகளைப் போற்றாதார் யார்? தினமும் மடத்தில் குருமகாராஜ் பூஜையும், உபந்நியாசங்களும் நடக்கின்றன. பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. பதிப்பகம் ஒன்று அற்புத ஆங்கில, தமிழ் நூல்களை அழகுபடப் பிரசுரம் செய்து வழங்கியபடி உள்ளது. இலவச வைத்தியசாலை ஒன்று நவீன உபகரணங்களோடு அரிய முறையில் 'தரித்திர நாராயண' சேவை செய்கிறது. ராமகிருஷ்ண மாணவரில்லம் ஒரே சமயத்தில் அன்னம், கல்வி, ஞானம் என்ற முப்பெரும் தானங்களைப் புரிகிறது. பல பள்ளிகள் அறிவும் ஒழுக்கமும் கொண்ட ஆயிரமாயிரம் மாணவ மாணவிகளைப் படைத்துத் தருகின்



ஆதியில் ஸ்ரீராமகிருஷ்ணானந்தரால் கட்டுவிக்கப்பட்ட மடத் தோற்றம்

றன. வெள்ளம், புயல், சமூகக் கலவரம் முதலியவற்றில் மெச்சத்தக்க கஷ்ட நிவாரணப் பணியைப் புரிந்தும், ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினர் நமது மாளாத நன்றிக் கடனுக்குப் பாத்திரமாகியுள்ளனர். ராமகிருஷ்ண மடத்தில் பெருமிதத்துடன் குறிப்பிடத்தக்க அம்சம், அதனைச் சேர்ந்த சாதுக்கள், பிரம்மசாரிகள் ஆகியோரின் சீலமும், விஷயஞானமும் ஒருமனதாக மக்களின் பாராட்டினைப் பெற்றிருப்பதேயாகும். மகனீயர் பலரைத் தலைவராகக் கொண்டிருந்த இம்மடத்தினைத் தற்போது தவயோகச் செல்வராகிய ஸ்வாமி தபஸ்யானந்தர் அவர்கள் தலைவராக இருந்து நிர்வகித்து வருகிறார்கள்.

சென்னை ராமகிருஷ்ண மடம் தோன்றி முக்கால் நூற்றாண்டு முடிவதை ஒட்டி இந்த ஆகஸ்ட் 6லிருந்து 13ந் தேதி வரை வைபவமாக முத்து விழா கொண்டாடப்படுகிறது. பல பெரியார்கள் பங்கு பற்றுகிறார்கள். முக்தி நெறிக்கு வழிகாட்டும் ராமகிருஷ்ண தர்மத்தின் முத்து விழா சிறப்புடன் நடக்க வாழ்த்துகிறோம். முக்கால் நூற்றாண்டு காணும் திருமடம் எக்காலும் இனிதே வளர குருமகாராஜைப் பிரார்த்திக்கிறோம்.



திரு டி. ஆர். பட்டாபிராமன் அவர்களும், திரு பி. ஜீ. கருத்திருமன் அவர்களும், நூலகத் தலைவர் திரு கி. ப. சிங்காரம் வரவேற்றுப் பேசினார்.

17. சின்ன ஊரில் பெரிய நிறுவனம்

மாயூரத்துக்கு அருகில் உள்ள குத்தாலம் என்னும் சின்ன ஊரில் நடக்கும் ஆனந்தவல்லி நினைவு நூலகத்துக்குச் செல்லுகிற வரையில் அந்த நூலகத்தைப் பற்றி மிகவும் தாழ்வான அபிப்பிராயத்தையே கொண்டிருந்தேன். 'ஒரு சின்ன ஊரில் இருந்து கொண்டு ஒரு நூலகம் அமைத்து என்னத்தைப் பிரமாதமாகச் சாதித்துவிடப் போகிறார்கள்!' என்ற எண்ணமே மேலோங்கி யிருந்தது. ஆனால்,

''உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந் தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து''

என்ற திருக்குறளின் பொருளைப் பிரத்யட்ச நிலையில் கண்டுகொள்ளும் அரிய வாய்ப்பு அங்கு எனக்குக் கிடைத்தது.

மாயூரப் பிரமுகரான திரு ஜகந்நாதன் அவர்கள் காரில் அவரே சாரத்தியம் செய்ய நண்பர் என். ராமகிருஷ்ணு அவர்களுடன் குத்தாலம் சென்றேன்.

குத்தாலத்தில் ராமாபுரம் அக்ரஹாரத்தில் உள்ள அந்த நூலகத்துக்குச் சென்றதும் நாங்கள் அயர்ந்து போனோம். சென்னைவாசியான நான் அயர்ந்து போனதில் அதிசயம் எதுவும் இல்லை. அதே ஊர்க்காரர்களான நண்பர்கள் ராமகிருஷ்ணுவும் ஜகந்நாதனும் கூட அயர்ந்து போனார்கள்.

''அடடா! எங்கள் ஊரில் இத்தனை அருமையான நூலகம் இருப்பதை இதுநாள்வரை உணராது போனோமே'' என்று வருந்தினார்கள். எங்கள் வருகையை உத்தேசித்துப் பெரிய பொருட்காட்சிக்கே ஏற்பாடு செய்திருந்தார்கள். நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் வண்ண வண்ண அட்டைகளுடன் தோரணம் போல் வரிசை வரிசையாகத் தொங்கின. நிறைய பெஞ்சுகளைப் போட்டு அவற்றின்மீது ஏராளமான நூல்களும், பத்திரிகைகளும் அழகாக வைக்கப்பட்டிருந்தன.

கிராமத்துக்கே உரிய அன்பும், பண்பும், கனிவும், கசிவும் அவர்கள் முகங்களில் ததும்பின.

பந்தநல்லூரில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் சகோதர இளைஞர்கள் திரு கி. கோவிந்தராஜுலுவும், புலவர் திரு கி. பாலசுப்ரமணியன் அவர்களும் தாங்கள் கல்விப் பணியில் பெறும் ஊதியத்தின் பெரும் பகுதியை இந்நூலகத்துக்கே செலவிட்டு மிகப் பெரிய அளவில் இதனை வளர்த்துள்ளனர். அவர்களுடைய ஒரே தமக்கையாரின் ஒரே புதல்வியான ஆனந்தவல்லியின் நினைவாக இந் நூலகத்தை 1956ம் ஆண்டு தொடங்கினர். அச்சிறுமி, பூக்குமுன்னே பொசிந்துபோன பூ. இதைச் சொல்லும்போது சகோதரர்களின் கண்களில் நீர் பனித்தது.

பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூலகத்தின் தொடக்க விழாவை மிகச் சிறந்த முறையில், மறைந்த தேசபக்தர் பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்களைக் கொண்டு நடத்தினர். அப்பொழுது ஏறத்தாழ இரண்டாயிரம் நூல்களும், சில தமிழ்ப் பத்திரிகைகளும் மட்டும்தான் இருந்தன.





பசும்பொன் உ. முத்து ராமலிங்கத்தேவர் நூல கத்தைத் திறந்து வைத்தார்.

நூலக உறுப்பினர்கள் அறுபத்திரண்டு பேர். உறுப்பினரின் நுழைவுக் கட்டணம் ரூபாய் ஐந்து. மாதச் சந்தா எதுவும் இல்லை யாது.

குத்தாலத்தைச் சுற்றியுள்ள பல ஊர்ப் பள்ளி உபாத்தியாயர்கள், இந்நூலகத்தில் உள்ள நூல்களைப் படித்துப் பயனடைகின்றனர். கிடைத்தற்கரிய, விலை மிக்க நூல்களை நூலகத்திலேயே படிக்க வசதிசெய்துள்ளனர்.

1960ம் ஆண்டு முதல் பல்வேறு நாடு களுடன் தொடர்பு கொண்டனர்; இந்தியாவி லுள்ள அநேகத் வெளிநாட்டுத் தூதரகங் களுடனும் கடிதத் தொடர்பு கொண்ட னர். 1971 முடிய ஐயாயிரத்துக்கும் மேற் பட்ட அயல்நாட்டுக் கடிதங்களும், சுமார் நாலாயிரம் உள்நாட்டுக் கடிதங்களும் எழுதி யுள்ளனர்.

சகோதரர்களின் அயராத முயற்சியைப் பற்றிய விவரங்களை யெல்லாம் கேட்டால் யாருமே அயராமல் 'இருக்க முடியாது. அறுபதுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து, தனியார், அரசினர் மற்றும் பேரு நண்பர்கள் வாயிலாக இருநூறுக்கு மேற்பட்ட பல துறைகளைச் சார்ந்த ஆங்கில, வார, மாத சஞ்சிகைகள் இலவசமாகவே வருகின்றன. யுனெஸ்கோ ஸ்தாபனம், தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனங்கள் அவ்வப்போது வெளியிடும் நூல்களை அளித்து உதவி வருகின்றன.

பல்வேறு நாடுகளிலிருந்து அன்பளிப்பாகத் திரட்டியுள்ள கல்விக் காட்சிப் பொருள் களின் பட்டியலைக் குறித்துக் கொண்டேன். அந்தப் பட்டியலை நீங்களும்தான் கொஞ் சம் பாருங்களேன்!

1.	பெரிய, நடுத்தரக் கருமை—வெண்மை புகைப்படங்களின் எண்ணிக்கை —	4,500
2.	14X10 அளவு வண்ணப் புகைப்படங்கள் —	500
3.	கார்டு சைஸ் வண்ணப்படங்கள்	3,000
4.	மாடர்ன் ஆர்ட் ஓவியங்கள் —	1,200
5.	இசைத்தட்டுக்கள் —	250
6.	ஸ்லைடு படங்கள் 35 எம். எம் —	50
7.	தபால் தலைகள் —	6,500

மாதிரிக்குத்தான், இந்தப் பட்டியலைக் கொடுத்துள்ளேன். பட்டியல் முடிந்துவிட்ட தாக அர்த்தமில்லை!

குத்தாலம், பந்தநல்லூர், திருப்பனந்தாள் போன்ற ஊர்களில் பல தடவை புகைப்படக் கண்காட்சிகள் நடத்தியுள்ளனர். இத்த கைய அரிய பல்வேறு நாடுகளின் புகைப்படக் கண்காட்சியை நடத்த விரும்புவோர் வழிச் செலவை மட்டும் ஏற்பின் இலவசமாகவே நடத்தித் தரத் தயாரா யிருக்கின்றனர்.

"மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய எந்தப் பிரமுகரேனும் இந்த நூலகத்துக்கு விஜயம் செய்திருக்கிறார்களா?" என்று ஒரு கேள்வியை எழுப்பினேன்.

"ஆகா! அந்த மாபெரும் பாக்கியம் எங்கள் நூலகத்துக்குக் கிடைத்தது. தற் போதைய தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் இங்கு விஜயம் செய்தது என்றென்றும் எங்கள் நினைவில் பசுமையா யிருக்கும்."

"இன்னும் யாரேனும் குறிப்பிடத்தக்க பிரமுகர்கள் வருகை தந்திருக்கின்றனரா?"

"பேரறிஞர் அண்ணா வந்திருக்கிறார். அமெ ரிக்காவின் ஆசியா ஸ்தாபன இந்தியப் பிரதி நிதி ஜேம்ஸ் க்ரீன், சென்னையிலுள்ள சோவி யத் நாட்டுத் தூதரக வைஸ் கான்ஸல் யூரிகிரி லோவ் ஆகிய அயல்நாட்டுப் பிரமுகர்களும் இந்த நூலகத்துக்கு வந்திருக்கின்றனர்."

அரிய நூல்களும், புகைப்படங்களும் நிறைந்துள்ள இந்த நூலகத்தில் இல்லாதது ஏதேனும் இருக்கிறதா என்றால், இருக்கிறது என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. இத்தனை அரிய பொருள்களையும் பத்திரமாகப் பாது காத்து வைக்கக்கூடிய இட வசதி இல்லை. சகோதரர்கள் இருவரும் முயற்சி செய்து அதற்கும் ஏற்பாடு செய்து விட்டால், ஆனந்தவல்லி நினைவு நூலகம் நமக் கெல்லாம் பெருமை தரும் அரிய தொரு நூலகமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

—சோமாஸ்



mcm/app/10 tam



துருவப் பிணைப்பு

எஸ்.ரங்கநாயகி

நீண்டு விரிந்து செல்லும் கடல் போலவே அவனுள் எழுந்துவிட்ட இப்போதும் தொடர்ச்சியாக எழுந்து கொண்டிருக்கிற எண்ணங்கள் மனத்தோடு அலைமோதின. அவனைச் சிண்டி வேடிக்கை பார்க்கும் அந்த எண்ணங்களிலிருந்து அவனால் விடுபட முடிய வில்லை. எதிரே கடல் அலைகள் ஆரவாரித்துக் குதித்து ஓடி வந்து கொண்டிருந்தன. அது போலவே அலைகளுக்கிடையே காலை வைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டே அவனை நோக்கி வந்தாள் அனுராதா.

''என்ன இது? அலைகளைக் கண்டு உங்க ளுக்கு இப்படிப் பயம்? ஒதுங்கி நிற்கிறீர் களே?'' அனு சிரித்துக் கொண்டே அவன் கையைப் பிடித்துக் கேட்டாள்.

''போவோமா?'' என்று அனு கேட்ட போது அவன் தன் உணர்வுக்கு வந்து விட்டான்.

''ஓ. போகலாமே?'' அவளைப் பின் தொடர்ந்தான்.

'அவனுக்குப் பக்கத்திலேயே அவளும் வந் தாள். அவன் சற்றுப் பின்தங்கியோ அல்லது முன்னேறியோ சென்றால் அவளும் அவனுக்கு ஈடு செய்து அவன் தோளோடு ஒட்டிக் கொண்டு நடந்தாள். அவன் தன்னையே பார்த்துக் கொள்வதுண்டு. இருவர் நடைக் கும் அவள் காணும் பேதத்தை அவள் குறிப் பாகப் பார்த்துக் கொள்ளாமலா இருப்பாள்? அவனால் நேராக நடக்க முடியாது. ஒரு பாதத்தைச் சாய்த்துக் காலை வளைத்துத்தான் அவனால் நடக்க முடியும். அவளோ...?

'மேனுட்டில் பாதங்களை இன்ஷ்யூர் செய்வ தாக அவள் கேட்டிருக்கிறாள். அனுவுக்கும் அப்படிப்பட்ட பாதங்கள்.... அவ்னுள் மூளைக் கும் ஒரு குறிப்பு.... வட துருவம் — தென் துருவம். அவனும் அவளும்... அவன் கால் களைச் சாய்த்து நடக்கும்போது அவள் அருகி லேயே அவள்.....'

மீண்டும் கைத் துவாலையினால் அவன் முகத் தைத் துடைத்துக் கொண்டான்.

அவன் தாயற்றவன். அவனுடைய தந்தை அவனே மாபெரும் தொழிற்சாலைக்கு உரியவனாக்கி விட்டார். உடன்பிறந்தோர் கிடையாது. சிறு வயதிலேயே வந்தது போலியோ. அதனால் ஏற்பட்டுவிட்டது இந்தக் கோளாறு. ஊனம் ஏற்பட்டுவிட்ட கவலை தாயாருக்கு எமனாக முடிந்தது: தந்தையை மறுமணம் செய்து கொள்வதிலிருந்து தடுத்தது.

தந்தை அவனுக்குக் குறை வைக்கவில்லை. அவனும் தந்தைக்கு மன நிறைவு தந்துவிட் டான். வகுப்பில் முதலாவதாக நின்றான், கல்லூரியில் கல்லூரிக்கே பெருமை தேடித் தந்த தேர்வு. தந்தை ஏற்படுத்தித் தந்த தொழிலில் நுட்பமான அறிவு. 'வாகவா, ஜீனியஸ்' என்று மகனுக்குக் கிடைத்த புகழுரையில் தந்தை மகிழ்ந்து போனார். அதன்பிறகுதான் அவனது திருமணத்தில் அவர் நாட்டம் கொண்டார். ஆரம்பத்தில் அவனுக்கு விருப்பமில்லை. பிறகு அவன் சம்மதம் தந்தான்.

அனுராதாவை அவனுக்காக நிச்சயித்த போது அவனுள் பொங்கி எழுந்த மகிழ்ச்சி. 'இத்தனை அழகான பெண் அவனுக்கு மனைவி யாக வாய்க்கப் போகிறாள்.' அவனது தந்தை சங்கரன் மகனுக்கு எதிரிலேயே அனுவிடம் கேட்டார். ''இதோ பாரம்மா. நான் உன் னிடம் ஒன்றும் மறைக்கவில்லை. திருமண மானபின் நீ நெஞ்சுக்குள் வருத்தப்படக் கூடாது. நீ என் மகனுக்குத் தகுந்த துணைவி ஆவாய் என்று என் மனம் சொல்வதால் உன்னை நான் என் மருமகளாகத் தேர்ந் தெடுக்கிறேன். உனக்கு என் மகனைப் பற்றித் தெரியும். அறிவை மட்டும் சொல்லவில்லை. அவனுக்கு ஏற்பட்டுவிட்ட குறையையும் நான் சொல்லுகிறேன். ஒருத்தருடைய நிர்ப்பந்தத் தில் இந்த விவாதத்தில் நீ நுழைவதாக இருக் கக் கூடாது. உன் பூரண சம்மதம் மிக அவசியம்.''

அனு தயங்காமல் பதில் கூறி விட்டாள். ''எனக்குப் பெற்றோர்கள் கிடையாது. மாமா வின் நிழலில் நான் இருக்கிறேன். ஒரே சகோதரி. அவள் இங்கு வருவதில்லை. கணவன் வீட்டில் இருக்கிறாள். ஒரே சகோத ரன். அவனுக்கும் இந்த வீட்டுக்கும் சம்பந் தம் குறைவு. நான் ஒருவருடைய நிர்ப்பந்தத் திலும் இந்த விவகாரத்தில் நுழையவில்லை. எனக்கு முழுச் சம்மதம் உண்டு. ஒன்று மட்டும் இரந்து கேட்கிறேன். நான் பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்தவள். திருமணத் துக்குப் பிறகு நீங்கள் ஒருத்தரும் இதைக் குத்திக் காட்டக் கூடாது.''

சங்கரன் சிரித்து விட்டார். ''சரியான பதில் கேள்வி போட்டு விட்டாயம்மா நீ. உன்னைத்தான் நான் பார்க்கிறேன். உன் பொருளாதார நிலையைப் பற்றி நான் விசாரிக்கக்கூட இல்லை. என் மகனுக்கும் உனக்கும் திருமணம் முடிந்துவிட்டால் நீ எங்கள் வீட்டுப் பெண்ணாகி விடுவாயே...? எங்கள் பெண்ணையே நாங்கள் குறை சொல் லிக் குற்றம் சாட்டுவோமா? உங்கள் நிலை மைப்படி எளிய முறையில் திருமணத்தை

வேண்டுமானாலும் நீங்கள் நடத்தலாம். அதற்கும் நான் உதவி செய்கிறேன்.''

''உங்கள் உதவி கிட்டுமானால் ஆடம்பரமாக நீங்கள் இருக்கும் சென்னையிலேயே விவாகத்தை நடத்துங்கள். பெரிய இடத்திலிருந்து பெண் வந்தால் அப்படித்தானே பெரிய முறையில் விவாகம் நடக்கும்! உங்கள் மகனுக்குக் குறை வைக்காமல் சிறப்பாகவே நடத்துங்கள்.'' அனுவே இப்படிக் கூறியதும் சங்கரன் சென்னையிலேயே ஏற்பாடு செய்தார்.

சிறப்பாகத் திருமணம் நடந்தது. திருச்சியை விட்டு விவாகத்துக்குக் கிளம்பியவள் அனு. அதன்பிறகு அவள் திருச்சிக்குச் செல்லவில்லை. விவாகத்தில் பங்கெடுத்துவிட்டு அவள் பெரிய சகோதரி லட்சுமியும் அவள் கணவனும் தங்கள் ஊருக்குப் போய்விட்டனர். சகோதரனும் விடைபெற்று விட்டான். மாமாவோ மனைவியை இழந்தவர். அனுவுக்கு விவாகம் முடிந்ததுமே க்ஷேத்திராடனம் சென்று விட்டார்.

அந்த வீட்டுக்குள் அவள் வந்து அவர்களுடன் ஒன்றிப் போய்விட்டபோது சங்கரன் மனமகிழ்ந்து போனார். தான் சந்தித்தவர்களிடமும், ''மனைவி மகள் இல்லாதவன் நான். ஆயினும் எந்தக் குறையும் இனி இந்த வீட்டில் பேசக் கூடாது. எங்கள் வீட்டுக்கு மகாலட்சுமி வந்திருக்கிறாள்'' எனக் கூறும்போது உணர்ச்சிப் பெருக்கில் அவர் கண்களில் நீர் திரையிடும். இதைக் கேட்கும் போது வாசுவின் நெஞ்சமும் நெகிழ்ந்து போகும்.

திருமணமான புதிதில் அவளுக்கென அவன் ஓர் உயர்ரகப் புடவையைத் தேர்ந்தெடுத்தான். உள்ள மகிழ்ச்சியும் ஆவலுமாக அவள் அதைப் பெற்றுக் கொண்டாள். மறுநாளே அதை உடுத்தி அவன் எதிரே பூ மலர் விரிந்து புன்சிரிப்பாக அவள் நின்றபோது தேனைப் பருகும் வண்டாக அவன் உள்ளம் ஆனந்த ரீங்காரமிட்டுக் கொண்டு பரவசம் எய்தியது. அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து அவள் ஒரு சஞ்சிகையை அவன் முன்பாக நீட்டினாள். அத்துடன் அவனுக்காக உயர் ரக ரெடிமேட் ஷர்ட்டும் அவள் கையில் தயாராக இருந்தது. சஞ்சிகையை அவன் பார்த்தபோது அவன் வியப்பும் மகிழ்ச்சியுமாக அவளை நோக்கினான்.

''இதைப் பற்றி மூச்சு விடாமல் இருந்திருக்கிறாயே? உனக்குக் கட்டுரையெல்லாம் கூட எழுத வருமா? கங்கிராட்ஸ்'' எனக் கூறியபடி அவளுடைய கைகளைப் பிடித்துத் தன் பக்கம் ஆர்வத்துடன் இழுத்துக் கொண்டான்.

''ஓ, அனு, உண்மையிலேயே நான் ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டசாலி.'' மகிழ்ச்சியுடன் கூவி அவளை அணைத்துக் கொண்டான்.

அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்து அனு இன்பம் காணுவதும் அவனுக்குப் புரிந்தது. உள்ளே வந்த சங்கரனிடம் இன்ப ஒலி எழுப்பி அவன் கூறினான். ''அப்பா! இதோ பார்த்தீர்களா, எனக்குப் பரிசளிப்பதற்கென்றே இந்தக் கட்டுரையை எழுதி இது பிரசுரமானதும் வந்த சன்மானத் தொகையில் இந்த ஷர்ட்டை வாங்கிப் பரிசளித்திருக்கிறாள் அனு.'' மகிழ்ச்சிப் பிரவாகம் கரைபுரண்டோடியது அவனிடம்.

அந்த ஷர்ட்டை அணிந்து வாசு தொழிற்சாலைக்குப் போய் வந்தான். மாலை நேரம் அவன் திரும்பியதுமே அனுவிடம் பூரிப்புடன் கூறினான்: ''உன்னுடைய செலக்ஷனைப் புகழாதவர்களே கிடையாது. அவ்வளவு நன்றாக இருக்கிறதாம்.''

அவளும் மனம் மகிழ்ந்து போனாள். இருவரும் பூங்காவுக்குச் சென்றனர்.

பூங்காவில் அனுவுக்கு அது எதிர்பாராத சந்திப்புத்தான். அவளுடன் திருச்சியில் படித்த பானு



அந்தப் பூங்காவுக்கு வந்திருந்தாள். அவளுடன் — அவர் — அவள் கணவனாகத்தான் இருக்க வேண்டும்.

''ஓ, அனு!'' என உற்சாகத்துடன் கூவியபடி பானு அவள் அருகில் வந்தபோதுதான் அனு அவளைக் கவனித்தாள். அவள் புல் தரையில் அமர்ந்திருந்தாள். சற்றுத் தள்ளி வாசு நீர்ச் சுனையைப் பார்த்தபடி நின்றிருந்தான். அனுவின் அருகில் பானு வந்ததையும் அவன் கவனித்தான். அவர்கள் சம்பாஷணை காதில் விழக்கூடிய தொலைவுதான்.

''பானுவா...!'' அனு வியப்புடன் அவளை அழைக்கும்போதே பானு அவள் அருகில் அமர்ந்தாள். அவளுடன் வந்தவனும் அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டான்.

''இவர் என் கணவர் பாஸ்கர். நாங்கள் திருச்சியிலேதான் இருக்கிறோம். இங்கு இவர் ஆபீஸ் வேலையாக வந்தார். நானும் வந்தேன். நீ இங்கு இருக்கிறாய் என்று தெரியும். விலாசம் தெரியவில்லை. நீதான் கல்யாணத்தைக்கூட இங்கே வைத்துக் கொண்டுவிட்டாயே!'' தொடர்ச்சியாகப் பேசின பானு தன் கணவனை நோக்கினாள். ''இவள் என்னோடு படித்த அனுராதா'' என்றாள்.

அறிமுகப்படலம் முடிந்த பிறகு ''என்ன அனு, நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாயா? உன் கணவர் வரவில்லையா?'' என்று கேட்டாள் பானு.

இவ்வார்த்தைகள் அனைத்தும் வாசுவின் செவிகளில் விழுந்து கொண்டுதான் இருந்தன.

''இதோ இருக்கிறாரே, என் கணவர்'' என்று கூறியபடி அனு, வாசுவைக் கூப்பிட, அவன், அருகில் வந்தபோது அவனது நடையைப் பானுவும் பாஸ்கரும் குறிப்பாக நோக்கியதை அவன் உணர்ந்தான்.

அனுவுக்கு அதிலெல்லாம் கவனமில்லை. கணவனை அவர்களுக்கு அறிமுகப்படுத்திய அவள், அவனது குணாதிசயங்களையும் தன் மாமனாரைப் பற்றியும் தங்கள் குடும்பத்தைப் பற்றியும் வானளாவப் புகழ்ந்து தள்ளினாள்.

அவன் அங்கிருந்து நகர்ந்துவிட விரும்பினான். ஆயின் தன் நடையினால் மீண்டும் தன் பாதங்களின் வளைவைக் காட்ட விரும்பாதவனுக்குச் சங்கடமான நிலையில் நின்றான்.

பானுவும் பாஸ்கரும் விடைபெறும் தருணம் வந்தது. அனு அவர்களை வழி அனுப்புவதாக அவர்களுடன் நகர்ந்தாள். வாசு நின்ற இடத்திலேயே நின்றான்.

''அனு! உன் திருமண வாழ்க்கையில் நீ நிறைவு காண்பது பற்றிச் சந்தோஷம்தான்... வ...ந்து.... உன் கணவர் அன்புடையவர், அழகானவர்...இந்தக் கால்....சின்ன வயசில் போலியோ ட்ரபிளா?'' பானு தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

அவனுக்கும் அது காதில் விழுந்தது.

''நோ... நோ! போலியோ இல்லை. கல்யாணமான பிறகு ஒரு கார் விபத்து ஏற்பட்டது. அதன் விளைவு இது. கடவுள் கொடுத்தது. செல்வத்தை ஏற்பதுபோல் இதையும் ஏற்றுக் கொண்டோம்.'' அனு துளிக்கூடத் தயக்கமில்லாமல் கூறினாள். இதைப் போய் ஏன் பிரமாதப்படுத்திப் பேசுகிறாய் என்பதற்கான அதிருப்தியைக் காட்டுவதாகச் சொற்களை அழுத்தமாகக் கூறினாள். கூடவே, 'நீ இதைக் கேட்டதால் நான் பாதிக்கப்படவில்லை' என்னும் உறுதியில் நனைந்த குரல்.

''ஓ, அப்படியா?'' பானு முடித்துவிட்டாள். மேலும் ஏதோ பேசிக் கொண்டே சென்றார்கள். அவனுக்கு அதெல்லாம் செவியில் விழுந்தும் என்ன பேசுகிறார்கள் என மூளைக்கு உணர்த்தவில்லை. அவனுடைய உள்ளத்தில் அனு சொன்னவை முழுவதும் வியாபித்து இருட்டை உண்டாக்கி விருந்தது. பாதச் சிலம்புகளை பொறுமைப்படும்படி நடை அழகை உடைய ஒருத்தி, இந்த ஊனமுள்ள பாதங்களை உடையவனுக்குச் சொந்தமாகிவிட்ட கதையை மற்றவர்களுக்கு உணர்த்த விரும்பவில்லையா?

''அப்ப்பா, ஒரு விநாடி உங்களைத் தனியே விட்டாலும் போதும். உடனே ஏதேனும் யோசனை கோட்டைக்குள் புகுந்துவிடுவீர்கள். நான் அருகில் வந்ததுகூடத் தெரியாமல் அப்படி என்ன யோசனையோ!'' அவனுடைய சிந்தனைக்கான வித்தை அறியக்கூட முயற்சி செய்யாமல் சிந்தனையை ஒரு சக்களத்திக்கான இடத்தில் வைத்து அவள் பேசினாள்.

சிந்தனைக்கான காரணத்தை அவளுக்கு அவன் விரிவாக்கித் தர முடியும். அவனது ஊனத்துக்கான காரணத்தை அவள் திரித்துக் கூற விழையும் நோக்கை அவளிடமிருந்தே அவன் புரிந்துகொள்ள முயன்றிருக்கலாம். ஆயின் அந்த முயற்சியை எடுக்கும் துணிவை அவன் நாடவில்லை. மாறுபட்ட காரணத்தைப் பானுவிடம் கூறியதுபோல் தன்னிடமும் மாறுபட்டவிதமாகக் கூறிவிட்டால்... இந்த நினைவுக்குள்ளேயே அமுங்கிப் போகும் நிலை....

வீட்டுக்குத் திரும்பியதுமே அவள் உட்புறம் விரைந்தாள். மாமனாரைச் சாப்பிடக் கூப்பிட்டாள். ''அப்பா, சாப்பிட வாருங்கள். தாமதமாகச் சாப்பிட்டால் உங்கள் உடம்புக்கு ஆகாது.''

சங்கரன் அவள் கூப்பிட்டதுமே சாப்பிட வந்தார். ''வாசுவையும் கூப்பிடேன். எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்.''

''வேண்டாம் அப்பா, நான் இன்னும் லட்சுமி ஸ்தோத்திரம் சொல்லவில்லை. நான் வரும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். நானும் உங்கள் மகனும் பிறகு சேர்ந்து சாப்பிடுகிறோம். எனக்குத் தனியாகச் சாப்பிடப் பிடிக்காது'' என்றாள் அனு.

இப்படித்தான் அவள் சங்கரனிடம் ஒளிவு மறைவு இல்லாமல் பேசுவாள் என்பதை வாசு அறிவான். இப்படி ஒரு வெளிச்சத்தில் இருக்க விரும்பும் அவள், ஏன் பானுவைப் போன்றவர்களிடம் ஒன்றுக்கு மாறான பேச்சைப் பேச வேண்டும்? சங்கரனிடமோ அவனிடமோ அவள் நடிப்புக்கான அரங்கத்தில் நடமாடுகிறாள் என்று சொல்லவே முடியாதபடி. பொத்தலே காண முடியாத தோற்றம்.

தினமும் லட்சுமி ஸ்தோத்திரம் படிக்காமல் அவள் இருந்ததில்லை. கணவனின் நல்வாழ்வுக்கு அது அவசியமாம்..... ஆமாம், கணவன் நன்றாக இருந்தால் மனைவி பூவும் பொட்டுமாக வெளியே நல் வாழ்வு பெற

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன் காப்பியின் சுவையை அனுபவிப்பீர் !



காப்பியின் சுவை-
க்குச் சுவையூட்டுபவை
ருசிமிக்க புதிய
பார்லே மாரி
பிஸ்கெட்டுகள்- ஃபாயில்
ஸீல்டு பேக்குகளில்.

க்ளுகோ, மொனகோ மற்றும் சுவைமிக்க இதர பிஸ்கெட்டுகளின் தயாரிப்பாளர்களான பார்லே உங்களுக்கென பிரத்யேகமாக வழங்குகின்றனர்—

பார்லே மாரி பிஸ்கெட்டுகள்

everest/1085I/PP/C tam


அடேயப்பா, வளர்ச்சியின் உச்சமா!
பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதி வேலையைத்தான் செய்யும்
இன்க்ரிமின் பெறுவீர்.. உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் உடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
Lederle எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மி.லி & 57 மி.லி.
இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்–10 மி.லி.
Incremin drops LYSINE · VITAMINS
10 ml.
லின்டாஸ்-INC. 20-690 TM

முடியும்?.... கானலம்.... சே, சே! என்ன அசட்டுக் கற்பனை. என் அனு அப்படிச் சுயநலவாதியாக இருக்க முடியுமா? ஓ அனு, நீ நல்லவளாகத்தான் இருப்பாய்....ஆனால் வட துருவமும் தென் துருவமும்.... அவளது பாத அழகும் அவனது பாதமும்.... மண்டைக்குள் சிலிர்த்துக் கொண்டது பிரச்னை.

அன்றுதான் அனுவும் வாசுவும் கோடைக் கானலிலிருந்து திரும்பியிருந்தனர். இதுகூடச் சங்கரன் செய்திருந்த ஏற்பாடுதான். அங்கு சொந்தமாக ஒரு வீடு வாங்கினார். சிறிது காலம் அவர்கள் தங்கி வர ஏற்பாடு செய்தார். அங்கும் வாசுவின் நெஞ்சை நெருடி வந்த பிரச்னை இருக்கத்தான் செய்தது. வட துருவம் - தென் துருவப் பிரச்னை.

"அனு, உன் தம்பி மூர்த்தியும், உன் அக்கா லட்சுமியும் வந்திருக்கிறார்களம்மா. இன்று காலைதான் வந்தார்கள். மாடி அறையை ஒழித்துக் கொடுத்திருக்கிறேன்." சங்கரன் அவர்கள் உள்ளே நுழையும்போதே கூறினார்.

அனு குதூகலத்துடன் மாடிக்கு விரைந்தாள். லட்சுமி மூர்த்தியுடன் பேசிப் பேசி மகிழ்ந்தாள். சகோதரியிடம் அவளுக்கு அதிக நெருக்கம் இருந்ததில்லை. சிறு வயதிலேயே அவளுடைய விவாகம் முடிந்துவிட்டது. கணவன் நேர்மையற்றவன் என்றார்கள். லட்சுமிதான் சரிவர நடந்துகொள்ளவில்லை என்றும் சிலர் கூறினர். பணம் வேண்டுமானால் பிறந்த வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். அது கிடைக்காமல் போகவே அவள் வருவதும் நின்றுவிட்டது. மூர்த்தியோ வீட்டில் தங்கவே மாட்டான். என்ன வேலை செய்கிறான், எங்கு இருக்கிறான் என்பது பற்றி அவன் மாமா கவலை கொள்ளவில்லை. அனுவின் விவாகத்துக்குப் பிறகு க்ஷேத்திராடனம் செய்யப் புறப்பட்ட மாமா பிறகு திரும்பவில்லை. அனுவுக்குப் பிறந்த வீட்டுத் தொடர்பு நின்றுவிட்ட நிலை. இப்போது இவர்கள் வந்து நின்றார்கள்.


இரண்டு நாட்கள் அவர்களைத் தங்கும்படி செய்து அனு அவர்களுக்குச் சென்னையைச் சுற்றிக் காட்டினாள். பழமும் பாலுமாகத் தந்தாள். புதுத் துணிகள் வாங்கித் தந்தாள்.

அவர்கள் ஊருக்குக் கிளம்பும் நேரம். லட்சுமியும் மூர்த்தியும் சங்கரனிடம் சென்றனர். "கிளம்பி விட்டீர்களாம்மா? நீங்கள் வந்ததில் எனக்குச் சந்தோஷம். அடிக்கடி வாருங்கள். அனுவுக்குப் பிறந்த வீட்டுத் தொடர்பு காட்டுங்கள். ரொம்ப நல்ல பெண்" என்றார் சங்கரன்.

"தொடர்பு இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். என்ன செய்வது? வர முடிகிறதா? இப்போது முக்கியமாக உங்களைப் பார்க்கத்தான் வந்தோம்...." என்று மூர்த்தி ஆரம்பித்தான்.

"அப்படியா? என்ன சமாசாரம்?"

"உங்களிடம் நாங்கள் விரிவாக எடுத்துக் கூற வேண்டும் என்பதில்லை. அனுவின் அழகையும் அறிவையும் நீங்களே அறிந்துவிட்டீர்கள். அப்படிப்பட்ட பெண்ணை ஊனமுள்ளவருக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டோம். இப்படிச் செய்ததில் எங்களுக்கு ஏதேனும் ஆதாயம் இருந்தால்தான் மனம் நிம்மதி பெறும். அனுவும் தான் செய்துள்ள தியாகத்துக்கான பலனை எதிர்பார்க்கிறாள். நான் ஏழைக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டேன். ஆனால் என் கணவர் ஊனமற்றவர்" என்று லட்சுமி பேசிக் கொண்டே போனாள்.



மேட்டூர் கெம்ப்ளாஸ்ட் டெக்னிகல் மானேஜர் சிரஞ்சீவி ரா. காளிதாசனுக்கும் சௌ. ஜயலக்ஷ்மிக்கும் மதுரையில் சமீபத்தில் திருமணம் நடந்தது. மணமகளின் தந்தை டாக்டர் வே. ராகவன். முகூர்த்தத்துக்கும் சென்னையில் நடந்த விருந்துக்கும் வந்திருந்த பிரமுகர்களுக்குத் தமிழ், ஆங்கில விரிவுரைகளுடன் கூடிய புஷ்பதந்தரின் 'சிவ மஹிம்ன ஸ்தவம்' என்ற நூலை வழங்கினார் திரு ராகவன். காஞ்சி காமகோடி ஆசார்ய ஸ்வாமிகளின் அநுக்ரஹப்பிரஸாதத்தைத் தம்பதிக்கு ஸ்ரீ சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் வழங்கினார்.

சங்கரன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"மாமா சொல்லிவிட்டார். எங்களுக்கு உங்களிடமிருந்து பண உதவி கிடைப்பதற்காகத்தான் அனு தியாக வாழ்வை ஏற்றுக் கொள்ள நேரிட்டதாம்." மூர்த்தி பேசினான்.

சங்கரன் சில விநாடிகள் மௌனமாக இருந்தார். அனுவும் அருகில்தான் இருந்தாள். மாமனாரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அடுத்த அறையில் வாசு அமர்ந்திருந்தான். அவர்களுடைய பேச்சு அவனுடைய இதயத்தில் நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது. அனு இதற்காகத்தான், பிறந்த வீட்டுக்குப் பண உதவி செய்ய அவனை மணந்து கொண்டிருக்கிறாள். இல்லாவிடில் வட துருவமும் தென் துருவமும் சேருமா?

"அனு, என் கணக்கிலிருந்து நான் ஐயாயிரம் தந்துவிடுகிறேன். நீ உன் கணக்கிலிருந்து ஐயாயிரம் கொடு" எனக் கூறிய சங்கரன்



சென்ற 11ந் தேதியன்று மியூசிக் அகாடமி அரங்கில் நடந்த குமாரி வஜீரா குணப்ரணாத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் "சபாஷ்" என்று சொல்லும்படியாக இருந்தது. ஸ்ரீலங்காவைச் சேர்ந்த இப்பெண்மணி தன் தந்தையுடன் புதுடில்லியில் வசித்தபோது ஸ்ரீமதி லலிதா சாஸ்திரியிடம் பரதக் கலை பயின்றாள். கான்வென்ட் பள்ளிப் படிப்பு ஆங்கிலம்; தாய்மொழி சிங்களம்; தமிழ் தெரியாது, ஆனால் ஆடல் கலையை எப்படியோ பிழையின்றி, காலப்ரமாணம் சிதைவின்றி அடவுகளின் அழகு குறையாது, அசாதாரணத் திறமையுடன் கற்றுக் கொண்டிருக்கிறாள். கலா க்ஷேத்ர பாணியில் ஆரம்பித்த கலை, அந்தப் பாணியிலேயே சென்னையில் அடையாறு கே. லக்ஷ்மணனிடம் முழுமை பெற்று வருகிறது. தோடய மங்களம் நடன நிகழ்ச்சிக்குக் கையாளப்படுவது ஒரு நல்ல திருப்பம். ஜதிஸ்வரத்திலும், சப்தத்திலும் குமாரி வஜீராவின் அபாரத் தன்னம்பிக்கையும். நிருத்திய பரிபக்குவமும் நன்கு வெளிப்பட்டன. தன்யாசி வர்ணத்துக்கு ஆடல் மெச்சும்படி இருந்தது. துரித கதியில் பிரியமுள்ள வஜீராவுக்குத் தில்லானாவும் குறத்தியும் லாகவமாக உள்ளதைப் போல் ஆண்டாளும் அபிநயமும் அமையாவிட்டாலும் பயிற்சி பலன் தரவே செய்யும். லக்ஷ்மணனுடைய நட்டுவாங்கமும் கோபிநாத்தின் மிருதங்கமும் முதல் தரம்.

அண்டை நாட்டு இலங்கைக்கும் பாரதத்துக்கும் உள்ள கலாசாரத் தொடர்பைப் பலப்படுத்த குமாரி வஜீராவைப் போன்றவர்களின் பரதக் கலை நிச்சயமாக உதவும். - எம். எஸ். சிவஸ்வாமி

ராயலரைத் திறந்து தம் செக் புத்தகத் தாள் ஒன்றில் ஐயாயிரத்துக்கு எழுதி மூர்த்தியிடம் நீட்டியபோது, இடையே கை நீட்டிச் சடக்கெனப் பற்றிக் கொண்டாள் அனு. பிறகு அந்தச் செக்கைக் கிழித்துப் போட்டாள்.

"அனு, என்ன இது?" லட்சுமியும் மூர்த்தியும் கூவினர். சங்கரன் திகிப்ரமையுடன் அவளை நோக்கினார். வாசுவும் அந்த நேரத்துக்கு அந்த அறைக்கு வந்துவிட்டான்.

"லட்சுமி! மூர்த்தி! நீங்கள் கிளம்புகிறீர்களா? ரயிலுக்கு நேரமாகிவிட்டது. சீக்கிரம் கிளம்புங்கள்" என்று அனு அவசரப்படுத்தினாள்.

"என்ன அனு, உன் மாமனார் பணம் கொடுத்தார். அதையும் நாசமாக்கிவிட்டு எங்களையும் கிளப்புகிறாய்? நீ ஒரு நொண்டிக்கு வாழ்க்கைப்பட்டுப் பெரிய தியாகம்..."

"ஷட் அப்! பிளாக் மெயில் செய்ய அங்கிருந்து சகோதரியின் உறவைத் தேடி வந்தீர்களாக்கும்! அந்த உறவு இந்த அனுவுக்கு வேண்டாம். இந்த இடத்தைவிட்டுக் கிளம்புங்கள். தியாகமாம், அதனால் இவர்களுக்குப் பணமாம். நீங்கள் வந்த காரணம் முதலிலேயே தெரிந்திருந்தால் உங்களைத் தங்கவிட்டிருக்கவே மாட்டேன்."

கடைசியில் அனுவுக்குத்தான் வெற்றி. பணம் பெறாமலே அவர்கள் புறப்பட்டனர்.


அவர்கள் சென்றபின் புயலுக்குப்பின் வெறித்து நிற்கும் மனிதர்களாகச் சங்கரனும் வாசுவும் பிரமையுடன் நின்றனர்.

"அனு, உன் உடன்பிறந்தவர்களிடம்..." என்று சங்கரன் ஆரம்பித்தார்.

"உடன் பிறந்தவர்களாகட்டும், வேறு யாராகட்டும். தியாகம் தியாகம் என்று என் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டினால் எனக்குப் பொறுக்காது மாமா! நான் தியாகமா செய்திருக்கிறேன்? என் விவாக வாழ்க்கை தியாகத்தின் அடிப்படையிலா நிற்கிறது? நான் குழந்தைப் பருவத்திலிருந்தே அன்பு என்ற சொல்லுக்கு உருவம் கொடுத்து அதைத்தான் தேடித் தேடி அலைந்தேன். அம்மாவின் அன்பு பறிபோய் பிறகு அப்பாவின் அன்பும் போய்விட்டது. சகோதரியின் புக்கக வாழ்வு புரியவில்லை. மூர்த்திக்கு ஊர்ப் பெண்கள் மீதுதான் நாட்டம். என் மாமா ஒரு சந்நியாசி. பெற்றோர் அன்புக்குப் பிறகு ஒரு பெண்ணுக்குக் கணவனின் அன்புதானே சாம்ராஜ்யம்? உங்கள் இல்லத்தில் அந்த உருவத்தை நான் காண முடியும் என்ற நம்பிக்கையில் உங்கள் மகனைத் திருமணம் செய்து கொண்டேன். நான் தேடின அன்பு உருவம் கிடைத்துவிட்டது. அதையே சீராட்டிப் பாராட்டுகிறேன். இதன் நடுவில் தியாகம் என்ற சொல்லை உபயோகித்து எதற்காக என் மனத்தைச் சாக அடிக்க வேண்டும்? தியாகத்தின் போர்வையில் நான் பெறும் அன்பு மறைந்துவிடக் கூடாது. அழிந்துவிடக் கூடாது. புரிகிறதா? அதனால் யாராவது கேட்டால், தியாகத்துக்கு மதிப்புக் கொடுத்துவிடப் போகிறீர்களே என்று, உங்கள் மகனுக்குத் திருமணத்துக்குப் பிறகுதான் விபத்தேற்பட்டுக் காலை ஊனமாக்கிவிட்டது என்று கூறி வருகிறேன். அதனால் தயவு செய்து தியாகத் திரையில் அன்பை மறைத்து விடாதீர்கள். அன்பைக் கொடுத்து அன்பை வாங்கி நான் காணும் சுவர்க்கம் போன்ற மகிழ்ச்சியை நாசமாக்கிவிடாதீர்கள்." கண்களில் நீர் முட்ட அனு கூறினாள்.

சங்கரன் நெகிழ்ந்து போனார்.

வாசு பெருமிதத்தோடு மனத்தில் கூறிக் கொண்டான்: "வட துருவம் தென் துருவம் இணையமுடியும். அன்பு என்ற கோடே அவற்றின் பிணைப்பு."



GOVAN/OCL/ 7113

உங்கள் குடும்ப பட்ஜெட்டிற்குள் குடும்பத்தை நடத்துவது கஷ்டமாக இருக்கிறதா?



ஹிந்தாலியம் பாத்திரங்கள் வாங்கி உங்கள் செலவு குறைந்து சேமிப்பு வளர்வதைப் பாருங்கள்.

குடும்ப பட்ஜெட்டில் கருத்துடைய இல்லத்தரசிகளுக்கு ஹிந்தாலியம் பாத்திரங்கள் ஒரு வரப்பிரசாதம்—அவற்றின் விலை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களின் விலையில் மூன்றில் ஒரு பங்குதான். சூட்டைச் சீராகவும் சீக்கிரமாகவும் பரப்புவதனுல், அவை எரிபொருள் செலவையும், எண்ணைச் செலவையும் குறைக்க உதவுகின்றன. அவை உறுதியானவை, நீடித்து உழைப்பவை, ஆயுட்காலமளவும் நீடித்து நிற்பவை.




ஹிந்தாலியம்®

சிறந்த இல்லாண்மைக்கு ஒரு பேருதவி

Sobhagya HAC-472 Tam

ஹிந்துஸ்தான் அலுமினியம் கார்ப்பொரேஷன் லிமிட்டட், தபால் ஆபீஸ் ரேணுகூட், ஜில்லா மிர்ஜாபூர் (உ.பி.)



லண்டனில் பவன்

நமது ஆத்மிகப் பண்பாட்டினைச் சக்தி வாய்ந்த முறையில் பரப்பி வரும் நிறுவனங்களுள் முதலிடம் பெற்றுத் திகழ்வது ''பாரதீய வித்யா பவனம்.'' காலஞ்சென்ற குலபதி முன்ஷி அவர்கள் முப்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முன் பம்பாயில் தொடங்கிய இந்தக் கலாசார ஸ்தாபனம் நாள்தோறும் பல்கிப் பெருகி, இன்று நாடெங்கிலும் கிளை பரப்பி ஆன்மிகத்துக்கோர் ஆலவிருட்சமென விளங்குகிறது. ''நாடெங்கிலும்'' பரவியது போதாதென்றும், ''உலக முழுவதிலும்'' பாரதீய வித்யாபவனப் பணி பரவ வேண்டும் என்றும் அதன் இயக்குநர்கள் கருதுகிறார்கள். ''உலகெங்கிருந்தும், எம்மிடம் செவ்விய சிந்தனைகள் வந்து சேருமாக'' என்ற வேத வாக்கினை இலட்சியமாகக் கொண்ட பவனம், இப்போது உலகம் முழுவதற்கும் நமது ஆத்ம சிந்தனைகளை அளிப்பதில் விசேஷ ஈடுபாடு கொண்டுள்ளது. இதன் முதற்படியாக லண்டனில் பாரதீய வித்யாபவன கேந்திரம் ஒன்றினை ஸ்தாபிக்க ஏற்பாடுகள் அதி மும்முரமாக நடந்து வருகின்றன. இன்னும் ஒரு சில மாதங்களுக்குள் இந்த லண்டன் கேந்திரம் செயற்படத் தொடங்கும் என்று அறிந்து மகிழ்கிறோம்.

மவுண்ட்பேட்டன் பிரபு அவர்கள் லண்டன் கேந்திரத்தின் முக்கிய போஷகராக இருப்பதற்கு இசைந்துள்ளார். உலகப் புகழ் கொண்ட கவிச் செல்வரும் யோக வேதாந்த ஈடுபாடுள்ளவருமான யஹூதி மெநுஹின் இக்கேந்திரத்தின் அக்கிராசனராக இருக்க ஒப்புதல் அளித்திருக்கிறார். மற்றும் ஹார்வுட் பிரபு முதலிய ஆங்கிலப் பிரமுகர்களும் இங்கிலாந்தில் வாழும் இந்தியப் பிரமுகர்கள் பலரும் இந்த நிறுவனத்தில் ஈடுபாடு காட்டி அதனைப் பேண முன் வந்துள்ளனர். லண்டனிலுள்ள இந்திய தூதரகம் இத்திட்டத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி வருகிறது. பாரதீய வித்யா பவனத்தின் லண்டன் கேந்திரத் தொடக்கத்துக்குப் பூர்வாங்கமாக அங்கு சென்று வந்துள்ள பிரதிநிதிகள், நமது ஆத்மிக — கலாசாரச் செல்வத்தைப் பெறுவதில் ஆங்கிலேயரும், இங்கிலாந்துவாழ் இந்தியரும் காட்டும் அளப்பற்ற ஆர்வத்தைக் கண்டு பெரு நம்பிக்கையுடனும், புத்துணர்வுடனும் திரும்பி யிருக்கிறார்கள்.

பாரதீய வித்யை பாரெங்கும் பரவப் பிரமனைப் பிரார்த்திக்கிறோம். இந்திய சுதந்திர வெள்ளி விழா ஆண்டிலேயே பிரிட்டனில் வித்யா பவன கேந்திரம் வித்தூன்றி வேர் விடுவதற்கு ஸ்ரீ வித்யா தேவி அருள் பாலிப்பாளாக.

(மேலே) கடந்த ஜூன் 9ந் தேதி லண்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் பாரதீய வித்யா பவனத்துக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோது எடுத்த படம்.

இடமிருந்து வலம்: ஸ்ரீ எம். சுந்தரராமரெட்டி (பவனத்தின் பெங்களூர் கிளை அங்கத்தினர்), ஸ்ரீ ஜி. எல். மேதா (உப தலைவர், பாரதீய வித்யாபவனம்), டாக்டர் கரண் சிங் (பவனத்தின் காச்மீரக் கிளைத் தலைவர்), ஸ்ரீ அபா பண்ட் (இங்கிலாந்திலுள்ள இந்திய தூதர்), ஸ்ரீ ஜய சுக்லால் ஹாதி (பவனத்தின் உப தலைவர்), ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ணன் (பாரதீய வித்யா பவன நிருவாகக் காரியதரிசி).



கசப்பான உண்மை

நடந்து முடிந்துள்ள விவசாயிகள் போராட்டத்தில் ஐ. பி. சி. செக்ஷன் 120 பி. படி தடுப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டு இருபத்துமூன்று நாட்கள் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களில் நானும் ஒருவன். இந்தப் போராட்டத்தில் பல உண்மைகள் வெளிப்பட்டன. நில உச்சவரம்பு முதலிய விவசாயக் கொள்கைகளை மட்டும் சட்டம் செய்து 'எல்லாம் செய்துவிட்டோம்' என்று சொல்லிக் கொள்பவர்கள், உழைக்கும் விவசாயிகளுக்கு உருப்படியாகச் செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பதை விளக்க இப்போராட்டம் உதவியது. விவசாயம் மற்றத் தொழில்களைப் போன்று 'உழைப்புக்கேற்ற ஊதியத் தொழிலாக' மாற்ற வேண்டும். இப்போராட்டத்துக்கு இந்தியாவெங்கும் இருந்து கிடைத்துள்ள ஆதரவைப் பார்க்கும் போது கோவை மாவட்ட விவசாயிகள் போராட்டம் இந்திய விவசாயக் கொள்கையில் ஒரு திருப்புமுனை என்றே சொல்லத் தோன்றுகிறது. கிராமத்து மக்கள் நடத்திய இந்தப் போராட்டத்தில் விவசாயிகளின் விவேகம், கொள்கைப்பிடிப்பு எல்லாம் வெளிப்பட்டன. அதிக நாட்கள் உறுதியோடு சிறையிலிருந்து தியாகம் செய்தார்கள். ஜனநாயக அரசாங்கம் என்னென்ன அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்தது என்பதை அனுபவித்தவர்கள்தான் உணர முடியும். போலீஸ் நிர்வாகத்தையும், நீதி நிர்வாகத்தையும் கேலிக்கூத்தாகச் செய்துவிட்டார்கள்.

போலீஸார் எங்களைக் கைது செய்யவில்லை. ஆளும் கட்சிப் பிரமுகர்கள் கொடுத்த பெயர்ப் பட்டியல்படி ஆட்களைப் பிடித்து வந்தார்கள். சிறையில் என்னோடு டாக்டர்கள், வழக்கறிஞர்கள், கிராமஅதிகாரிகள், அரசாங்க ஊழியர்கள்(!), பள்ளி மாணவர்கள், பட்டதாரிகள் என்று விவசாயப் போராட்டத்தோடு தொடர்பில்லாத பலர் கொண்டு வரப்பட்டனர். சில கிராமங்களில் குடும்பங்கள் முழுவதுமே கைது செய்யப்பட்டனர்! போராட்டம் மாநில அளவில் மக்கள் போராட்டமாக வளருவதற்குத் தி. மு. க. கட்சிஊழியர்கள் பெரிதும் உதவியுள்ளார்கள்!

போலீஸ் போட்ட கேஸ்கள் எல்லாம் நாடகத்தில் நடப்பதுபோல் இருந்தன. விவசாயப் போராட்டத்துக்கும் போலீஸ் போட்ட பொய் வழக்குகளுக்கும் தொடர்பே இல்லை. எங்களை ஆதரித்து நீதிமன்றத்தில் வழக்குப் போட வழக்கறிஞர்கள் அஞ்சும் அளவுக்கு அவர்களையும் அச்சுறுத்தினார்கள்.

நமது நீதி நிர்வாகம் நிச்சயம் சீரமைக்கப்பட்டாலொழிய ஜனநாயகம் பிழைக்காது.

போலீஸ், நீதிமன்றம், அரசியல் கட்டுப்பாடு ஏதும் இல்லாத சூழ்நிலையில் மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேறு வழி இல்லாது போன கசப்பான உண்மையை மறப்பானேன்; மறைப்பானேன்!

கோவை — 11 வ. ஈசுவரமூர்த்தி
16–7–72 (எம். எல். ஸி.)

மாணவர்களுக்கும் விற்பனை

மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் உள்ள வகுப்புகளுக்கு ஓர் அறிக்கை விடப்பட்டது. அந்த அறிக்கையில் கண்டிருந்த வாசகமாவது: ''நமது தமிழக முதல் அமைச்சரின் உருவப் படம் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. முதல் அமைச்சரின் படம் வேண்டும் மாணவர்களும், ஆசிரியர்களும் பள்ளி அலுவலகத்தில் ஒரு ரூபாய் பணத்தைக் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.''

மாணவரிடம் மட்டும்தான் எதுவும் விற்கப்படாமல் இருந்தது. அவர்களிடமும் ஆரம்பமாகிவிட்டது. பாவம், மாணவர்கள்! 'சாதனை! சாதனை!' என்று கூறிக் கொள்ளும் அரசு, மாணவர்களிடம் முதல்வரின் படத்தை விற்பதையும் தனது சாதனைப் பட்டியலில் எழுதிக் கொள்ளட்டும்.

அரையபுரம்
17–7–72 பா. விசுவநாதன்

மதிப்பெண்ணுக்கு மதிப்பில்லையா?


என்னுடைய நண்பர் ஒருவரின் பையன் பி.யு.சி.யில் முதல் வகுப்பு பெற்றுள்ளான். அவனுடைய மார்க்குகள்: கணிதம் 100% பௌதிகம் 76% இரசாயனம் 67% அப்பையன் பொறி இயல் கல்லூரிக்கு அப்ளிகேஷன் போட்டிருந்தான். நேர்முகப் பேட்டியில் கேள்விகளுக்கு நன்றாகப் பதில் அளித்திருந்தான். தனக்கு நிச்சயமாகப் பொறி இயல் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று நம்பியிருந்தான். ஆனால் தேர்தலின் முடிவில் அவனுடைய எண் இல்லை. இதனால் அவன் மிகவும் மனமுடைந்திருக்கிறான்.

இவ்வளவு மார்க்குகள் வாங்கியிருந்தும் பொறி இயல் கல்லூரியில் இடம் இல்லை என்றால் பி.யு.சி. மார்க்குகளின் மதிப்பென்ன? மார்க்குகளுக்கு யாதொரு மதிப்பும் கிடையாதென்றால் பி. யு. சி. பரீட்சை என்று ஒன்று எதற்கு?

ஜாதி வேற்றுமைப் பிசாசும் பொசுங்க, வஞ்சப் பேய்களும் ஒழிந்து நம் நாட்டில் என்று திறமைக்கு மதிப்பு என்ற நிலை ஏற்படுமோ, அன்றுதான் தேசத்துக்கு விமோசனம்.

டால்மியாபுரம்
14–7–72 சி. ஆர். திருவேங்கடத்தான்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



பினெல்லா ஸ்டார்டஸ்ட் டால்க்கின் சுகந்தக்
கிருகிருப்பு நாளமுழுக்க நிலைத்து நிற்கிறது நீங்கள்
விலையுயர்ந்த செண்ட் பூசியுள்ளீர்களோ
எனப் பிறரை மயங்க வைக்கிறது ஆம்.
பினெல்லா மேனியிலிருந்தால், அதற்கோ
செண்டோ பூச அவசியமேயில்லை' அந்த
அளவு சொகுசான, சோபித சுகந்தம்
அளிக்கும் ஒரே டால்க—பினெல்லா



பினெல்லா
ஸ்டார்டஸ்ட் டால்க்

CBIT-1 TAM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)